# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2010
ரூ. 7.00



அணு உலை விபத்து இழப்பீடு மசோதா:

# அமெரிக்க இலாபவெறிக்கு இந்திய மக்கள் பலிகிடா!

# மோசடி தொழில் நிறுவனத்தின் அட்டூழியத்துக்கு எதிராக

# தொழிலாளி வர்க்கத்தின் அதிரடி போராட்டம்!

ஓசூரில் இயங்கிவரும் டெட்ரா வெக்ட்ரா மோட்டார்ஸ் லிமிடெட் எனும் நிறுவனம், ஆண்டுதோறும் வரி ஏய்ப்பு செய்யவும் நிரந்தரத் தொழிலாளர்களை ஒழித்துக் கட்டவும் ஆலையின் பெயரை மாற்றிக் கொள்வதை உத்தியாகக் கொண்டுள்ளது. இந்த ஆலையில் வேலை செய்த 62 தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்க, கடந்த செப்டம்பர் 2008-இல் வெக்ட்ரா அட்வான்சுடு இஞ்சினியரிங் என்ற போலியான பெயரில் சட்டவிரோதமாக ஒரு கம்பெனியை ஆரம்பித்து, அங்கே 47 தொழிலாளர்களை நயவஞ்சகமாக இடமாறுதல் செய்தது. விரைவில் ரஷ்ய கூட்டுடன் கமாஸ் வெக்ட்ரா என்ற பெயரில் கம்பெனியின் பெயரை மாற்றவிருப்பதாகவும், அதில் அனைவருக்கும் வேலை தருவதாகவும் கூறி தொழிலாளர்களை ஏய்த்தது.

பின்னர், டெட்ரா-வெக்ட்ரா என்ற தனது நிறுவனத்தின் பெயரை, கமாஸ் வெக்ட்ரா லிமிடெட் என்று பெயர் மாற்றம் செய்து, புதிதாக ஆளெடுத்து நடத்தி வருகிறது. ஏற்கெனவே வாக்களித்தபடி, புதிய ஆலையில் வேலை கொடுக்க மறுப்பதையும், பழைய ஆலை ஒரு சட்டபூர்வ ஆலையே அல்ல என்பதையும் அறிந்த தொழிலாளர்கள், நிர்வாகத்தை முற்றுகையிட்டனர். ஆலை நிர்வாகம் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வந்ததால், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கடந்த ஜனவரியில் பு.ஜ.தொ.மு.வில் இணைந்து, தொழிற்சங்கக் கிளையைத் தொடங்கினர்.

வட்டாட்சியர் அலுவலகம் அருகே, பு.ஜ.தொ.மு. தலைமையில் கமாஸ் வெக்ட்ரா ஆலைத் தொழிலாளர்கள் தமது குடும்பத்தாரோடு நடத்திய ஆர்ப்பாட்டம்.




சங்கம் தொடங்கப்பட்டதும், அதன் நிர்வாகிகள் உள்ளிட்ட 14 பேரை டெல்லியில் உள்ள நொய்டா கிளைக்கு இடமாற்றம் செய்து, ஆலை நிர்வாகம் பழிவாங்கியது. ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை நிர்வாகிகளாக நியமித்து தொழிலாளர்களை ஒடுக்கும் டெல்லிக் கிளையில், இத்தொழிலாளர் அங்கேயும் போராட்டத்தைத் தொடர்ந்ததால், அவர்களை நாட்டின் எல்லையோர பகுதிகளில் இராணுவ வண்டிகளைப் பழுதுபார்க்கும் வேலைக்குத் தள்ளி நிர்ப்பந்தித்தது. இதனை எதிர்த்து டெல்லியிலிருந்து அத்தொழிலாளர்கள் ஓசூர் திரும்பியதும், அனைத்து தொழிலாளர்களுக்கும் கமாஸ் ஆலையில் வேலை தரக் கோரி கடந்த மார்ச் 12-ஆம் தேதியிலிருந்து தொழிலாளர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

இதற்கிடையில், தொழிலாளர்துறை ஆய்வாளர், வெக்ட்ரா அட்வான்சுடு இஞ்சினியரிங் என்ற கம்பெனி சட்டவிரோதமானது என்றும், கமாஸ் வெக்ட்ரா என்ற பெயரிலுள்ள புதிய ஆலை மட்டுமே சட்டர்வமானதென்றும், இந்த ஆலையின் 62 தொழிலாளர்களும் கமாஸ் வெக்ட்ரா நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றும் அறிவித்தார். அதைத் தொடர்ந்து, பேச்சுவார்த்தைக்கு வந்த ஆலை நிர்வாகிகளான எத்திராஜுலு, பாபு ஆகியோர், தாங்கள் மோசடியாக ஆலை நடத்தியது உண்மைதான் என்றும், இம்மோசடி காரணமாக கமாஸ் ஆலையில் 62

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

மோசடி ஆலை நிர்வாகி பாபுவின் வீட்டின் முன்பாக,
தொழிலாளர் குடும்பத்தின் பெண்கள் துடப்பம்- செருப்புடன் நடத்திய ஆவேசமான ஆர்ப்பாட்டம்





# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 6
ஏப்ரல் 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


அணு உலை விபத்து இழப்பீடு மசோதா:

# அமெரிக்காவின் இலாபவெறிக்கு இந்திய மக்கள் பலிகிடா!

போபால் யூனியன் கார்பைடு ஆலை ''விபத்தை'' இந்திய மக்களும், உக்ரைனின் செர்னோபில் அணுஉலை விபத்தை உலக மக்களும் மறந்து விடக் கூடாதவை. ஒவ்வொன்றும் ஐந்தாயிரம் மக்களைக் கொன்றதோடு, பல ஆயிரம் பேரை ஊனமுற்றோராக்கி, பிறக்கும் குழந்தைகளையும் தலைமுறை தலைமுறையாக ஊனமுறச் செய்து விட்டன. செர்னோபில் விபத்துக்கு அப்போது அங்கு இல்லாத கம்யூனிச அரசைக் காரணமாக்கிய அமெரிக்க ஏகாதிபத்திய ஏகபோகங்கள், போபால் பேரழிவுக்கு நட்ட ஈடும் கிரிமினல் குற்றத்துக்குத் தண்டனையும் இல்லாமல், பாசிச காங்கிரசு - இராஜீவ் கும்பலின் உடந்தையோடு நழுவிக் கொண்டன. இதிலிருந்து பாடங்கற்றுக் கொண்டு இந்த நாட்டு மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதம் செய்யும் நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதில், முழுக்க முழுக்க இலாபவெறியோடு அலையும் அமெரிக்க அணுசக்தி கம்பெனிகளுக்கு ஊழியஞ் செய்யும் வகையில் இந்திய அரசு செயல்படுகிறது.

ரஷ்யா, பிரான்சு போன்ற நாடுகளிடமிருந்து கடும் நிபந்தனைகள் இல்லாமல், ஒப்பீடுரீதியில் குறைந்த விலையில் அணுஉலைகளும் அணுசக்தி கச்சாப் பொருட்களும் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றபோதும் கடும் நிபந்தனைகளோடு, கூடுதலான விலையும் கொடுத்து அவைகளை அமெரிக்காவிடமிருந்து வாங்குவதற்குப் பேரம் பேசி முடித்துள்ளது, சோனியா - மன்மோகன் கும்பல். தீவிர எதிர்ப்பிருந்தும் ஆட்சிக்கே அச்சுறுத்தலாக இருந்தும் அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவது என்ற பிடிவாதத்தோடு முதல் தவணையாக 60,000 கோடி ரூபாய்க்கு அணு உலைகளை அமெரிக்க ஏகாதிபத்திய ஏகபோகங்களிடமிருந்து வாங்கவுள்ளது. அதற்கு முன்பாக, அணுஉலை விபத்துக்கான இழப்பீடு குறித்த துரோகத்தனமான, நயவஞ்சகத்தனமான சட்டம் ஒன்றை நிறைவேற்றி, தமக்கு உத்திரவாதமளிக்குமாறு அமெரிக்க கம்பெனிகளும் அரசை நிர்பந்திக்கின்றன.

அமெரிக்க கம்பெனிகளிடமிருந்து அணுஉலைகளை வாங்கி இயக்கும் இந்திய அரசும் தனியார் தரகு முதலாளிகளும்தான் அந்த அணுஉலை விபத்துக்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும். அவர்களும்கூட விபத்தில் ஏற்படும் பாதிப்பு என்னவாக இருந்தாலும் அதிகபட்சம் போனால் 500 கோடி ரூபாய்க்குத்தான் இழப்பீடு தர முடியும். பாரிய பாதிப்பாக இருந்தால், மேலும் ஒரு 1500 கோடி ரூபாய் இந்திய அரசு நட்டஈடு கொடுக்கும். சர்வதேச அணுசக்தி ஆணையத்துடன் ஒப்பந்தமிடுவதால் மேலும் ஒரு 300 கோடி ரூபாய், ஆக மொத்தம் 2,300 கோடி ரூபாய் தான் கோர முடியும். இச்சட்டத்தின் மிக முக்கியமான கூறு, வாங்கப்படும் அணு உலைகளின் தரம், பாதுகாப்பு, உத்திரவாதம் ஆகியவற்றுக்கு அதை வடிவமைப்பவர்களும் விற்பவர்களும் பொறுப்பேற்க மாட்டார்கள். அதனால் பாதிக்கப்படுபவர்கள் நேரடியாக அமெரிக்க நீதிமன்றங்களுக்குப் போக முடியாது; இங்குள்ள இயக்குநர்கள் அமெரிக்கக் கம்பெனிகளுடன் பேரம்பேசி பெற்றுத் தரும் நட்டஈட்டைப் பெற்றுக் கொண்டு வாய் மூடிக் கொள்ளவேண்டும்.

அமெரிக்கர்கள் அணுசக்தி அறிவியலில் கரை கண்டவர்கள்; விபத்தெல்லாம் நடக்காது என்று அக்கிரகாரத்து ஆசாமிகள் கூறுகிறார்கள். ஆனால், உலகில் இதுவரை நடந்த மொத்த அணுஉலை விபத்துக்களில் 71 சதவீதமானவை அமெரிக்காவில்தான் நடந்தன. ஏற்கெனவே அமெரிக்கா உட்பட மேலை நாடுகளில் இருந்து நச்சு இரசாயனங்களும், அறுவைச் சிகிச்சையில் வெட்டியெறியப்பட்ட உறுப்புகள் உள்ளிட்ட மருத்துவக் கழிவுகளும், மின்னணு - அணுக் கழிவுகளும் இந்த நாட்டில் இரகசியமாகக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது, பல ஆண்டுகளாக இயக்கப்படாமல் துருப்பிடித்துப் போன அணு உலைகளை விலைக்கு வாங்கி வந்து இங்கே கொட்டப் போகிறது, மன்மோகன் - சோனியா கும்பல். அதனால் ஏற்படும் சாவுக்கும் இழப்பீடு கோர முடியாதவாறு, ஒரு துரோகத்தனமான சட்டம்வேறு கொண்டு வரப்படுகிறது.

### பட்ஜெட்:

# வலுத்தவனுக்கு மானியம் உழைப்பவனுக்கு வரிச்சுமை

**பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில், முதலாளிகளுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகள் நியாயப்படுத்தப்படுகின்றன.**

‘‘இந்த பட்ஜெட் விவசாயிகள், தொழில் முனைவோர், முதலீட்டாளர்களுக்கு உரியது’’ என 2010-11-ஆம் ஆண்டுக்கான மைய அரசின் வரவு-செலவு அறிக்கை பற்றி நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி குறிப்பிட்டுள்ளார். இதில் ஒரு பாதி உண்மை; இன்னொரு பாதியோ திரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

விவசாயிகள் என அவர் குறிப்பிடுவது நமக்குத் தெரிந்த குப்பன், ப்பன் போன்ற சிறு, நடுத்தர விவசாயிகளையோ, விவசாயக் கூலித் தொழிலாளர்களையோ குறிக்கவில்லை. ஏற்றுமதியைக் குறிவைத்து விவசாயத்தில் குதித்துள்ள புதுப் பணக்கார விவசாயிகளையும்; ஒப்பந்த விவசாயத்திலும், விவசாய விளைபொருட்கள் கொள்முதலிலும் இறங்கியுள்ள ஐ.டி.சி., ரிலையன்ஸ், பிர்லா, பெப்சி போன்ற முதலாளித்துவ நிறுவனங்களையும்தான் குறிப்பிடுகிறார்.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த பட்ஜெட்டில் நான்கு அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் 3.75 இலட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும் என்பது அத்திட்டத்திலுள்ள கவர்ச்சிகரமான அம்சமாகும். 2000-ஆம் ஆண்டு தொடங்கி 2006-ஆம் ஆண்டு முடிய பொதுத்துறை வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள விவசாயக் கடன் பற்றி நடத்தப்பட்டுள்ள ஆய்வில், ‘‘25,000 ரூபாய்க்கும் குறைவாக வழங்கப்படும் கடன்களின் எண்ணிக்கை இந்த ஆறு ஆண்டுகளில் சரி பாதியாகக் குறைந்துவிட்டதாகவும், அதேபொழுதில், தனிப்பட்ட ‘விவசாயிகளுக்கு’ 10 கோடி, 20 கோடி என வழங்கப்படும் கடன்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவதாகவும்’’ தெரிய வந்துள்ளது. இந்த ஆய்வறிக்கையை அளவுகோலாகக் கொண்டு பார்த்தால், இந்த 3.75 இலட்சம் கோடி ரூபாய் கடனைச் ருட்டப் போகும் ‘விவசாயிகள்’ யாராக இருப்பார்கள் என்பது எளிதாக விளங்கிவிடும்.

விவசாய விளைபொருட்கள் அழுகிப் பாழாவதைக் குறைக்க வேண்டும் என்றால், அரசே கிராமப்புறங்களில் குளிர்பதனக் கிடங்குகளைக் கட்டித் தர வேண்டும். ஆனால், குளிர்பதன கிடங்குகளைக் கட்டிக் கொள்ளக் கடன் தரப் போவதாக பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறார், நிதியமைச்சர். வீடு தேடி வந்து கொடுத்தால்கூட இந்தக் கடனை சாதாரண விவசாயிகள் வாங்கிக் கொள்வார்களா? காய்கறிகளையும் பழங்களையும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்துவரும் ரிலையன்ஸ், கோத்ரெஜ், ஐ.டி.சி., ஹெரிடெஜ், நீல்கிரிஸ் முதலாளிகள்தான் விவசாயிகள் என்ற போர்வையில் இந்தக் கடனை அனுபவிப்பார்கள்.

இது மட்டுமின்றி, விவசாய விளைபொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் பொருத்தப்படும் குளிர்பதன இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு முழுச் ங்க வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகையால் பலனடையப் போவது அம்பானியா? அல்லது வாங்கிய கந்துவட்டிக் கடனை அடைக்க முடியாமல் தூக்குக் கயிறைத் தேடிக் கொண்டிருக்கும் கிராமத்து விவசாயியா?

விலைவாசி உயர்வால் ஏழைகள் உணவுத் தேவையைச் ருக்கிக் கொள்ளும் நிலையில், பஞ்சாபிலோ அரசின் திறந்தவெளிக் கிடங்குகளில் சேமிக்கப்பட்டுள்ள கோதுமை, தண்ணீரில் ஊறி பாழாகி வருகிறது.



உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போவதாகவும் பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறார், நிதியமைச்சர். நெல்லையும் கோதுமையையும் பயிரிடும் விவசாயி இனி, அதை மாவாக்கி, இட்லியாக்கி, ரொட்டியாக்கி விற்க வேண்டும் என நிதியமைச்சர் எதிர்பார்க்கிறாரா? அப்படியென்றால், கரும்பு விவசாயி இனி சாராயம்தான் காய்ச்ச வேண்டும். இந்த அறிவிப்பால் விவசாயிகளைவிட, உருளைக்கிழங்கு சிப்ஸ், குர்குரே போன்ற நொறுக்குத் தீனிகளைத் தயாரித்து விற்பனை செய்யும் முதலாளிகள்தான் மகிழ்ச்சி கொள்வார்கள்.

விவசாயிகளை மட்டுமல்ல, பிற அடித்தட்டு மக்களை வாட்டும் பிரச்சினைகள் பற்றியும் இந்த

பட்ஜெட் கண்டு கொள்ளவில்லை. மாறாக, இலட்சக்கணக்கில் சம்பாதிக்கும் 'மேன்மக்கள்', தமக்குப் பிடித்தமான கோக்கையும், பெப்சியையும், பர்கரையும், பிற ஆடம்பர நுகர்பொருட்களையும் வாங்க முடியாமல் திண்டாடி நின்றுவிடக் கூடாதே எனக் கரிசனம் காட்டியிருக்கிறார், பிரணாப் முகர்ஜி.

வருடத்திற்கு மூன்று இலட்ச ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் நடுத்தர/மேல்தட்டு வர்க்கத்தினர் கட்டி வரும் வருமான வரியில் சலுகைகளை அளித்து, அவர்களின் 'பணத் திண்டாட்டத்தை'த் தீர்த்து வைத்திருக்கிறார், நிதியமைச்சர். இதன்படி வருடத்திற்கு 5 இலட்ச ரூபாய் வரை சம்பாதிப்பவர்களுக்கு 20,600 ரூபாய் வரை வரிச் சலுகை கிடைக்கும்; 8 இலட்ச ரூபாய், அதற்கு மேல் சம்பாதிப்பவர்களுக்கு 51,500 ரூபாய் வரை வரிச் சலுகை கிடைக்கும். இப்படியாக, இந்த பட்ஜெட்டில் வருமான வரி கட்டும் கனவான்களுக்கு 26,000 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டு, அந்தப் பணம் அவர்களின் கோட்டு பாக்கெட்டுகளில் திணிக்கப்பட்டுள்ளது. ''அவர்கள் இந்தப் பணத்தைக் கொண்டு தமக்குத் தேவையான பொருட்களை வாங்குவார்கள்; பங்குச் சந்தையில் முதலீடு செய்வார்கள்; அதன் மூலம் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சியடையும்'' எனக் கூறி, இந்தச் சலுகை நியாயப்படுத்தப்படுகிறது.



சென்னையில் வருமான வரிக்கணக்கைத் தாக்கல் செய்யும் மன்மோகன் சிங்கின் செல்லப் பிள்ளைகள். (கோப்புப் படம்)

**வருமான வரிச் சலுகைகள் மூலம் மேல்தட்டு மக்களின் நுகர்விற்காக 26,000 கோடி ரூபாயை மானியமாகத் தூக்கிக் கொடுத்திருக்கும் மைய அர , அடித்தட்டு மக்களை விலைவாசி உயர்விலிருந்து பாதுகாக்க இந்த பட்ஜெட்டில் அளித்திருக்கும் சலுகை – உணவு மானிய வெட்டு!**

மேல்தட்டு மக்களின் நுகர்விற்காக 26,000 கோடி ரூபாயை மானியமாகத் தூக்கிக் கொடுத்திருக்கும் மைய அர , அடித்தட்டு மக்களை விலைவாசி உயர்விலிருந்து பாதுகாக்க இந்த பட்ஜெட்டில் அளித்திருக்கும் சலுகை என்ன தெரியுமா? உணவு மானிய வெட்டு!

உணவுப் பொருட்களின் விலைகள் விஷம் போல ஏறுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், குறைந்தபட்சம் பொது விநியோகத் திட்டத்தைப் பலப்படுத்த வேண்டும். அதாவது, அரிசி, கோதுமை மட்டுமின்றி, மற்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் ரேஷன் கடைகளின் மூலம் வழங்குவதோடு, அவற்றின் அளவையும் அதிகரிக்க வேண்டும். இதைச் செய்வதற்கு பட்ஜெட்டில் உணவு மானியத்தை அதிகரித்திருக்க வேண்டும். ஆனால், நிதியமைச்சரோ, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு உணவு மானியத்திற்கு 500 கோடி ரூபாய் குறைவாகத்தான் நிதி ஒதுக்கியிருக்கிறார். மேலும், தனது கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்களை அதிக அளவில் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்ய மறுத்திருப்பதோடு, ரேஷன் கடைகளின் மூலம் வழங்கப்படும் அரிசி, கோதுமையின் விலைகளை அதிகரிக்கவும் திட்டம் போட்டுவருகிறது, மைய அர .

மன்மோகன்-சோனியா கும்பலின் வக்கிரத்திற்கு இன்னொரு உதாரணத்தையும் குறிப்பிடலாம். பெட்ரோல்-டீசல் விலைகளையும், இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீது விதிக்கப்படும் கலால் வரிகளையும் உயர்த்தியிருப்பதன் மூலம் ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய்க்கு மேல் மக்களிடமிருந்து பறித்துக் கொண்டுள்ளது, அக்கும்பல். வருமான வரி கட்டும் கனவான்களுக்கு 26,000 கோடி ரூபாயை மானியமாக வாரிக் கொடுக்காமல் இருந்திருந்தால், பெட்ரோல்-டீசல் விலையை உயர்த்த வேண்டிய அவசியமே இருந்திருக்காது. ஆனால், மன்மோகன் சிங் கும்பலோ இந்த உயர்வின் மூலம் இரண்டு மாங்காய்களை வீழ்த்திவிட்டது. ஒருபுறம், அவர்களுக்கு மானியம் கொடுத்து அவர்களின் மனங்களைக் குளிரவைத்துள்ள மைய அர , அதனால் தனக்கு ஏற்படும் வருமான இழப்பை, பெட்ரோல்-டீசல் விலை உயர்வைக் கோடிக்கணக்கான மக்களின் மீது மத்தி ஈடுகட்டிவிட்டது. இது மட்டுமின்றி, இந்த பட்ஜெட்டில் 46,000 கோடி ரூபாய் அளவிற்கு மறைமுக வரிகளும் மக்கள் மீது மத்தப்பட்டுள்ளன.

**ஏழை நாடான இந்தியாவின் தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும் அவர்களது எஜமானர்களான ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு நாளும் 1,369 கோடி ரூபாய் மானியமாக வாரிக் கொடுக்கப்படுகிறது.**

தனிப்பட்ட கனவான்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வருமான வரிச் சலுகை ஒருபுறமிருக்க, தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும், ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகைகளைக் கேட்டால், நாம் அதிர்ச்சியில் உறைந்தே போய்விடுவோம். இந்த பட்ஜெட்டில் முதலாளித்துவ நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் கம்பெனி வரி உள்ளிட்ட நேரடி வரி விதிப்புகளில் அளிக்கப்பட்டிருக்கும் சலுகைகள் மூலம் 80,000 கோடி ரூபாய் முதலாளிகளுக்கு மானியமாக வாரிக் கொடுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு அளிக்கப்பட்ட சலுகையைவிட 14,000 கோடி ரூபாய் அதிகம்; அதற்கு முந்தைய ஆண்டு அளிக்கப்பட்ட சலுகையைவிட 18,000 கோடி ரூபாய் அதிகம். அதாவது, கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள நேரடி வரிச் சலுகை மட்டும் 2,08,000 கோடி ரூபாய்.

மேலும், இந்த பட்ஜெட்டில் கலால் வரி, ங்க வரி விதிப்புகளில் அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் மூலம் முதலாளித்துவ நிறுவனங்களுக்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் இலாபம் மட்டும் 4,19,786 கோடி ரூபாய். இதோடு முதலாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள நேரடி வரிச் சலுகையையும் சேர்த்துக் கணக்கிட்டால், இந்த ஆண்டு பட்ஜெட்டின் மூலம் மட்டும் முதலாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள மானியம் 4,99,786 கோடி ரூபாய். நாளொன்றுக்கு வெறும் 20 ரூபாய் கூலியைப் பெற்று வாழ்க்கையை ஓட்டி வரும் கோடிக்கணக்கான மக்கள் வாழும் நாட்டில், தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும் அவர்களது எஜமானர்களான பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு நாளும் 1,369 கோடி ரூபாய் மானியமாக வாரிக் கொடுக்கப்படுகிறது. இதைவிட அருவெறுக்கத்தக்க வக்கிரம் வேறெதுவும் இருக்க முடியுமா?

அதேசமயம், கல்வி, மருத்துவ வசதி, போக்குவரத்து போன்ற பல்வேறு மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதில் இந்தளவிற்குத் தாராளமாக நடந்து கொள்ளவில்லை, பிரணாப் முகர்ஜி. இத்திட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஏன் ஒதுக்கவில்லை எனக் கேட்டால், பற்றாக்குறை பெருத்துவிடும் என பொருளாதார நிபுணர்களும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் கூப்பாடு போடுகின்றன. தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும், மேல்தட்டு வர்க்கத்துக்கும் 5 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் மானியமாக வழங்குவதைக் கண்டு கொள்ள மறுக்கும் இக்கும்பல், உணவிற்கும், பெட்ரோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும் வழங்கும் 'மானியத்தை' நிறுத்தச் சொல்லுகிறது. இந்த ஓர வஞ்சனையைவிட வேறென்ன வக்கிரம் இருந்துவிட முடியும்?

இந்தப் பணச் சலுகைகள் ஒருபுறமிருக்க, 40,000 கோடி ரூபாய் பெறுமான பொதுத்துறை பங்குகளைத் தனியாருக்கு விற்பதற்கும், நிதி நிறுவனங்கள் என்ற பெயரில் பிளேடு கம்பெனிகளை நடத்தி வரும் முதலாளிகள் வர்த்தக வங்கிகளைத் திறந்துகொள்ளவும் பட்ஜெட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் நெருங்கிவிட்டாலே, அது ஏதோ நாட்டின் தலையெழுத்தையே மாற்றிவிடும் மந்திரக்கோல் போல, அது பற்றி வீணான பரபரப்பையும் கவர்ச்சியையும் முதலாளித்துவ ஊடகங்களும் நிபுணர்களும் வலிந்து உருவாக்கி வருகிறார்கள். போலி கம்யூனிஸ்டுகளும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர்.

நாட்டின் வளங்களையும், வருமானத்தையும் முதலாளித்துவக் கும்பலுக்கு மடை மாற்றிவிடும் சட்டபூர்வ ஏற்பாடுதான் பட்ஜெட். தனியார்மயம் -தாராளமயம் திணிக்கப்பட்ட பிறகு, கடந்த 19 ஆண்டுகளில் போடப்பட்டுள்ள பட்ஜெட்டுகளை ஒரு புரட்டு புரட்டினாலே இந்த உண்மை பச்சையாகத் தெரியும். சமூக நலத் திட்டங்களுக்குக் கூடுதலாத நிதி ஒதுக்குவதால் நரி பரியாகிவிடாது. அப்படிபட்ட கவர்ச்சிகரமான பட்ஜெட்டை பிரணாப் முகர்ஜி ஏன் தயாரிக்கவில்லை என்பதுதான் போலி கம்யூனிஸ்டுகளின் அங்கலாய்ப்பு!

● திப்பு

மானிய விலையில் டீசல் வழங்கக் கோரி மீனவர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தால், தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டினத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள படகுகள். (கோப்புப் படம்)



# பழங்குடியினத் தலைவர் லால் மோகன் டுடூ படுகொலை:

# அரசு பயங்கரவாத அட்டூழியம்!

மே.வங்கத்தின் லால்கார் வட்டாரத்தைச் சேர்ந்த பழங்குடியின விவசாயியும், போலீ அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டியின் தலைவருமான லால் மோகன் டுடு, கடந்த பிப்ரவரி 22-ஆம் தேதியன்று அவரது வீட்டிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு, அருகிலுள்ள வயல்வெளியில் கோரமாகச் ட்டுக் கொல்லப் பட்டுள்ளார். அவருடன், தம்பதிகளான யுவராஜ், சித்ரா முர்மூ ஆகிய இரு பழங்குடியினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

லால்கார் வட்டாரத்தின் கண்டபாஹிரியிலுள்ள மத்திய ரிசர்வ் போலீ ப்படை முகாமை மாவோயிஸ்டுகள் தாக்கியதாகவும், தற்காப்புக்காக போலீசார் ட்டதில் அவர் மாண்டுவிட்டதாகவும் வழக்கம்போலவே கதையளக்கிறது, போலீ . ''அவர் ஒரு மாவோயிஸ்டு பயங்கரவாதி, அவர் அப்பகுதியெங்கும் பயங்கரவாதத்தை விரிவுபடுத்தினார்'' என்கிறது போலீ .

ஆனால், லால்மோகன் டுடு மாவோயிஸ்டு கட்சியைச் சேர்ந்தவரோ, கம்யூனிச சித்தாந்தத்தைக் கொண்டவரோ, கொரில்லாப் போர்க் கலையில் தேர்ச்சி பெற்ற தளபதியோ அல்ல. லால்காருக்கு அருகில் உள்ள நார்சா கிராமத்தைச் சேர்ந்த விவசாயிதான் டுடு. அவர் ஒரு சேவை மனப்பான்மை கொண்ட, மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சாதாரணப் பழங்குடியின விவசாயி. அதனால்தான் போலீ அடக்குமுறைக்கு எதிராக லால்காரில் பழங்குடியின மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டபோது, தாலிபூர் சவுக்கில் நடந்த பழங்குடியினர் கூட்டத்தில் அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அர அதிகாரிகளுடனும் தேர்தல் கமிசன் அதிகாரிகளுடனும் நடந்த பேச் வார்த்தைகளில் அவர் முக்கிய பங்காற்றினார். அப்போதெல்லாம் அவர் மாவோயிஸ்டு என்று குற்றம் சாட்டப்படவில்லை. பயங்கரவாதி என்று தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்படவுமில்லை.

லால்காரில் மத்திய-மாநில அர களின் படைகள் குவிக்கப்பட்டு அடக்குமுறை ஏவப்பட்டதும், டுடுவும் அவரது கிராமத்திலுள்ள ஆண்களும் தலைமறைவாகினர். பத்தாம் வகுப்பு படித்துவரும் தனது மகளின் பொதுத்தேர்வுகள் பிப்ரவரி 23-ஆம் தேதியன்று தொடங்குவதால், மகளைச் சந்தித்து வாழ்த்து கூறுவதற்காக பிப்ரவரி 22-ஆம் தேதியன்று இரவில் அவர் வீட்டிற்கு வந்தார். இதை மோப்பம் பிடித்த போலீ , நள்ளிரவில் வீட்டை முற்றுகையிட்டு அவரையும் மற்றும் இருவரையும் கடத்திச் சென்று ட்டுக் கொன்றுள்ளது.

மத்திய ரிசர்வ் போலீ ப் படை முகாமுக்கு வெகு அருகிலுள்ள கோயிலில் அன்று திருவிழா நடந்துள்ளது. கிராம மக்கள் பலர் அந்தத் திருவிழாவுக்குச் சென்றுவிட்டு பின்னிரவில்தான் திரும்பியுள்ளனர். அங்கு மாவோயிஸ்டு தாக்குதல் நடந்ததற்கான எவ்வித அடையாளமும் இல்லை. முகாமிலிருந்த போலீசாரும் அப்படி எந்த தாக்குதலும் நடக்கவில்லை என்றே கூறியுள்ளனர். ஆனாலும் இது மாவோயிஸ்டு தாக்குதல்தான் என்றும்,மோதலில்தான் டுடு கொல்லப்பட்டார் என்றும் கூசாமல் புளுகி வருகின்றன மைய, மாநில அர கள்.

ட்டுக் கொல்லப்பட்ட இடத்திலிருந்து வயல் வெளியில் அவர் கிடத்தப்பட்ட இடம் வரை இரத்தம் சிந்தியிருப்பதையும், வயல்வெளியில் போலீசாரின் பூட்களால் பயிர்கள் ந க்கப்பட்டிருப்பதையும் உள்ளூர் தொலைக்காட்சிகளும் பத்திரிகைகளும் படம் பிடித்து இக்கோரக் கொலையை வெளிக்கொணர்ந்துள்ளன. ''மே.வங்கத்தில் கண்டதும் ட உத்தரவு - நாமெல்லோரும் இலக்குகள்!'' என்ற தலைப்பில் சிறப்புக் கட்டுரை வெளியிட்டு, இலண்டனிலிருந்து வெளிவரும் இண்டிபென்டென்ட் நாளேடு, இந்தக் கொலைவெறியாட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளது.



துயரத்தில் தத்தளிக்கும் டுடூ குடும்பம்: (உள்ளே) 'மோதல்' என்ற பெயரில் ட்டுக் கொல்லப்பட்ட லால்கார் மக்களின் தலைவர் லால்மோகன் டுடூ.

காட்டுவேட்டை எனும் உள்நாட்டுப் போரைத் தொடுத்துள்ள அர , மாவோயிஸ்டுகளைக் கண்டதும் டுமாறு உத்தரவிட்டுள்ளது. ஆனால் யார் மாவோயிஸ்டு என்பதுதான் கேள்வி. போராடும் அனைவரும் மாவோயிஸ்டுகளாகச் சந்தேகிக்கப்படுகிறார்கள். மக்கள் திரள் போராட்டத் தலைவரான டுடூவின் கொலை இதை நிரூபித்துக் காட்டுகிறது.

● பாலன்

# சாதி கௌரவக் கொலைக்கு உச்சநீதி மன்றத்தின் வக்காலத்து

## சமூக எதார்த்தம் எனக் கூறி, ஆதிக்க சாதிவெறியை நியாயப்படுத்துகிறது, உச்சநீதி மன்றம்.

ஆதிக்க சாதிவெறியர்களின் மனம் குளிரும்படி ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது, உச்ச (அ)நீதிமன்றம். ஷ்மா திவாரி என்ற இளம் பெண்ணின் கணவர், மாமனார் உள்ளிட்ட நான்கு பேர் பார்ப்பன சாதி கௌரவத்திற்காகக் கொல்லப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, அநீதியானது மட்டுமல்ல; தீண்டாமைக்கும், ஆதிக்க சாதித் திமிருக்கும் வக்காலத்து வாங்கக் கூடியது; சமத்துவத்திற்கும், பெண்ணுரிமைக்கும் எதிரானது.

உ.பி. மாநிலத்தில் கட்டுக்கோப்பான பிராமணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஷ்மா திவாரி, மும்பையில் தங்கிப் படித்து வந்தபொழுது, ஈழவச் சாதியைச் சேர்ந்த (கேரள மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட சாதிப் பிரிவுகளுள் ஒன்று) பிரபு கிருஷ்ணன் என்ற இளைஞரைக் காதலித்தார். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு தனது குடும்பத்தின் கண்ணீர், அச்சுறுத்தல் உள்ளிட்ட அனைத்துத் தடைகளையும் மீறி, பிரபுவைத் திருமணம் செய்து கொண்டார், ஷ்மா. சிறு வயது முதற்கொண்டே முற்போக்கான, தந்திரமான எண்ணங்களோடு வளர்ந்து வந்த ஷ்மா, சாதிக் கட்டுமானத்தை மீறித் திருமணம் செய்து கொண்டதை, தனது விருப்பம், உரிமை என்பதோடு மட்டுமின்றி, அதனை நியாயமானதாகவும் இயற்கையானதாகவும் கருதினார்.

சாதி கௌரவத்திற்காகத் தனது காதல் கணவனைக் கொலை செய்த குற்றவாளிகளுக்குக் கருணை காட்டிய உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து வரும் ஷ்மா திவாரி.



ஆனால், ஷ்மாவின் குடும்பத்தினரோ, இதற்குப் பழி தீர்த்துக் கொள்ளும் சதித் திட்டத்தைத் தீட்டி வந்தனர். மே 17, 2004 அன்று, பிரபுவின் வீட்டிற்குள் திடீரெனப் புகுந்த ஷ்மாவின் அண்ணன் திலீப் திவாரியும், அவனது இரு நண்பர்களும் ஷ்மாவின் கணவர் பிரபு, அவரது மாமனார் கிருஷ்ணன் நோச்சில், மாமியார் இந்திரா கிருஷ்ணன், பிரபுவின் தங்கை தீபா கிருஷ்ணன், 13 வயதான பிரபுவின் உறவுக்கார சிறுவன் பிஜித் பாலன், அச்சிறுவனின் நண்பன் அபய் ராஜ் ஆகியோ

> ‘‘திலீப் திவாரி, தவறானது என்றாலும், தனது சாதிய உணர்வுகளுக்குப் பலியாகிவிட்டதால், மரண தண்டனை அளிப்பது நியாயமாகப்படவில்லை’’ எனத் தீர்ப்பு எழுதிய நீதிபதிகளின் பேனாவில் இருந்தது மையா? சாதிப் பாசமா?

ரைக் கொலைசெய்யும் வெறியோடு மாறிமாறிக் கத்தியால் குத்தினர். இத்தாக்குதலில் சம்பவ இடத்திலேயே கிருஷ்ணன் நோச்சில், பிஜித் பாலன், அபய் ராஜ் ஆகிய மூவரும் இறந்து போனார்கள். உயிருக்கு ஆபத்தான நிலையில் பிரபுவும், அவரது அம்மாவும், தங்கையும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், சிகிச்சைப் பலனளிக்காமல், தாக்குதல் நடந்த சில மணி நேரத்திற்குள்ளாகவே பிரபு இறந்து போக, மற்ற இருவரும் உயிர் பிழைத்தனர். அச்சமயத்தில் ஏழு மாதக் கர்ப்பிணியாக இருந்த ஷ்மா, சம்பவம் நடந்த நேரத்தில் தனது உறவினரைப் பார்க்க வெளியே சென்றிருந்ததால், மரணத்தின் வாயிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

தனது பெற்றோர் தன் மீதும், தனது கணவர் மீதும் தாக்குதல் தொடுக்கக் கூடும் என ஷ்மா, சம்பவம் நடப்பதற்கு முன்பே மும்பை போலீசிடம் புகார் அளித்திருந்தார். மும்பை போலீ அப்புகாரை உதாசீனப்படுத்தியதோடு மட்டுமின்றி, சம்பவம் நடந்த பிறகும்கூட உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவில்லை.

சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த மகளிர் மற்றும் இளைஞர் அமைப்புகளும், மும்பையில் வாழும் கேரள ஈழவ மக்களும் இணைந்து போராடிய பிறகு, போலீசின் மெத்தனம் குறித்து, அப்பொழுது மகாராஷ்டிரா மாநில முதல்வராக இருந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஷில் குமார் ஷிண்டேயிடம் நேரடியாகப் புகார் அளித்த பிறகுதான், மும்பை போலீ முறையாக வழக்குப் பதிவு செய்து, குற்றவாளிகளைக் கைது செய்தது.

இவ்வழக்கை விசாரித்த விரைவு நீதிமன்றம் ஷ்மாவின் சகோதரன் திலீப் திவாரிக்கும் அவனது இரு நண்பர்களுக்கும் மரண தண்டனை அளித்தாலும், போதிய ஆதாரமில்லை என்று கூறி ஷ்மாவின் பெற்றோர்களை விடுதலை செய்துவிட்டது. விரைவு நீதிமன்றம் அளித்த மரண தண்டனை மும்பய் உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது.

இவ்வழக்கு மேல்முறையீட்டிற்காக உச்ச நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட பின், அதனை விசாரித்த பார்ப்பனரான வீ.எஸ்.சிர்புர்கர், மேல்சாதியைச் சேர்ந்த தீபக் வர்மா என்ற இரு நீதிபதிகள், அச்சாதிவெறி பிடித்த கொலைகாரர்களுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை, 25 ஆண்டு கால சிறை தண்டனையாகக் குறைத்துத் தீர்ப்பளித்தனர். அக்கொலைகாரர்களுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படவில்லை என்பதும் இங்கே கவனிக்கத்தக்கது. கைதிகளுக்கு வழங்கப்படும் நன்னடத்தை சலுகையினைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், இக்கொலைகாரர்கள் அடுத்த பத்து, பதினைந்து ஆண்டுகளுக்குள் விடுதலையடைந்துவிடக்கூடும். இந்நீதிபதிகள் இத்தண்டனைக் குறைப்பை ஏதோ கருணையின் அடிப்படையில் அறிவிக்கவில்லை. மாறாக, ஆதிக்க சாதிவெறியை மறைமுகமாக, நரியின் தந்திரத்தோடு நியாயப்படுத்தும் விதத்தில் இத்தண்டனைக் குறைப்பை அறிவித்திருக்கிறார்கள்.

''இந்த வழக்கில்..... இதுவொரு இரகசிய காதல் மற்றும் கலப்புத் திருமணம். சமூகம், இந்த உறவைத் தடுத்து நிறுத்தாத குற்றத்தை மூத்த சகோதரன் மேல்தான் மத்தும்.''

''அவன் (திலீப் திவாரி), தவறானது என்றாலும், தனது சாதிய உணர்வுகளுக்குப் பலியாகிவிட்டதால், மரண தண்டனை அளிப்பது நியாயமாகப்படவில்லை. சமூகத்தைப் பிடித்தாட்டும் சாதி-மத கட்டுக்கோப்பினை நியாயப்படுத்த முடியாதென்றாலும், அதுவொரு வெளிப்படையான எதார்த்தமாகவும் இருக்கிறது.'' - இவையெல்லாம் நீதிபதிகள் தீர்ப்பில் உதிர்த்திருக்கும் முத்துக்கள். அரியானா மாநிலத்தில் சாதிப் பஞ்சாயத்துக்களை நடத்தி சாதிக் கட்டுக்கோப்புகளைக் காப்பாற்றி வரும் நாட்டாமைகள், இனி இம்முத்துக்களை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இத்தீர்ப்பை அளவுகோலாகக் கொண்டால், ஆதிக்க சாதிவெறியோடு கொலை-பாலியல் வன்புணர்ச்சி போன்ற குற்றங்களைச் செய்யும் கிரிமினல்களுக்கு அதிகபட்ச தண்டனை அளிக்கவே முடியாது. ஏனென்றால், அக்குற்றவாளிகள் இனி தங்களின் மனதை ஆட்கொண்டுள்ள சாதி உணர்வை நீதிமன்றம் கணக்கில் கொள்ள வேண்டும் எனப் பச்சையாகவே கூறத் தொடங்குவார்கள்.

**கடுமையான தண்டனைகள் அளிப்பதன் மூலம் மட்டுமே, நக்சல் மற்றும் இ லாமியப் பயங்கரவாதிகளை ஒழிக்க முடியும் எனச் சாமியாடும் உச்சநீதி மன்றம், ஆதிக்க சாதிவெறி பயங்கரவாதிகளைத் தடவிக் கொடுத்துத் தண்டிக்க வேண்டும் எனக் கூறுவது என்ன வகை நியாயம்?**

ஆந்திராவைச் சேர்ந்த இரு தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்குத் தூக்கு தண்டனையை உறுதி செய்தபொழுது, அப்சல் குரு உள்ளிட்ட மு லீம் 'பயங்கரவாதிகளுக்கு' தூக்கு தண்டனையை உறுதி செய்தபொழுது, சமூக எதார்த்தத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாத உச்ச நீதிமன்றம், திலீப் திவாரி என்ற பார்ப்பன பயங்கரவாதிக்குத் தண்டனை தரும்பொழுது மட்டும் சமூக எதார்த்தத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும் என உபதேசிக்கிறது.

கடுமையான தண்டனைகள் அளிப்பதன் மூலம் மட்டுமே, நக்சல் பயங்கரவாதம், இ லாமியப் பயங்கரவாதம் போன்றவற்றை ஒழிக்க முடியும் எனச் சாமியாடும் உச்சநீதி மன்றம், ஆதிக்க சாதிவெறி பயங்கரவாதிகளைத் தட்டிக் கொடுத்தும், தடவிக் கொடுத்தும் தண்டிக்க வேண்டும் எனக் கூறுவது என்ன வகை நியாயம்? அவர்கள் வர்க்கம், அவர்கள் சாதி என வரும்பொழுது, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சட்ட விதிகளைத் தூர ஒதுக்கி வைத்துவிடுவார்கள் என்பதற்கு இந்த வழக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டு.

இந்தத் தண்டனை குறைப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறார், ஷ்மா திவாரி. கொல்லப்பட்டவர்கள் தனது கணவர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் என்ற யநல உணர்வின் அடிப்படையில் அவர் இந்தத் தண்டனை குறைப்பை எதிர்க்கவில்லை. ''ஆதிக்க சாதி உணர்வும், கீழ்சாதி வெறுப்பும் தன்னளவிலேயே குற்றமிக்கவை. சாதிக் கட்டுக்கோப்பை மீறித் திருமணம் செய்து கொள்ள முயலுபவர்களுக்கு இத்தண்டனை குறைப்பு எதிர்மறையான கருத்தையே ஏற்படுத்தக் கூடும். சமூக நலனைக் கருதியாவது, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட வேண்டும்'' எனக் குறிப்பிடுகிறார், அவர். உச்சிக்குடுமி மன்றத்தின் மீது சம்மட்டி அடியாக விழுந்திருக்கும் வார்த்தைகள் இவை.

● குப்பன்

# தரகு முதலாளித்துவ சேவையில் மோடியின் இந்துத்துவா ஆட்சி

## குஜராத்–மாகுவா பகுதியில் நடந்து வரும் விவசாயிகளின் போராட்டங்கள் மோடியின் “இந்து” முகமூடியைக் கிழித்துவிட்டன.

**நா**மெல்லோரும் இந்துக்கள் என்று கூறிக்கொண்டு இந்துவெறி பயங்கரவாத ஆட்சியை நிறுவியுள்ள மோடியின் அரசுக்கு எதிராக, இப்போது குஜராத்தின் ‘இந்துக்களே’ போராடத் தொடங்கியுள்ளனர். இந்து வெறி பயங்கரவாத மோடியின் கட்சியைச் சேர்ந்த பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களும் முன்னாள் பா.ஜ.க. அமைச்சர்களும், மோடி அரசுக்கு எதிராக உழைக்கும் மக்களுடன் இணைந்து போராட்டக் களத்தில் நிற்கின்றனர்.

குஜராத்தின் பவநகர் மாவட்டத்தில் உள்ள மாகுவா பகுதியில், பிரபல சோப்புக் கம்பெனியான நிர்மா நிறுவனம், சிமெண்ட் ஆலை நிறுவுவதையும் ண்ணாம்புக் கல் தோண்டுவதற்காக விளைநிலங்களைப் பறிப்பதையும் எதிர்த்து அப்பகுதிவாழ் விவசாயிகள் கடந்த ஓராண்டு காலமாகப் போராடி வருகின்றனர்.

சோப்பு மட்டுமின்றி பல்கலைக்கழகம், தனியார் மின்நிலையம் என விரிவடைந்துள்ள மிகப் பெரிய ஏகபோக நிர்மா நிறுவனத்துக்கு, சிமெண்ட் ஆலை தொடங்குவதற்காக 288 ஹெக்டேர் நிலம் மற்றும் ண்ணாம்புக் கல் ரங்கம் தொடங்க 3000 ஹெக்டேர் நிலம் அளிக்க குஜராத் அர ஒப்புதல் அளித்திருக்கிறது. மாகுவா பகுதியில் உள்ள நிலம், முப்போகம் சாகுபடியாகும் நல்ல விளைச்சல் நிலமாகும். இங்கு வெங்காயமும் தென்னையும் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. இப்பகுதியிலுள்ள பஞ்சாலை, வெங்காயப் பதப்படுத்தும் ஆலை முதலானவற்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர். விவசாயம் சார்ந்த சிறு தொழில் நிறுவனங்களில் 3000-க்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். மக்களின் வரிப்பணத்தில் உருவான சிறிய நீர்த்தேக்கங்கள் மூலம், இப்பகுதியில் உப்புநீர் பரவாமல் தடுத்து விவசாயம் செய்யப்படுகிறது. இவை அனைத்தையும் நாசமாக்கும் வகையில் நிர்மா திட்டம் அமைந்துள்ளது. மேலும், சிமெண்ட் ஆலையால் 50,000 விவசாயிகளின் வாழ்வுரிமை பறிக்கப்படும். ற்றுச் சூழல் நாசமாகும். அதேசமயம், நிர்மா உருவாக்கும் ஆலையால் ஏறத்தாழ 500 பேருக்கு மட்டுமே வேலை கிடைக்கும்.

அரசின் கொள்கை முடிவை எதிர்த்தும், நிர்மா நிறுவனத்தின் குண்டர்களையும் போலீசையும் எதிர்த்தும் விடாப்பிடியாக விவசாயிகள் போராடியதைத் தொடர்ந்து, முன்னாள் தலைமைச் செயலரான ஷீலத் தலைமையிலான குழுவை அமைத்து, மக்களின் புகார்களைப் பரிசீலித்து அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் போவதாக மோடி அர நாடகமாடியது. அதற்கேற்ப இந்தக் குழு, பாதிக்கப்படும் மக்களையோ, அல்லது இந்தப் பகுதியையோ பார்வையிடாமலேயே இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

பா.ஜ.க. அரசின் நிலப்பறிப்பை எதிர்த்து போராட்டத்தில் அணிதிரண்ட மாகுவா வட்டார விவசாயிகள்.



விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டத்தை எதிர்த்து, கடந்த டிசம்பர் 13-ஆம் நாளன்று விவசாயிகள் வன்கார் எனும் கிராமத்தில் பொதுக்கூட்டம் நடத்தத் தீர்மானித்தனர். இக்கூட்டத்தில் பங்கேற்க வந்த இப்பகுதியின் எம்.எல்.ஏ. கனுபாய் கல்சாரியா, மூத்த காந்தியவாதியான ணிபாய் வைத்யா ஆகியோர் போலீசாரால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டனர். உள்ளூர் விவசாயத் தலைவர்களை நிர்மா நிறுவனத்தின் அடியாட்

கள் தாக்கினர். கூட்டத்துக்கு வந்த விவசாயிகளை போலீசார் அடித்து விரட்டினர்.

கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதியன்று, நிர்மா நிறுவனத்தின் சிமெண்ட் ஆலைத் திட்டத்துக்கு எதிராக அமைதியாக ஊர்வலம் நடத்திய விவசாயிகள் மீது போலீ தடியடித் தாக்குதல் நடத்தி விரட்டியது. பொய்வழக்கு சோடிக்கப்பட்டு முன்னணியாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அதற்கு அடுத்த நாளில் தோலியா கிராமத்துக்குச் செல்லும் வழியில் எம்.எல்.ஏ. கனுபாய் கல்சாரியாவும் அவரது மனைவி மற்றும் உறவினர்களும் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர். அவர்களது வாகனங்கள் நாசமாக்கப்பட்டன.

அரசின் ஆதரவோடு தொடர்ந்து இத்தகைய தாக்குதல்கள் நடப்பதால், இந்த விவகாரத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி பொதுக் கருத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, இப்பகுதி விவசாயிகள் கடந்த பிப்ரவரி 25-ஆம் தேதியன்று, அகமதாபாத்தில் காந்தி உருவாக்கிய சபர்மதி ஆசிரமத்திலிருந்து காந்திநகர் நோக்கி பெருந்திரளாக ஊர்வலம் நடத்தி, அதிகாரிகளிடம் மனு கொடுப்பதற்காகத் திரண்டனர். இந்த மனுவில் பாதிக்கப்படும் விவசாயிகள் 11,111 பேர் தமது இரத்தத்தால் கையெழுத்திட்டுள்ளனர். பெண்கள்-குழந்தைகள் என்றுகூடப் பாராமல், ஊர்வலம் நடத்திய விவசாயிகள் மீது மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்திய போலீசார், 5,500-க்கும் மேற்பட்டோரைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளனர். மூத்த காந்தியவாதியான னிபாய் வைத்யா, இப்பகுதியின் பா.ஜ.க.எம்.எல்.ஏ.வான கனுபாய் கல்சாரியா, முன்னாள் பா.ஜ.க. நிதியமைச்சரான சனத்பாய் மேத்தா, சமூக சேவகி இலாபென் பதக், மூத்த பத்திரிகையாளர் பிரகாஷ் ஷா ஆகியோர் உள்பட பல பிரமுகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் தமது வாழ்வுரிமைக்காகத் தொடர்ந்து போராடி வருவதால், நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து உள்ளூர் பா.ஜ.க.வினரும் இந்த நியாயமான போராட்டத்தை ஆதரிக்கின்றனர். பயங்கரவாத மோடி அரசோ, இந்த வட்டாரத்தில் மக்களிடமிருந்து - அதாவது, பெரும்பான்மை இந்துக்களிடமிருந்து முற்றாகத் தனிமைப்பட்டு நிற்கிறது. தமது கட்சிக்கும் ஆட்சிக்கும் எதிராக விவசாயிகளோடு சேர்ந்து பா.ஜ.க.வினர் போராடிய போதிலும், அக்கட்சித் தலைமை அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. பிற பகுதியிலுள்ள பா.ஜ.க.வினரும் இப்போராட்டத்தை எதிர்க்க முன்வரவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட பொதுநல வழக்கு விசாரணைக்கு வந்த போது, ''குஜராத்தை விற்பனை செய்வதை நிறுத்துங்கள்!'' என்று எச்சரித்த உயர்நீதி மன்ற நீதிபதி, இத்திட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளார்.





இந்துவெறி மோடி அரசின் போலீ நடத்திய வெறியாட்டத்தில் படுகாயமடைந்த 'இந்து' விவசாயப் பெண்கள்.

சட்டிஸ்கரின் தண்டேவாடா, மே.வங்கத்தின் லால்கார், மகாராஷ்டிராவின் ஜெய்தாப்பூர், ஒரிசாவின் நாராயணப்பட்னா போலவே இன்று குஜராத்தின் மாகுவா மாறியுள்ளது. போராடும் மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டு அவர்கள் மீது அடக்குமுறை ஏவப்படுகிறது. எந்த ஓட்டுக் கட்சியானாலும் எந்த மாநிலமானாலும் இவற்றில் எந்த வேறுபாடும் இல்லை. மக்களின் வாழ்வுரிமையை விட முதலாளிகளின் சூறைாடல்தான் 'வளர்ச்சி'க்கு முக்கியமானது என்பதுதான் அனைத்து ஓட்டுக் கட்சிகளின் ஒரே கொள்கையாகிவிட்டது.

டாடாவின் நானோ கார் தொழிற்சாலை தொடங்க தாராள சலுகைகளை அள்ளிக் கொடுத்து, தொழில் 'வளர்ச்சி'யில் குஜராத் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுவதாகக் காட்டிக் கொண்ட மோடி அர, இப்போது தமது மாநில மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து, அத்தகைய 'வளர்ச்சி'யை அடக்குமுறை மூலம் சாதிக்கக் கிளம்பியிருக்கிறது. இந்துத்துவ ஆட்சி என்றால் அது உள்நாட்டு - வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் சூறையாடலுக்கு வி வாச சேவை செய்யும் பயங்கரவாத ஆட்சிதான் என்ற உண்மையையும் நாட்டு மக்களுக்குப் புரிய வைத்திருக்கிறது.

● குமார்

# பாரம்பரிய விவசாயத்தை அழிக்கவரும் கருப்புச் சட்டம்

## மரபணு மாற்றுப் பயிர்களை எதிர்ப்போரை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முயலுகிறது, மைய அரசு.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளைச் சோதனை முறையில் பயிரிடுவதையும், அதன் பின் அவற்றை வர்த்தகரீதியில் பயிரிட அனுமதிப்பதையும் எதிர்த்து வரும் விவசாயிகள், அறிவியலாளர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக சக்திகளை முடக்கும் வண்ணம் ஒரு புதிய கருப்புச் சட்டத்தைக் கொண்டுவர முயன்று வருகிறது, மைய அர . ''உயிரித் தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஆணைய வரைவு மசோதா'' என அழைக்கப்படும் இம்மசோதா நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் சட்டமாக அங்கீகரிக்கப்படுமானால், அச்சட்டத்தின்படி தேசிய உயிரித் தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஆணையம் என்ற அமைப்பு உருவாக்கப்படும். அமைச்சர்களோ, எம்.பி., எம்.எல்.ஏ.க்களோ, விவசாயிகளின் பிரதிநிதிகளோ இன்றி, நான்கு நிபுணர்களை மட்டுமே கொண்டு அமைக்கப்படும் இந்த ஆணையம்தான், இனி, மரபணு மாற்றப்பட்ட விதைகளை/பயிர்களை/உணவுப் பொருட்களை இந்திய மக்கள் மீது திணிக்கும் விஷயத்தில் வானளாவிய அதிகாரம் கொண்டு செயல்படும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்திரிக்காயை வர்த்தகரீதியில் அனுமதிக்க மைய அர முயற்சி செய்தபொழுது, விவசாயிகளின் மத்தியில் இருந்து எழுந்த கடுமையான எதிர்ப்பின் காரணமாக, பல மாநில அர கள் கூடத் தங்கள் மாநிலங்களில் பி.டி. கத்திரிக்காய் பயிரிடுவதற்குத் தடை போட்டன. இனி இது போன்ற எதிர்ப்புகள் விவசாயிகள், அறிவியலாளர்கள் மத்தியில் இருந்து மட்டுமல்ல, மாநில அர கள், நாடாளுமன்றத்திலிருந்துகூட எழுந்து விடக்கூடாது என்ற நோக்கத்தோடு, இச்சட்டம் எதிர்ப்போரின் குரல்வளையை நெறிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை யாராவது ஆதாரமின்றி எதிர்த்தால், அவர்களுக்கு ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை சிறை தண்டனை அல்லது இரண்டு இலட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும் என்றவாறு இம்மசோதா உருவாக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய விதைகளை நம்பி பயிர் செய்யும் விவசாயிகளை, அவர்களை ஆதரிப்போரைக் குறிவைத்து விடப்பட்டுள்ள அச் றுத்தல் இது.

''சரியான ஆதாரமில்லை'' எனத் தீர்மானிக்கப் போவது யார்? எந்த ஆணையம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை அனுமதிக்கிறதோ, அவர்களே தான் அதனை எதிர்ப்பவர்கள் தரும் ஆதாரங்களை ஆராய்வார்கள் என்றால், யாரால்தான் சரியான ஆதாரங்களைத் தந்துவிட முடியும்? குற்றவாளியே தீர்ப்புச் சொல்லும் நீதிபதியாக நியமிக்கப்படுவது போன்ற கேலிக்கூத்து இது!

இதுவொருபுறமிருக்க, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளைச் சோதனை முறையில் பயிரிட்டு, அது பற்றிய தகவல்களை அர தான் சேகரித்து வருகிறது. எனவே, சோதனையின் விளைவுகளைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பும் யாரும் அரசிடம் தான் அத்தகவல்களைக் கோரிப் பெறமுடியும். ஆனால், இம்மசோதாவோ மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்/பயிர்கள் பற்றிய விவரங்

மைய அர , பி.டி. கத்தரிக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக ஹைதராபாத்தில் விவாதக் கூட்டம் நடத்தியபொழுது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் போராடிய இயற்கை விவசாய ஆர்வலர்கள். (கோப்புப் படம்)



# பி.டி.பருத்தியின் பூச்சி எதிர்ப்புத் திறன்: ‘அறிவியல்’ கட்டுக்கதை!

மான்சாண்டோவின் தயாரிப்பான பி.டி.பருத்தி விதை எதிர்பார்த்த விளைச்சலைத் தரவில்லை என விவசாயிகள் கதறியபொழுது, ‘‘அவர்களுக்குப் பயிர் செய்யத் தெரியவில்லை’’ எனத் திமிராகப் பதிலளித்த மான்சாண்டோ நிறுவனம், இப்பொழுது இந்த உண்மைகளைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளது. ‘‘குஜராத்தில் நடத்திய கள ஆய்வுகளில், இளஞ்சிவப்பு புழுக்களை எதிர்த்து வளரும் சக்தியை பி.டி. பருத்தி விதைகள் இழந்து விட்டன. இந்தப் புழுக்கள் தங்களுக்குள் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொண்டுவிட்டதால், இனி மேல் பி.டி. பருத்தியில் 2-வது ரகத்தை விவசாயிகள் வாங்குவதுதான் நல்லது’’ என அறிக்கை வெளியிட்டுள்ளது, மான்சாண்டோ.

மான்சாண்டோவின் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் அதனின் இரண்டு திருட்டுத்தனங்கள் அம்பலமாகியுள்ளன. முதலாவதாக, பி.டி. பருத்தி விதை புழு, பூச்சித் தாக்குதலைத் தாங்கி வளரும் என்பது வெறும் பொய்தான். இரண்டாவது, இது ஒரு வியாபார உத்தி. காப்புரிமை வழங்கப் பட்ட பி.டி. விதைகளுக்கு குறிப்பிட்ட காலம் வரைதான் உரிமத் தொகையைக் காட்டி விலை நிர்ணயம் செய்ய முடியும். குறிப்பிட்ட ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னர், அந்த விதைக்கான உரிமத் தொகை பெறும் உரிமை காலாவதியாகிவிடும். அதனால்தான் மான்சாண்டோ பி.டி. பருத்தி 1-வது ரகத்தின் தோல்வியை ஒப்புக்கொண்டு, பி.டி. பருத்தியின் இரண்டாவது ரகத்தை இந்திய விவசாயிகளின் தலையில் கட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது.

பி.டி. பருத்திக்குத் தடை விதிக்கக் கோரி மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் பருத்தி விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)




நியாயமாகப் பார்த்தால், இந்தத் திருட்டுத்தனத்திற்காக மான்சாண்டோ மற்றும் அதனின் கூட்டாளி நிறுவனமான மாஹிகோ நிறுவனங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளைத் தண்டிப்பதோடு, பி.டி. பருத்தி விதைகளைப் போட்டு நட்டமடைந்த விவசாயிகளுக்கு அந்நிறுவனங்களிடமிருந்து நட்ட ஈடு பெற்றுத் தரும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், அமெரிக்க அடிவருடி மன்மோகன் சிங் அரசோ, மான்சாண்டோவிற்கு எதிராகக் குரல் கொடுப்போரைத் தண்டிக்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திச் சட்டமாக்கிவிடத் துடிக்கிறது. •

களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டுப் பெறமுடியாது என்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது. தகவல்களைத் தரவும் மாட்டார்களாம்; அதேசமயம், ‘ஆதாரமின்றி’ப் போராடுபவர்களைச் சிறையிலும் தள்ளுவார்களாம். இதன்பொருள், விவசாயிகள் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை எவ்விதக் கேள்வியும் கேட்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

விவசாயிகள் மட்டுமல்ல, மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் தகுதி குறித்து, அது தங்களின் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடியதா இல்லையா என்பது குறித்து நுகர்வோர் என்ற முறையில் ‘பொதுமக்கள்’கூடக் கேள்வி கேட்க முடியாது.

விவசாயத் துறை மாநில அரசுகளின் உரிமையின் கீழ் வருகிறது. இதனைப் பயன்படுத்திக் கொண்டுதான் 13 மாநில அரசுகள் தங்கள் மாநிலங்களில் பி.டி. கத்திரிக்காய் பயிரிடுவதற்குத் தடை விதித்தன. கேரளாவும், ஜார்கண்டும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள்/விதைகள் அனைத்திற்கும் தடை விதித்துள்ளன. ஆனால், இம்மசோதாவோ தேசிய உயிரித் தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி அளிக்கும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்/பயிர்களுக்கு மாநில அரசுகள் மட்டுமல்ல, நீதிமன்றங்கள்கூடத் தடை விதிக்க முடியாது என்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மசோதா சட்டமானால், ஒழுங்குமுறை ஆணையத்தில் உறுப்பினராக உள்ள நான்கு நிபுணர்களும், அவர்களைப் பின்னாலிருந்து இயக்கும் பன்னாட்டு விவசாயக் கழகங்களும்தான் இந்திய விவசாயத்தின் தலையெழுத்தை, இந்திய மக்கள் என்ன உணவுப் பொருளை உண்பது என்பதைத் தீர்மானிப்பார்கள். இக்குற்றச்சாட்டை நாம் ஏதோ காழ்ப்புணர்ச்சியால் கூறவில்லை. அமெரிக்காவின் தேசங்கடந்த விவசாயக் கழகமான மான்சாண்டோவின் இந்திய மேலாளர் தேவராஜ் ஆர்யா, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்/பயிர்களை அனுமதிப்பதற்கு ஒரேயொரு ஆணையம் உருவாக்கப்பட வேண்டும் என்றும், அவ்விதைகள்/பயிர்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்கு அளிக்கக் கூடாதென்றும் ஆலோசனைகளை வழங்கிவந்தார். அக்கழகம் முன்வைத்த ஆலோசனைகள் இம்மசோதாவில் விதிகளாக உருவாக்கப்பட்டுள்ளன.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்/பயிர்களைச் சோதனை முறையிலும், வர்த்தகரீதியிலும் பயிரிடுவதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் மட்டுமின்றி, இந்த அனுமதி குறித்து யாராவது வழக்குத் தொடுத்தால், அதனை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரமும் தேசிய உயிரித் தொழில்நுட்ப ஒழுங்கு முறை ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் இவ்வாணையம் வழங்கும் தீர்ப்புகளை எதிர்த்து இந்தியாவின் எந்தவொரு நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது.

தற்பொழுதுள்ள நிலையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளைச் சோதனை முறையில் பயிர் செய்ய வேண்டும் என்றால்கூட ற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை, விவசாயத் துறை ஆகியவற்றின் அனுமதியைப் பெறுவதோடு, ற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம், உணவுப் பாதுகாப்புச் சட்டம், பல்லுயிர் பாதுகாப்புச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களின் ஆய்வுக்கும் உடன்பட வேண்டும். இம்மசோதாவும், ஒழுங்குமுறை ஆணையமும் இச்சட்டங்களுக்கும், விவசாய மற்றும் ற்றுப்புறச் சூழல் அமைச்சகங்களுக்கும் கட்டுப்படத் தேவையில்லை என்றவாறு உருவாக்கப்பட்டுள்ளன. ருக்கமாகச் சொன்னால், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்/பயிர்கள்/உணவுப்பொருட்களைப் பரிசோதனைக்கும் வர்த்தகத்திற்கும் அனுமதி அளிப்பதில் இனி இந்த ஒழுங்குமுறை ஆணையம் ஒரு சர்வாதிகாரி போலவே செயல்படும்.

நமது நாட்டின் பாரம்பரியமிக்க விதைகள் அனைத்துமே அழிந்து போகக்கூடிய நிலைதான் இம்மசோதாவால் உருவாகும். தனியார்மயம்-தாராளமயத்தின் மூலமும், கட்டுப்பாடற்ற விவசாய விளைபொருட்களின் இறக்குமதியின் மூலமும் இந்திய விவசாயத்தின் யசார்பு அழிக்கப்பட்டு வரும் போக்கை இம்மசோதா மேலும் விரைவுபடுத்தும்.

● ரஹீம்

## கருப்புப் பணம்-காமக் களியாட்டம்:

# இதுதான் கார்ப்பரேட் ஆன்மீகம்!

### காமாந்தக-கருப்புப் பண-கார்ப்பரேட் சாமியார்களுக்கு இன்றைய அரசியலமைப்புமுறை துணை நிற்கிறது.

சிவமுராத் திவேதி, தில்லியைச் சேர்ந்த பிரபலமான விபச்சாரத் தரகன். இணையதளத்தின் மூலம் விபச்சாரத் தொழில் செய்து கொடி கட்டிப் பறந்தவன். அவனது தொழிலுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பாக உதவியது காவியுடைதான். பகல் முழுவதும் யோகம், தியானம், ஆன்மீகச் சொற்பொழிவு என ''இச்சாதாரி பாபா''வாக வேடம் போட்ட இந்தக் காவியுடைச் சாமியார், இரவானால் விபச்சார 'மாமா'வாகச் செயல்பட்டுள்ளான். இந்த இச்சாதாரி 'மாமா' அம்பலமாகி வட இந்தியாவைக் கலக்கிக் கொண்டிருந்த அதே சமயத்தில், காற்று வரும் என நினைத்து கதவைத் திறந்து வைத்து கல்லாக் கட்டிக் கொண்டிருந்த கயவாளி நித்யானந்தா, நடிகை ரஞ்சிதாவுடன் கொஞ்சிக் குலாவிய படுக்கையறைக் காட்சிகள் வெளியாகி தமிழகத்தை அதிர வைத்தன.

நித்யாவின் 'கிருஷ்ண லீலை'களுக்கு இணையாக, அதே நேரத்தில் ஆந்திராவை கலக்கிக் கொண்டிருந்தான், கலியுகக் கடவுளாகச் சித்தரிக்கப்பட்ட 'கல்கி பகவான்'. போதை மயக்கத்தில், பெண்கள் புடைசூழ, அரைகுறை ஆடையுடன் பக்தர்கள் ஆடுவதைக் கல்கி பகவான் ரசித்துக் கொண்டிருந்த காட்சிகள் ஆந்திர ஊடகங்களில் வெளியாகின. இந்த அவதார புருஷனின் சின்னத்தனங்களை சின்னத்திரையில் பார்த்து ஆத்திரமடைந்த பக்தர்கள், அவனது ஆசிரமத்தை அடித்து நொறுக்கினார்கள்.

இதுபோன்ற பொறுக்கி சாமியார்கள் அம்பலமாவது முதல்முறையாக நடப்பதல்ல. பிரேமானந்தா தொடங்கி காமகேடி ஜெயேந்திரன் வரை எத்தனையோ பேர்வழிகள் அம்பலமாகியுள்ளனர். அதே சமயத்தில், புதிது புதிதாக சாமியார்கள் தோன்றுவதும் குறைந்தபாடாயில்லை. இவர்களும் வாயிலிருந்து லிங்கம், கட்டிப்புடி வைத்தியம், கல்பதரு ரகசியம், சுதர்ஸன கிரியை யோகம், தியான லிங்கம், சுயம்பு லிங்கம் - என பக்தர்களைக் கவர புதுப்புது வழிகளை உருவாக்கிக் கொள்கின்றனர். நீதி, நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு - என இவர்கள் போதிப்பது அனைத்தும் பக்தர்களுக்கு மட்டும்தானேயொழிய, இந்தக் காவியுடைச் சாமியார்கள் எதையும் தங்கள் வாழ்வில் கடைபிடிப்பதாகத் தெரியவில்லை.

இவர்களை இவ்வளவு உயரத்திற்கு ஏற்றிவிடுவதில் பெரும் பங்கு ஊடகங்களுக்கு இருக்கிறது. நித்யானந்தன் புகழோடு இருந்த போது, அவனை வைத்துத் 'தொழில்' நடத்திய பத்திரிகைகள், தற்போது அவனது சாயம் வெளுத்த பிறகு

காவியுடைக் கயவன் நித்யானந்தன்: பல்லாயிரம் கோடி கருப்புப்பண சாம்ராஜ்ஜியத்தின் அரசன்.



அதனையும் தங்களது வியாபாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. நித்யானந்தா-நடிகை ரஞ்சிதா படுக் கையறைக் காட்சிகளை தொடர்ந்து ஒளிபரப்பி, பத்தி ரிக்கை தர்மத்தில் 'மாமா வேலை'யையும் சேர்த்து புது இலக்கணம் ஒன்றையும் இவர்கள் வகுத்துள்ளனர்.

சென்ற முறை, காஞ்சிபுரம் கருவறைப் புகழ் தேவ நாதனின் லீலைகள் ஒளிக்குறுந்தகடுகளாக வெளிவந்த போது, அதனை வியாபாரமாக்கும் அரிய வாய்ப்பை தவற விட்ட ஏக்கத்திலிருந்த இந்த ஊடகங்கள், இம் முறை நித்யானந்தா வசமாக மாட்டியவுடன் தங்களது வியாபாரத் தந்திரங்கள் அனைத்தையும் காட்டி விதவித மாகக் காசு பார்த்துவிட்டன. இலவசமாக நித்யானந்த னின் லீலைகளைப் போட்டுக்காட்டி தனது பார்வை யாளர் எண்ணிக்கையை அதிகப்படுத்தியதுடன், விளம் பரக் கட்டணங்களை உயர்த்தி, சன் டிவி கல்லா கட்டி யது. நக்கீரனோ தனது பத்திரிக்கையில் அதனை விலா வரியாகப் படங்களாகப் போட்டு விளக்கியதோடு மட்டு மல்லாமல், தனது இணையதளத்தில், சன் டிவி தணிக்கை செய்த காட்சிகளையும் கட்டணம் வாங்கிக் கொண்டு போட்டுக் காட்டி காசு பார்த்தது. ''கதவைத் திற, காற்று வரட்டும்!'' என்ற நித்யானந்தனின் ஆன்மீக உளறல்களைப் பலவண்ணத்தில் விதவிதமாக வெளி யிட்ட குமுதம் இதழ், இப்போது அவன் மாட்டிக் கொண்டவுடன் ஒரு சிறு மறுப்போ, மன்னிப்போ, கண்டனமோ கூடத் தெரிவிக்காமல் நித்யானந்தனைக் கூட்டத்தோடு சேர்ந்து கும்மியடித்து தனது சூரத்தனத் தைக் காட்டிக் கொள்கிறது.

இந்த 32 வயது இளஞ்சாமியார் 'தொழிலுக்கு' வந்து பத்து-பதினைந்து ஆண்டுகள் கூட ஆகவில்லை. ஆனால் அவன் சேர்த்துள்ள சொத்து மதிப்போ அதற்குள் பல ஆயிரம் கோடிகளைத் தாண்டிவிட்டது. உலகம் முழுக்க முப்பத்து மூன்று இடங்களில் ஆசிரமம், பெங் களூரில் மிகப் பெரிய தலைமையகம் - என நித்யானந் தனுக்குச் சொத்துக்கள் குவிந்து கிடக்கின்றன. ஆயிரக் கணக்கான பக்தர்கள், ஆன்மீகம் என்ற பெயரில் உலகம் முழுக்கச் சுற்றுப் பயணம், களைப்பு தெரியாமலிருக்கப் பணிவிடை செய்ய -றுக்கணக்கான பெண் சீடர்கள் என ஒரு சாம்ராஜ்யத்தின் அரசனைப் போலத்தான் நித்தி யானந்தன் வாழ்ந்துள்ளான்.

இன்று நித்யானந்தனை எதிர்ப்பவர்கள் கூட அவன் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டான் என்பதற்காக எதிர்க்கிறார்களே அன்றி, அவன் மக்களை ஏமாற்றிச் சொத்து சேர்த்தான் என்றோ, கருப்புப் பணப் பெட்ட கமாக இருந்த அவனது சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றோ கோருவது இல்லை. தாழ்த் தப்பட்டோரும் சூத்திரர்களும் ஆலயக் கருவறைக்குள் நுழைவோம் என்றால், இந்து தர்மத்துக்கும் ஆகம விதி களுக்கும் எதிரானது என்று கத்தும் இந்து மதவெறி அமைப்புகள் எவையும், இலட்சக்கணக்கான இந்துக் களை ஏமாற்றிய நித்தியானந்தனை இந்து விரோதியா கக் காட்டவில்லை. கொடும்பாவி எரிப்பு, ஆசிரமம் தகர்ப்பு என நித்யானந்தனைக் கடுமையாக எதிர்ப்



கருப்புப் பணத்தை வெள்ளையாக்கும் ரசவாதம் தெரிந்த நித்யானந்தனின் ஆன்மீக வியாபார விளம்பரம்.

**இன்று நித்யானந்தனை எதிர்ப்பவர்கள் கூட, அவன் மக்களை ஏமாற்றிச் சொத்து சேர்த்ததை, கருப்புப் பண மூட்டையாக இருந்ததைக் கண்டு கொள்வதில்லை.**

பதாகக் காட்டிக் கொண்ட இந்து மக்கள் கட்சி, அடுத்த வாரத்திலேயே அவன் ''இந்து என்பதால்தான் எல்லா ரும் தாக்குகிறார்கள்'' என்று ''தினமணி''யில் கட்டுரை எழுதி அந்தர் பல்டி அடித்தது. சிவசேனாவோ ஒருபடி மேலே சென்று, நித்யானந்தனுக்கு ''இந்து எழுச்சியை ஏற்படுத்திய இளம் துறவி'' என்று பட்டம் கொடுத்தது

நித்யானந்தா போன்ற இன்னும் பல ஆன்மீக அவ தாரங்கள் உருவாகி வளர்வதற்கும் ஒரு அரசியல்-பொருளாதார அடிப்படை இருக்கிறது. 1990-க்குப் பிறகு வந்த தனியார்மயம் - தாராளமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையினால் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகி வருகின்றனர்; ஏழைகள் மேலும் ஏழைகளாகி வருகின்றனர்; நாட்டில் கருப்புப் பணத்தின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கருப்புப் பண முதலைகளுக்கு மோட்சமளிக்க இது போன்ற சாமியார்கள் தோன்றிக்கொண்டே இருக்கிறார் கள். ஏனெனில், இந்தச் சாமியார்கள்தான் கருப்புப் பணத்தைப் வெள்ளையாக்கும் ரசவாதம் தெரிந்தவர் கள். உலகமயச் சூழலும், நுகர்வுக் கலாச்சாரமும் உரு வாக்கிய புதிய புதிய வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும், அதிலிருந்து மீள தீர்வைத்தேடி அலையும் மக்களுக்கும் பொருத்தமான புதிய வடிவில் ஆன்மீக வியாபாரமும்

களைகட்டத் தொடங்கியிருக்கிறது. ஜக்கி வா தேவ், நித்தியானந்தா, ரவிசங்கர், அமிர்தானந்தமயி, பீமா னந்தா, காசியாபாத் பாபா அனூப் என்று புதிய ஆன்மீ கச் சரக்குகள் வந்த வண்ணம் உள்ளன.

இன்று எந்தச் சாமியார் ஆன்மீக வியாபாரத்தை மட்டும் செய்கிறான்? கல்வி நிறுவனங்கள் நடத்துவது, மருத்துவமனை நடத்துவது என இலாபகரமான தொழில்கள் அனைத்தையும் சாமியார்களின் டிரஸ்டுகள் நடத்துகின்றன; அதுவும் ஒரு பைசா வருமான வரி இன்றி! தற்போதைய சூழலில் இவர்கள் பெரும் அர சாரா நிறுவனங்களாக வளர்ந்துள்ளனர். தங்களது ஆன்மீக வியாபாரத்தை மக்களுக்கான திட்டங்களாகக் காட்டி ஏகாதிபத்திய நாடுகளில் கோடிக்கணக்கில் வசூல் செய்கிறார்கள். அமிர்தானந்தமயி, சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதாகக் கூறி வசூலித்த தொகை மட்டும் ரூ.200 கோடி. இது, வெளியே காட்டப்பட்ட கணக்கு. மறைக்கப்பட்ட கருப்புப் பணம் எவ்வளவு கோடிகள் என்பது அந்த ஆண்டவனுக்கே கூடத் தெரியாது. தனது பிறந்த நாளின் போது 100 கோடி ரூபாய்க்கு ஆன்மீக-நற்பணித் திட்டங் களை அறிவித்திருக்கிறார், பங்காரு. அப்படியானால் எத்தனை ஆயிரம் கோடிகளைப் பதுக்கி வைத்திருப்பார் இந்த செவ்வாடைச் சாமியார்? சேதுக் கால்வாய் தொடர் பாக ராமன் குறித்து கருணாநிதி கருத்து தெரிவித்ததற்கு எதிர்ப்பு காட்டிய வேதாந்தி என்ற இந்துவெறி சாமியார், கருணாநிதியின் தலையைக் கொண்டு வருவோருக்குப் பரி அறிவித்தான். அந்த காவியுடை 'ராம பக்தன்'தான், இந்தியப் பெருமுதலாளிகளின் கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றிக் கொடுக்கும் இரகசிய உலகப் பேர்வழியாகச் செயல்பட்டவன் என்பது நாடறிந்த உண்மை.

இவர்கள் மட்டுமல்ல, யாரெல்லாம் ஆன்மீகச் சேவை என்ற பெயரில் அறக்கட்டளை நிறுவி சாமியார் பெயரில் வருகிறோனோ, அத்தகையப் பேர்வழிகள்

## "நித்யானந்தனைக் கைது செய்! அவன் சொத்துக்களைப் பறிமுதல் செய்! நித்யானந்தனை வளர்த்துவிட்ட குமுதமே, மன்னிப்புக் கேள்!"

### -குமுதம் 'மாமா'வுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்!

நித்தியானந்தனை தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்து பிரபலப்படுத்தியதில் குமுதம் பத்திரிகைக்கு மிக முக்கிய மான பங்குண்டு. பல ஆண்டுகளாக இந்தப் பொறுக்கியை யும் அவனது ஆன்மீக உளறல்களையும் விதவிதமான வடிவங் களில் அச்சடித்து நடுத்தர வர்க்கத்திடம் கொண்டு சென்ற குமுதம் குழுமப் பத்திரிகைகள், தனது குற்றம் குறித்து கடுகளவும் கவலைப்படாமல் இன்று கூட்டத்தோடு கூட்ட மாக நித்தியானந்தனைக் கும்முகின்றன.

இந்த அயோக்கியத்தனத்தையும், நித்தியானந்தன் என்ற அயோக்கியனை அறிமுகம் செய்து வளர்த்ததைக் கண்டித் தும் மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் பெண்கள் விடு தலை முன்னணியின் சென்னைக் கிளைத் தோழர்கள் குமுதம் அலுவலகம் முன்பு 6.3.2010 சனிக்கிழமையன்று காலையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு -ற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் அம்பேத்கர் சட்டக் கல்லூரி விடுதியிலிருந்து அபிராமி திரையங்கு அருகிலிருக்கும் குமு தம் அலுவலகத்தை நோக்கி முழக்க அட்டைகளுடன் ஊர்வ லமாய் விண்ணதிர முழக்கங்களுடன் வந்தனர். ''நித்யானந் தனைக் கைதுசெய்!அவன் சொத்துக்களை பறிமுதல்செய்! நித்யானந்தனை வளர்த்துவிட்ட குமுதமே, மன்னிப்புக்கேள்! தமிழக அரசே, சாமியார்களின் பிரச்சாரத்தைத் தடைசெய்! சாய்பாபா, பிரேமானந் தா,சங்கராச்சாரி, தேவநாதன்,கல்கி, நித் தியானந்தா கழிசடைகளை விரட்டியடிப்போம்! காவியுடைக் கிரிமினல்களை நாட்டைவிட்டே அடித்து விரட்டுவோம்!'' - எனும் மைய முழக்கங்களோடு பெ.வி.மு. சென்னைக் கிளைச் செயலர் தோழர் உஷா தலைமையில், போலீ சின் தடையையும் மீறி சுமார் ஒரு மணிநேரம் குமுதம் பத்திரிகை அலுவலக வாயிலில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக் கான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட் டன. சாலைப் போக்குவரத்து ஒரு மணி நேரத் திற்கு முடங்கிய போதிலும், நித்தியானந்த னையும், அவனுக்கு ஒத்தூதிய குமுதத்தை யும் கண்டிப்பதை மக்கள் வரவேற்று ஆதரித் தனர்.



பின்னர், பெண்கள்-குழந்தைகள் உள் ளிட்டு தோழர்கள் அனைவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக் கப்பட்டனர். நித்தியானந்தனை உருவாக்கி தோடு, இப்போது அம்பலப்பட்ட பிறகு கிசுகிசு மூலமும் காசுபார்க்கும் இந்த ஊடக விபச்சாரிகளை அடையாளம் காட்டிய இந்த ஆர்ப்பாட்டம், மக்களிடம் பெருத்த தாக் கத்தை ஏற்படுத்தியது.

— பு.ஜ.செய்தியாளர்


கருப்புப் பணப் பெட்டகமாகத்தான் இருக்கின்றனர். சேவை அமைப்புகள், அறக்கட்டளைகள் என்றால் அரசு அதற்கு வரிவிலக்கு அளிக்கிறது. அவற்றுக்கு நன்கொடையாக அளிக்கப்படும் தொகை கருப்புப் பணமா, வெள்ளைப் பணமா என்று கேள்வி கேட்பதும் கிடையாது. இதைப் பயன்படுத்திக் கொண்டு நவீன கார்ப்பரேட் சாமியார்கள் பெரும் மோசடி நிறுவனமாக உருவாகி இன்று நச் மரமாக வளர்ந்துள்ளார்கள். பெருமுதலாளித்துவ கருப்புப் பணப்பேர்வழிகளுக்கும் ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளுக்கும் இத்தகைய காவியுடை நிறுவனங்களில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாக இருக்கிறது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், தியான மண்டபங்கள், பத்திரிகைகள், நவீன பாலியல் விடுதிகள் — என பல நிறுவனங்களை இத்தகைய கார்ப்பரேட் சாமியார்கள் நடத்தி வருவதோடு, அரசியலிலும் செல்வாக்கு செலுத்துகின்றனர்.



பங்குச் சந்தையில் நுழையும் புதிய பங்கு நிறுவனத்தின் விழாவைத் தொடங்கி வைக்கும் கார்ப்பரேட் சாமியார் ஜக்கி வா தேவ்.

கருப்புப் பண சாமியார்கள் அதிகாரத்தில் உள்ளவர்களுடன் நெருங்கி இருப்பது பரஸ்பரம் இரு தரப்பினருக்கும் 'தொழில் வளர்ச்சிக்கு' அவசியமானதாக இருக்கிறது. பக்தர்களுக்கு இமயமலை மானசரோவரில் தேவதைகளைக் காட்டி வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் ஜக்கி வாசுதேவன், தனது மனைவியைக் கொன்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்கச் சரணடைந்தது கருணாநிதியிடம் தானேயன்றி, மானசரோவர் தேவதைகளிடமல்ல. மேல்மருவத்தூருக்காக, தேசிய நெடுஞ்சாலையே கொஞ்சம் வளைந்து கொடுத்து விலகிப்போனபோது, மத்திய அரசில் தனது பக்தனுக்கிருக்கும் செல்வாக்கைக் கண்டு அந்த ஆதிபராசக்தியே அதிசயித்திருக்கக் கூடும். தனது கோயிலில் தங்கத்தால் கூரை வேய்ந்த விஜய் மல்லையாவுக்கு இணங்க சபரிமலை ஐய்யப்பனே கூட, 1990-களுக்குப் பிறகு தனது கறாரான விதிமுறைகளை தளர்த்திக் கொள்ள வேண்டியிருந்தது. சாயிபாபா ஆசிரமத்து கொலைகளோ, ஆந்திராவில் சத்யசாயி டிரஸ்டு உருவாக்கிய குடிநீர் திட்டத்தில் கரைந்தே போயிற்று. இலங்கை இனப்படுகொலையை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்கு ஜெயலலிதாவிற்கு ஒரு ரவிசங்கர் தேவைப்படுகிறார். ஆர்.டி.ஓ. முதல் உச்சநீதிமன்ற நீதிபதி வரை, தங்களது காரியத்தைச் சாதித்துக் கொள்ள சங்கராச்சாரி தேவைப்படுகிறார். இப்போதும் கூட, தனது வழக்கை கர்நாடகத்திற்கு மாற்றிடவும், கர்நாடகத்தில் வழக்கைப் பதிவு செய்யாமல் நீர்த்துப்போக வைக்கவும் நித்யானந்தனுக்கு கருணாநிதியும் எடியூரப்பாவும் தேவைப்படுகிறார்கள்.

''இச்சாதாரி பாபா'' எனப்படும்
சிவமுராத் திவேதி:
பகலில் ஆன்மீகம்;
இரவில் விபச்சார தரகன்.



ஒரு அரசியல்வாதியோ, அதிகாரியோ கணக்கு வழக்கின்றி சொத்துச் சேர்க்கும் போது, அந்தச் சொத்து எப்படி வந்தது என அவர்களை விசாரிக்கச் சட்டத்தில் இடமிருக்கிறது. ஆனால், இதுபோன்ற சாமியார்களிடம் குவிந்துள்ள கருப்புப் பணம் பற்றி விசாரிக்கவோ, அவர்களது சொத்துக் கணக்குகளைத் தணிக்கை செய்யவோ எந்த சட்டமும் இல்லை. அதனால்தான் தாங்கள் வாங்கிக் குவிக்கும் கருப்புப் பணத்தில் ஒரு சிறு பகுதியை எடுத்து தான-தர்மம் செய்யும் இவர்கள், அறக்கட்டளை என்ற பெயரில் பல ஆயிரம் கோடிகளை மோசடி செய்து வருகின்றனர். இத்தகைய மோசடி சாமியார்களின் உண்மை முகத்தைத் திரைகிழித்து, இவர்களது அரசியல்-அதிகாரக் கள்ளக்கூட்டையும், இத்தகைய கயவாளிகளுக்கு இன்றைய அரசியலமைப்பு முறை உடந்தையாக நிற்பதையும் அம்பலப்படுத்துவதும், இவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்து தண்டிப்பதும்தான் இத்தகைய கருப்புப் பண கார்ப்பரேட் சாமியார்களின் ஆதிக்கத்தை அடித்து நொறுக்கும். அத்தகைய போராட்டத்துக்கு மக்களை அணிதிரட்டுவதுதான் இன்றைய அவசியத் தேவை.

● கதிர்

# ராஜபக்சே குடும்பத்தின் பாசிசப் பிடியில் இலங்கை

**விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவது என்ற பெயரில், ராஜபக்சே குடும்பத்தின் பயங்கரவாத ஆட்சிதான் நடைபெறுகிறது.**

இலங்கையில் அதிபர் மகிந்த ராஜபக்சேவால் தனிச் சிறப்பான முறையில் கட்டியமைக்கப்பட்டிருக்கும் இராணுவம், போலீசு, உளவுப்படை, ''வெள்ளை வேன்'' கொலைப்படை, பேரினவாதச் செய்தி ஊடகம் ஆகிய கட்டுமான அமைப்பு முழுவதும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற 'பயங்கரவாதி'களை ஒழிப்பதற்கும், நாட்டின் ஒருமைமையைக் காப்பதற்கும் அவசியமானதுதான் என்று சிங்கள சமூகம் நம்பிக் கொண்டிருந்தது.

ஈழ மண்ணில் தமிழனின் இரத்த ஆறு ஓடுவதை வெற்றிப் போதை தலைக்கேற தென்னிலங்கையின் தெருக்களில் எக்காளமிட்டுக் கூத்தாடியது சிங்கள சமூகம். ஆனால், போதை தெளிவதற்குள்ளாகவே தான் ஊட்டி வளர்த்த இனவெறி பாசிச ஓநாய்கள் தன்னையே சூழ்ந்து கொள்ளும் என்பதைச் சிங்கள சமூகம் அறிந்திருக்கவில்லை. அந்தப் பாவத்துக்குத் தக்க விலை கொடுக்காமல், அது தப்பித்துவிட முடியாது என்பதை ராஜபக்சே குடும்பக் கும்பல் இப்போது காட்டி வருகிறது.

அதிபர் மகிந்த ராஜபக்சே - அவரது சகோதரர்களான பாசில், கோத்தபாயா, சாமல் இவர்களின் பிள்ளைகளான சுசீந்திரா, நாமல் மற்றும் மருமகன்கள் மூவர் இலங்கையின் இராணுவம், போலீசு, உளவு, நிதி, அயலுறவு, மதம் மற்றும் அரசு ஊடகம் உட்பட அனைத்து முக்கியத் துறைகளையும் தமது இரும்புப் பிடிக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களோடு மகிந்தாவின் நெருங்கிய உறவினர்கள் 15 பேராவது அரசு நிர்வாகத்தில் அதிஉயர் பொறுப்புகளில் இருப்பதால், நாட்டின் ஆண்டு வரவு-செலவில் எழுபது சதவீத நிதி இவர்களின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கின்றது.

2005-ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சே ஆட்சிக்கு வந்த போது தனக்கு விசுவாசமாக ஒரு சிறு அரசியல் கும்பலை மட்டுமே பெற்றிருந்தார். கடந்த ஐந்தாண்டுகளில் அரசு நிர்வாக இயந்திரம் முழுவதையும் ராஜபக்சே குடும்ப கும்பலின் விசுவாசக் கருவியாக மாற்றிக் கொண்டதோடு, இலங்கையின் அரசியல் சட்டத்துக்குப் புறம்பான ஒரு பாசிசக் கொலைகாரக் கூலிப்படையையும் கோயபல்சு பாணியிலான பிரச்சார ஊடகத்தையும் அக்கும்பல் கட்டியெழுப்பிக் கொண்டது.

ராஜபக்சே கும்பலின் ஆணையில் இருக்கும் பாசிச அரசு இயந்திரம் மற்றும் பிற பாசிச பரிவாரங்களைக் கொண்டு இலங்கையின் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக மட்டுமல்ல; சிங்கள இனத்தவரானாலும் அதன் அதிகாரத்தை விமர்சிக்கவோ, எதிர்க்கவோ துணிந்தால் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தத் தயங்காது. இது நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் வெளிப்படையாகவே தெரிந்தது, வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் மீண்டும் ஒருமுறை தெரியவரும்.

கடந்த ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்ட ஈழத் தமிழின அழிப்புப் போரினூடாக விடுதலைப் புலிகளை முற்றாக ஒழிப்பதில் சிங்கள அரசபடைகள் அடைந்த வெற்றி, மகிந்த ராஜபக்சேவுக்கே உரியதென்று ராஜபக்சே கும்பலின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ள அரசு ஊடகம் இடைவிடாது பிரச்சாரம் செய்து வருகிறது. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சிகளும் வானொலிகளும் பத்திரிக்கைகளும் அவரை வீர நாயகனாகச் சித்தரித்து வருகின்றன. தொலைக்காட்சிகளும் வானொலிகளும் அவ்வாறான பாடல்களை இடைவிடாது ஒலி-ஒளிபரப்பி வருகின்றன. இதற்கு மாறாகச் செயல்படும் செய்தி ஊடகம் எதுவானாலும் ராஜபக்சே பாசிசப் படையின் பயங்கரவாதத் தாக்குதலுக்குள்ளானது. ஏற்கெனவே ராஜபக்சே கும்பலை விமர்சித்து எழுதிய பத்திரிகை ஆசிரியர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்; ஒரு செய்தியாளர் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டார். மகிந்தாவை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகா அதிபரானால் இலங்கையில் இராணுவ ஆட்சியே ஏற்படும் என்ற தொடர்பிரச்சாரத்துக்கு எதிராக, ''தற்போது மட்டுமென்ன ஜனநாயக ஆட்சியா நடக்கிறது, ஒரு சர்வாதிகார ஆட்சிதானே நடக்கிறது'' என்று எழுதிய குற்றத்திற்காக ''லங்கா ஈ நியூஸ்'' என்ற இணையதள ஊடகவியலாளர் பிரகீத் எக்னலியகொட தேர்தலுக்கு இருநாட்கள்

வாக்கு எண்ணிக்கைத் தொடங்கியவுடனேயே, எதிர்த்தரப்பு வேட்பாளர் சரத் பொன்சேகா மற்றும் பிற எதிர்க் கட்சித் தலைவர்கள் கொழும்பு நகரில் தங்கியிருந்த விடுதியை முற்றுகையிட்ட இலங்கை இராணுவம்.



முன்னதாக கடத்தப்பட்டு, அவர் பற்றிய விவரங்கள் இன்னமும் தெரிய வில்லை. இதோடு வேறு மூன்று இணையதளங்கள் தடை செய்யப் பட்டன.

தமிழ் புலி ஆதரவு அமைப்பாகக் கருதப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தனு டன் சரத் பொன்சேகா ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்து விட்டதாகவும், அதில் புலிகளின் பழைய கோரிக்கை களை ஏற்பதாக சரத் ஒப்புக் கொண்ட தாகவும், இது ஒரு தேசத் துரோகம் என்றும் அந்த ஒப்பந்தத்தின் பிரதி என ஒன்றை அரசு அச்சகத்திலேயே அச்சிட்டு சிங்கள மக்களிடையே விநியோகித்துப் பொய்ப் பிரச்சாரம் செய்தது.



எதிர்த்தரப்பினர் பழி மத்தப்பட்டு வேட்டையாடப்படுவதை நிறுத்தக் கோரி கொழும்பு நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

அவ்வாறான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருப்பதாக ஒப்புக் கொள்ளும் இரா.சம்பந்தனின் நேர்காணல் என்ற ஒரு புனைவை லங்காதீபா என்ற முதன்மை சிங்கள நாளேடு வெளியிட்டது. அதிபரின் முதன்மை ஆலோசகரான பாசில் ராஜபக்சேவே இதற் கான ஏற்பாட்டினை செய்திருக்கிறார். இந்தக் கற்பனைப் பேட்டியை எழுதிய ஊடகவியலாளருக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. தேர்தல் விதிமுறைகள் மீறப் படுவதையும், சட்டவிரோதமாக பிரச்சாரச் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதையும் தடுக்கும்படி தேர்தல் ஆணையாளர் விடுத்த பரிந்துரைகளை இலங்கை போலீசு மாஅதிபர் மகிந்த பாலசூரியா மதிக்கவே இல்லை.

தேர்தல் சட்டவிதி மீறல்களும் வன்முறைகளும் அதி கரித்தே வந்தபோதும், போலீஸ் மா அதிபரிடம் பல முறை கோரியும் அவை குறையவில்லை என்பதால், தேர்தல் விதிமுறை மீறல் குறித்த முறைபாடுகளை அனுப்ப வேண்டாம் என அரசியல் கட்சிகளுக்கு அறி வித்து விடலாம் என்றார், தேர்தல் ஆணையாளர்; தேர் தல் விதிமுறைகளையே ரத்து செய்து விடலாம் என்ற விதிப்புரையும் செய்தார். அரசு ஊடகங்களைச் சார் பின்றி நெறிப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி செயல்பட முடியாமல் போனதால், தேர்தல் ஆணை யாளரால் விலக்கிக் கொள்ளப்பட்டார். தனது உத்தரவு களை அரசு மதிப்பதில்லை என்பதால் தானே விலகிக் கொள்ளப் போவதாக எச்சரித்திருந்தார். இறுதியில் தேர் தல் முடிவு அறிவிப்பதற்கு முன்பு தேர்தல் ஆணையாள ரும் அவரது மனைவியும் அதிபர் மாளிகைக்குள் அடைத்து வைக்கப்பட்டு, ராஜபக்சே கும்பலுக்குச் சாத கமான முடிவு அறிவிக்கும்படி நிர்பந்திக்கப்பட்டார்.

எதிர்க்கட்சிகளுக்கு எதிராக மிரட்டல்களும் வன் முறைத் தாக்குதல்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. எதிர்க்கட்சியினரின் பிரச்சாரக் கூட்டங்கள், ஊர்வலங் கள் போலீசு துணையுடன் ஆளுங் கட்சிக் குண்டர்களால் தாக்கப்பட் டன. மக்களை அச்சப்படுத்தி வாக்க ளிப்பதைத் தடுக்கும் வகையில் தாக் குதல்கள் நடந்தன. எதிரணியினரின் செயலகங்கள் அடித்து நொறுக்கப்பட் டன; அவர்களின் ஊர்வலங்களின் மீது ராஜபக்சே கும்பலின் குண்டர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடுகளில் ஒரு பெண்மணியும் ஒரு இளைஞரும் கொல்லப்பட்டனர்.

தேர்தல் வன்முறைகளைக் கண் காணிக்கும் அமைப்புகள், இலங்கை யின் வரலாற்றிலேயே மோசமான வன்முறைகளைக் கொண்ட தேர்தல் இதுதானென்று கூறியுள்ளன. இந்தத் தேர்தல் ஏற்றுக் கொள்ளத்தக்க ஜன நாயக விழுமியங்களைக் கொண்ட தேர்தலாக அமையவில்லை என்று பொது நலவாய (காமன்வெல்த்) நாடு களின் தேர்தல் கண்காணிப்புத் தொடர் பான அறிக்கை கூறுகிறது.

ராஜபக்சே கும்பல் தனக்கு எதிராகத்தான் சிறு பான்மை இன மக்கள் வாக்களிப்பார்கள் என நம்பிய தால், அவர்கள் வாக்களிப்பதைத் தடுப்பதற்காகப் பல தாக்குதல்களை நடத்தியது. தேர்தலுக்கு முதல் நாளிரவு யாழ்குடா நாடு முழுக்க டக்ளஸ் தேவானந்தா, கருணா முதலிய துரோகக் குழுக்கள் மூலம் குண்டுகளை வெடிக் கச் செய்து பீதி கிளப்பியது. அவற்றில் 13 சம்பவங்கள் பெரிய அளவிலானது. தேர்தலைப் புறக்கணிக்கும்படி, புலிகளின் பெயரில் ஏராளமான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு டக்ளசின் குழு யாழ்குடா நாடு முழுவதும் விநியோகித்தது. ராஜபக்சேவுக்கு எதிராகவும் சரத்துக்கு ஆதரவாகவும் ஈழத் தமிழர்கள் வாக்களித்து விடுவார்கள் என்பதால் இந்த உத்தி கையாளப்பட்டது. யாழ்குடா நாட்டில் தேர்தல் நாளன்று பொதுப் போக்குவரத்தை அரசு நிறுத்திவிட்டது. பயங்கரவாத அமைப்பான புலி கள் இயக்கம் ஒழிக்கப்பட்டால் நாட்டில் ஜனநாயகச் சூழல் திரும்பிவிடும் என்ற ராஜபக்சே உள்ளிட்ட சிங்கள, தமிழ்த் துரோக அரசியல் கட்சிகள் கூறி வந் தன. ஆனால், அதிபர் தேர்தல் வன்முறைகள் நிரம்பிய தாகவும் 20 சதவீத தமிழ் மக்களே வாக்களிப்பதாகவும் அமைந்தது.

பல இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ராஜபக்சே வெற்றி பெற்றிருப்பதால், இவ்வளவு பெரிய தேர்தல் தில்லுமுல்லுகள் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று இந்தியாவிலுள்ள ‘‘இந்து’’ நாளேடு உட்பட ராஜபக்சே கும்பலின் விசுவாசிகள் சாதிக்கின்றனர். ஆனால், ராஜ பக்சே கும்பல் கட்டியெழுப்பியிருக்கும் சிங்கள பாசிச பயங்கரவாத அமைப்பு மற்றும் சிங்கள - சிறுபான்மை இன அடிப்படையில் இலங்கையின் சிவில் சமூகம் முழுவதும் அணிபிரிந்து நிற்குமாறு ராஜபக்சே கும்பல்

சிங்கள இனவெறி பாசிசத்துக்கு எதிராக சிறுபான்மை இனங்கள் ஓரணியாக நிற்பதையே நடந்து முடிந்த அதிபர் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

அரசியலை நெறிப்படுத்திக் கொண்டு சென்றது ஆகிய வைதாம் அதன் வெற்றியை உறுதிப்படுத்தின. ஈழத் தமிழர்கள் சிறுபான்மை மு லீம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள், இந்த இனங்களின் துரோக அரசியல் தலைமையின் வற்புறுத்தலையும் மீறி மகிந்த ராஜபக்சேவுக்கு எதிராக வாக்களித்துள்ளனர். அதாவது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் எதிரணியினரின் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக வாக்களித்து, மொத்தத்தில் அவர் 40 சதவீத வாக்குகள் பெறுமாறும், எஞ்சிய சிங்கள இலங்கை முழுவதும் ஒரு தலையாக மகிந்த ராஜபக்சேவுக்கு வாக்களித்து மொத்தத்தில் அவர் 58 சதவீத வாக்குகள் பெறுமாறும் செய்துள்ளனர்.

சிறுபான்மை இன மக்கள் எப்படியும் தமக்கு எதிராகவே வாக்களிப்பாளர்கள் என்று கருதியதால், சிங்கள மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் வாக்குகளை ஒரு முகமாக பெறவேண்டும் என்பதால்தான் மகிந்த ராஜபக்சே தேர்தல் பரப்புரையின் போது சிறுபான்மை மக்களுக்கு எதிராக நஞ்சு கக்கினார். சிறுபான்மை இன மக்களுக்கு எத்தகைய அதிகாரத்தையும் வழங்கப் போவதில்லை; அதற்கு வகை செய்வதாக உள்ள உடன்படிக்கைகளைக் கிழித்தெறிவேன் என்றார். ஈழத்தமிழின மற்றும் விடுதலைப் புலிகள் ஒழிப்புப் போரை வழிநடத்திய சிங்கள இராணுவத்தின் தலைமைத் தளபதியை சிங்கள தேசத்தின் துரோகியாகவும், சதிகாரனாகவும் மோசடியாளனாகவும், எதிரணியினர் அனைவரும் இத்தகையவர்கள் என்றும் சித்தரிக்கப்பட்டனர்.

''இலங்கையில் உள்ளது ஒரு இனப்பிரச்சினையே கிடையாது; முற்றிலும் பயங்கரவாதப் பிரச்சினைதான். அது யுத்தத்தின் மூலம் தான் முறியடிக்கப்பட வேண்டும்'' என்பதுதான் ராஜபக்சே கும்பல், சரத் பொன்சேகா மற்றும் ஜே.வி.பி. ஆகியோரின் உறுதியான நிலையாகும். இந்த அடிப்படையிலேதான் ராஜபக்சே கும்பலும் மற்றும் ஜே.வி.பி.யினரும் அரசியல் பரப்புரையை வெறியோடு நடத்தின. பாசிச பயங்கரவாத இரத்த வெறிப் போரை ஈழத் தமிழர்க்கெதிராக முப்படைத் தளபதி மகிந்தாவும் மற்றும் இராணுவத் தலைமைத் தளபதி சரத்தும் சேர்ந்தே வழிநடத்தினர்.

ஈழப் போர் வெற்றியை அதிபர் தேர்தல் மூலதனமாக்கிக் கொள்வதற்காக, அதன் ஏகபோக உரிமையாக்கிக் கொள்ள ராஜபக்சே கும்பல் எத்தணித்தது. அதைப் பங்கு போடப் போட்டியாளர்களாக சரத்தும் ஜே.வி.பி.யும் வந்தனர். சிங்கள வாக்காளர்களை மட்டும் நம்பி தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று கணக்குப் போட்ட சரத், ஈழத் தமிழரின் ஆதரவைப் பெறுவதற்காக, ஈழப்போரின் இறுதி கட்டத்தில் நடந்த போர்க்குற்றங்களுக்கு ராஜபக்சே கும்பல்தான் காரணமென்றும், அதுகுறித்த விசாரணை வந்தால் அதை உறுதி செய்து தாம் சாட்சியமளிக்கப் போவதாகவும் கூறினார். இது, போர் வெற்றிக்கு உரிமை பாராட்டுவது, அதே சமயம் போர்க் குற்றங்களுக்கான பழியைப் பிறர்மீது சுமத்துவது என்று இரண்டு குதிரைகளில் ஒரே சமயத்தில் சவாரி செய்வது போலாகிவிட்டது. விளைவு, தலைக்குப்புற வீழ்ந்து விட்டார்.

சரத்தின் இரட்டை நிலையைப் பயன்படுத்திக் கொண்ட ராஜபக்சே கும்பல், போர்வெற்றியில் அவர் பங்கு பாராட்ட முடியாது; போரின் இறுதி நாட்களில் அவர் களத்தில் இருக்கவில்லை, வேறு களமுனை தளபதிகளே இறுதிப் போரை நடத்தினார்கள் என்றும், போர்க் குற்றங்கள் பற்றிப் பேசும் சரத் ஒரு தேச துரோகி, இராணுவ ஆட்சிக்கு சதி செய்தவர், ஆயுதக் கொள்வனவில் மோசடி செய்தவர் என்றும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை அள்ளிவீசி, சிங்கள இனவெறியை கிளப்பி ஆதாயம் தேடிக் கொண்டது. சரத் பொன்சேகாவை அரசியல் அரங்கில் இருந்து முற்றாக அகற்றிவிட முடிவு செய்து, மரண தண்டனைக்குரிய வழக்குப் போட்டு கைது செய்து, அவரது ஆதரவு இராணுவ அதிகாரிகளைக் களையெடுத்தது.

சிங்கள பாசிச இனவெறி அரசியல் இயக்கங்களிடையே ஏற்பட்டுள்ள இந்தப் பாரிய பிளவு, முரண்பாடு மோதல்களை ஒரு நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதில் எஞ்சிய தமிழின அரசியல் இயக்கங்கள் தவறிவிட்டன. ஈழத் தமிழர், மலையகத் தமிழர் மற்றும் இசுலாமியர்களின் பெயரால் ராஜபக்சே கும்பல் அரசில் மந்திரி பதவிகளை சுவைத்துக் கொண்டிருக்கும் சிறுபான்மை இனத் துரோகத் தலைமை தொடர்ந்து அக்கும்பலுக்கு விசுவாசங்காட்டி வருகின்றன. எஞ்சியுள்ள சிறுபான்மை இனங்களின் அரசியல் தலைமைகளோ சிங்கள இனவெறி பாசிச சக்திகளின் இன்னொரு தலைமையாகத் தோன்றிய சரத் பொன்சேகாவை ஆதரித்தன.

சிங்கள இனவெறி பாசிசத்துக்கு எதிரான சிறுபான்மை இனங்கள் ஓரணியாக நிற்பதையே நடந்து முடிந்த அதிபர் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இதை ஒரு அரசியல் அணியாக ஒன்று திரட்டுவதோடு, ராஜபக்சே கும்பலின் பாசிச பயங்கரவாதத்துக்கு எதிராக சிங்கள சமூகத்தில் தோன்றக்கூடிய ஜனநாயக சக்திகளோடு ஐக்கியப்பட்ட இயக்கத்தை கட்டியமைப்பது தான், இலங்கையில் ஒரு புதிய புரட்சிகர அரசியல் முன்னெடுப்புக்கு வழிவகுக்கும்.

● ஆர்.கே.

# “அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்குவோம்! ஆலயத் தீண்டாமைக்கு முடிவு கட்டுவோம்!”

## -மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் (HRPC) போராட்டம்

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டுமென்ற பெரியாரின் கனவை நனவாக்குவதாகக் கூறி சில ஆண்டுகளுக்கு முன்பு கருணாநிதி அரசு ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. இதன் தொடர்ச்சியாக, அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு, மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். இதற்கிடையில் மதுரை பட்டர்கள் எனப்படும் மீனாட்சி அம்மன் ஆலயத்தின் பார்ப்பன அர்ச்சகர்கள், இந்த அரசு உத்தரவுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் தடையுத்தரவு பெற்றனர். பார்ப்பனர்களின் நீதிமன்றத் தடையாணையை முறியடிக்க வேண்டிய கருணாநிதி அரசு, நீதிமன்ற ஆணைக்குப் பங்கம் வராமல் நடந்து கொள்கிறது. அர்ச்சகர் பள்ளியில் முதல் அணியாகப் பயிற்சி பெற்று, சைவ-வைணவப் பெரியோர்களால் தீட்சை சான்றிதழும் பெற்ற 206 மாணவர்கள், பணிநியமனம் இல்லாமல்-செய்வதறியாமல் திகைத்து நிற்கின்றனர். இப்போது இந்தப் பள்ளியில் புதிய மாணவர்கள் சேர்க்கப்படவில்லை.

இது ஏதோ 206 மாணவர்களின் வேலைவாய்ப்பு பிரச்சினை மட்டுமல்ல, இந்து சனாதன தர்மப்படி பிறப்பால் கீழானவர்கள் என்று இழிவுபடுத்தப்படும் நம் அனைவரின் மானப் பிரச்சினை. தி.மு.க. அரசின் பார்ப்பன அடிமைத்தனத்தை உணர்ந்து, இந்தப் பிரச்சினையை நீதிமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் முன்வைத்து மனித உரிமைப் பாதுகாப்பு மையம் போராடி வருகிறது. அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களை அணிதிரட்டி சங்கம் அமைத்து வீதியில் இறங்கிய பிறகுதான், அவர்களுக்குரிய சான்றிதழே அளிக்கப்பட்டது. அடுத்து, இந்தப் பிரச்சினையை உச்சநீதி மன்றத்திலும் வாதாட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பார்ப்பன சதியையும் தி.மு.க. அரசின் அடிமைத்தனத்தையும் மக்களிடம் விளக்கி இவ்வமைப்பினர் தொடர் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றனர். இதையொட்டி, கடந்த 10.3.10 அன்று மதுரையில் ஜான்சிராணி பூங்கா அருகில் அர்ச்சக மாணவர்கள் பங்கேற்ற உண்ணாநிலைப் போராட்டத்தை ம.உ.பா. மையம் நடத்தியது.




முன்னாள் அமைச்சர் திரு. வி.வி. சாமிநாதன், சிவனடியார் ஆறுமுகசாமி ஆகியோர் முன்னிலையில் கோரிக்கைகளை முழங்கி, மதுரையில் தகுதி பெற்ற அர்ச்சகர்கள் நடத்திய உண்ணாநிலைப் போராட்டம்.

இந்தப் போராட்டத்தில், ‘‘பார்ப்பானுடைய பிள்ளைகள் பட்டம் பெறாமலேயே, தகுதியில்லாமலேயே அர்ச்சகர்களாகப் பணியாற்றுகிறார்கள். நாங்கள் பயிற்சிப் பள்ளியில் படித்து தகுதி பெற்றும்கூட, முச்சந்தியிலே நின்று போராடிக் கொண்டிருக்கிறோம். அரசாங்கமோ, அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கிவிட்டோம் என்று தனக்குத்தானே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது’’ என்று பல மாணவர்கள் குமுறினர். பிறப்பால் தாழ்த்தப்பட்டவரான ஒரு மாணவர், சமஸ்கிருதத்திலும் தமிழிலும் மந்திரங்களை மிக இனிமையாகப் பாடியதோடு, தான் எத்தனையோ திருமணங்களையும் குடமுழுக்குகளையும் நடத்தி வைத்துள்ளதாகவும், இவற்றை கடவுள் ஏற்கும்போது, கருவறைக்குள் மட்டும் எங்களை பார்ப்பனர்கள் அனுமதிக்க மறுப்பது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

இப்போராட்டத்தின் நிறைவாக, ம.உ.பா.மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ராஜு தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்து அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் திரு. வி.வி. சாமிநாதன், மதுரை வழக்குரைஞர் சங்கச் செயலாளர் திரு. ஏ.கே. இராமசாமி, குச்சனூர் ஆதீன நிர்வாகி குச்சனூர் கிழார், திராவிடர் கழகத்தின் மாநில சட்டத்துறைத் தலைவர் வழக்குரைஞர் திரு.கி.மகேந்திரன், தமிழ்நாடு வழக்குரைஞர் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.சின்னராஜா, ம.க.இ.க. தோழர்கள் கதிரவன், எழில்மாறன், வி.வி.மு. தோழர் குருசாமி மற்றும் பலர் உரையாற்றினர்.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள் முழங்கப்பட்டன. அதன்பின் மாலை 5 மணியளவில், தில்லை நடராசர் கோயிலில் பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்தும் போராட்டத்தில் முன்னோடியாக நின்ற போராளியான சிவனடியார் ஆறுமுகசாமி இப்போராட்டத்தை முடித்து வைத்தார். அர்ச்சக மாணவர்கள், ‘‘வாழ்மிகு வராது பொய்க மதிவளம் ரக்க மன்னன் கோல்முறை அரச செய்க’’ என்ற பெரியபுராணப் பாடல் வரிகளைப் பாடி உண்ணாநிலைப் போராட்டத்தை நிறைவு செய்தனர்.

இந்நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், உச்சநீதி மன்றத்தில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலய அர்ச்சகர்கள் பெற்றிருக்கும் தடையாணையைத் திரும்பப் பெறக் கோரியும், ஆலயத் தீண்டாமைக்கு முடிவுகட்டும் போராட்டத்துக்கு அறைகூவியும், இதே நாளில் திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி தலைமையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

— பு.ஜ.செய்தியாளர்கள்

# "லியோ பாஸ்ட்னர்ஸ் நிர்வாகத்தின் முதலாளித்துவ பயங்கரவாதத்தை முறியடிப்போம்!"

## -போராடும் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்-பொதுக்கூட்டம்.

புதுச்சேரி-தட்டாஞ்சாவடி தொழிற்பேட்டையில் கடந்த 40 ஆண்டு காலமாக இயங்கிவரும் லியோ பாஸ்ட்னர்ஸ் எனும் போல்ட்-நட் தயாரிக்கும் நிறுவனத்தின் கொத்தடிமைத்தனத் திற்கும் அடக்குமுறைக்கும் எதிராக, பு.ஜ.தொ.மு. சங்கத்தின் தலைமையில் கடந்த ஈராண்டுகளாகத் தொழிலாளர்கள் போராடி வருகின்றனர். தெருமுனைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணி என கடந்த இரு மாதங்களாகத் தொழிலாளர் போராட் டம் தீவிரமடைந்த போதிலும், அர எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், கடந்த 22.2.10 முதலாக தொழிலாளர் கள் உள்ளிருப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். முதலாளி களின் எடுபிடிகளாகச் செயல்படும் போலீ , போராடிய தொழி லாளர்களை போலீ நிலையத்துக்குக் கொண்டு சென்று மிரட்டிப் பார்த்தது. மிரட்டலுக்கு அஞ்சாமல், போலீ கொடுத்த உணவையும் புறக்கணித்து தொழிலாளர்கள் அங்கும் உறுதி யாகப் போராட்டத்தைத் தொடர்ந்ததால், அன்றே அனைவரை யும் விடுவித்தது.

போராட்டத்திற்கு ஆதரவாக இதர தொழிலாளர்களிடம் பிரச்சாரம் செய்வதைத் தடுத்தும், தொழிற்பேட்டையில் போலீசைக் குவித்தும், பொய்வழக்கு போடுவதாக மிரட்டியும் பார்த்த முதலாளிகளின் திட்டங்கள் அனைத்தும் தொழிலாளர் களின் போராட்ட உறுதியின் முன்னே தவிடுபொடியாகின. வேலைக்கு வராவிட்டால் பணிநீக்கம் செய்து விடுவேன் என்று மிரட்டிப் பார்த்த முதலாளி ஷா, அது தோல்வியடைந்ததால், வீடுவீடாகச் சென்று தொழிலாளர்களைக் கெஞ்சி தனது காரில் ஏற்றி வரும் தொழிலாளர்களின் காரோட்டியாக மாறிப் போனார். வறுமையிலுள்ள தொழிலாளர்களை விலை பேசியும், புதிதாகச் சிலரை வேலைக்கு அமர்த்தியும் எப்படியாவது நிறு வனத்தை இயக்க முயற்சிக்கிறார், இப்பயங்கரவாத முதலாளி.

தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கிச் ரண்டும் இம் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை எதிர்த்தும், இதற்கு அடி யாளாகச் செயல்பட்டுவரும் போலீசை அம்பலப்படுத்தியும் தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட தொழிலாளர்கள், கடந்த 1.3.10 அன்று தட்டாஞ்சாவடி தொழிற்பேட்டை நுழை வாயிலில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அதன் தொடர்ச்சியாக, லியோ பாஸ்ட்னர்ஸ் தொழிலாளர்களின் நியா யமான போராட்டத்தை ஆதரித்தும் முதலாளித்துவ பயங்கர வாதத்தை எதிர்த்தும் இந்துஸ்தான் லீவர், கோத்ரெஜ் சாராலீ, மெடிமிக்ஸ் ஆகிய ஆலைகளின் தொழிலாளர் சங்கங்கள் ஒருங்கிணைந்து புதுச்சேரி பழைய பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டத்தை நடத்தின. இவற்றின் தொடர்ச்சியாக, மறுகாலனியாக்கத்தின் வேட்டைக்காடாக புதுச்சேரி மாற்றப்பட்டு, முதலாளித் துவ பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை எதிர்த்து கடந்த 10.3.10 அன்று பக்கமுடையான்பட்டு -ஜீவா காலனியில், போராடும் தொழிலாளர்கள் மிகப் பெரிய பொதுக்கூட்டத்தை நடத்தினர். இக்கூட்டத்தின் இறுதியில் நடந்த ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது. வர்க்க உணர்வுடன் உறுதியாகத் தொடரும் தொழிலாளர் போராட்டம், புதுச்சேரி எங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



— பு.ஜ.செய்தியாளர், புதுச்சேரி.

---

# சாலையா? மரணக் கிணறா?

## -ஓட்டுக் கட்சிகளின் மிரட்டலையும் மீறி மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

புதுச்சேரியில் ஏம்பலம் மற்றும் அதன் ற்றுப்புறத்திலுள்ள புதுக்குப்பம், செம்பியப்பாளையம் ஆகிய பகுதிகளில் கடந்த 21 ஆண்டுகளாக சாலை வசதி அமைத்துத் தராமல் - தார்ச் சாலை போட்டுத் தராமல் அதிகார வர்க்கமும் ஓட்டுப் பொறுக் கிகளும் இப்பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொள்ளை யடித்து வந்தனர். இச்சட்டமன்றத் தொகுதியில் மாறிமாறிப் பதவிக்கு வந்த தி.மு.க; காங்கிர , பா.ம.க; ஆகிய கட்சிகளின் எம்.எல்.ஏ.க்களிடமும் அதிகாரிகளிடமும் இப்பகுதிவாழ் மக்கள் பலமுறை மனுக் கொடுத்து மன்றாடியும், அதை அவர்கள் தொடர்ந்து புறக்கணித்தே வந்தனர்.

இந்நிலையில், இப்பகுதியில் இயங்கிவரும் பு.ஜ.தொ.மு. மற்றும் பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து கடந்த டிசம்பர் மாதத்தில், ''ஏம்பலம் பகுதிகளில் சாலைகளைக் காண வில்லை! இலவச மரணக் கிணறுகள் ஏராளம்!'' என்ற முழக் கத்துடன் வரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, இந்தப் பகற்கொள்ளையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன. கடந்த டிசம்பர் 30-ஆம் தேதியன்று பகுதிவாழ் மக்களைத் திரட்டி துணை ஆட்சியரிடம் மனுவும் கொடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட இவ்வமைப்புகள், கடந்த மார்ச் 10-ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தத் தீர்மானித்தன. இதைக் கண்டு அரண்டுபோன ஓட்டுப் பொறுக்கிகள், விரைவில் சாலை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று மக்களிடம் நைச்சியமாகப் பேசி போராட் டத்தை முடக்க முயற்சித்தனர்.

இதைத் தொடர்ந்து, ''மனு என்னடா மசிரு! எங்களுக்குப் பணமும் பதவியும் தாண்டா உசிரு!'' என்ற தலைப்பில் ஓட் டுப் பொறுக்கிகளின் கூட்டுக் கொள்ளையைத் திரைகிழித்தும், உழைக்கும் மக்கள் சாலை வசதியின்றி அவதிப்படும்போது, இப்பகுதியில் மோசடி சாமியார் நித்யானந்தாவின் ஆசிரமத்துக்

குச் செல்லும் பாதையில் பாலம் கட்ட ரூ.5 இலட்சத்தை இத்தொகுதி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரான ராஜாராமன் ஒதுக்கியுள்ளதை அம்பலப்படுத்தியும் இவ்வமைப்புகள் துண்டுப்பிர ரம் வெளியிட்டு வீடுவீடாகப் பிரச்சாரம் செய்தன.



இதே நேரத்தில் நித்யானந்தாவின் காமலீலைகள் அம்பலமானதும், ஏற்கெனவே குமுறிக் கொண்டிருந்த உழைக்கும் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு நித்யானந்தாவின் ஆசிரமத்தை அடித்து நொறுக்கித் தீயிட்டுக் கொளுத்தினர். உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளின் வசதிக்காக புறவழிச்சாலைகளும் பறக்கும் சாலைகளும் அமைத்துக் கொடுத்து மக்களின் வரிப்பணத்தை வாரியிறைக்கும் ஆட்சியாளர்கள், உழைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை அறவே புறக்கணிப்பதை விளக்கி மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரத்தால் உந்தப்பட்ட மக்கள், ஓட்டுப் பொறுக்கிகள் மீது வெறுப்பை உமிழ்ந்தனர். இதனால், போராட்டத்தில் கலந்து கொண்டால் மாட்டு லோன், வீட்டு லோன் போன்ற அரசின் சலுகைகள் கிடைக்காது என்று மிரட்டிப் பார்த்த ஓட்டுப் பொறுக்கிகளின் சூழ்ச்சிகளும் சதிகளும் உழைக்கும் மக்களிடம் எடுபடாமல் போயின. திட்டமிட்டபடி, 10.3.10 அன்று இந்துஸ்தான் யுனிலீவர் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் அய்யனார் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான பகுதிவாழ் உழைக்கும் மக்கள் பங்கேற்று ஆதரவளித்ததோடு, அடுத்த கட்டப் போராட்டத்துக்கும் ஆயத்தமாகி வருகின்றனர்.

— பு.ஜ.செய்தியாளர், புதுச்சேரி.

## அனைத்துலக உழைக்கும் மகளிர் தினம்:

# கொண்டாட்டமா? போராட்டமா?

அனைத்துலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் நாளன்று, திருச்சியில் செயல்பட்டுவரும் பெண்கள் விடுதலை முன்னணி, ''விலைவாசி உலகத்தரம்! பட்டினியே இனி நிரந்தரம்!'' எனும் தலைப்பில் திருச்சி ஜங்சன் காதிகிராப்ட் அருகில் விண்ணதிரும் முழக்கங்களோடு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பெண் தொழிலாளர்களின் போராட்டத்தால் உருவான மகளிர் தினத்தை, உழைக்கும் பெண்களின் அரசியல் ஆர்ப்பாட்ட நாளாக நடத்துவதில்தான் அதன் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது என்பதையும், நமது நாட்டில் பெண்கள் பாலியல் நுகர்பொருளாகவும் உரிமைகளற்ற அடிமைகளாகவும் இருப்பதை அம்பலப்படுத்தியும், இன்றைய மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகப் பெண்கள் அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர். புரட்சிகரப் பாடல்களும், ம.க.இ.க. மையக் கலைக்குழுத் தோழர்களின் ''துயரம் பருப்பு'' எனும் நாடகமும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

சென்னையில், மார்ச் 8-ஆம் நாளன்று மாலை குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில், மாவட்ட அமைப்பாளர் தோழர் உஷா தலைமையில், பெண்கள் விடுதலை முன்னணியினர் மறுகாலனியாதிக்கத்துக்கும் இந்துவெறி பாசிசத்துக்கும் எதிரான அரசியல் ஆர்ப்பட்டத்தை நடத்தினர். பெண்கள் விடுதலையும், மறுகாலனியாதிக்கத்துக்கும் இந்துவெறி பாசிசத்துக்கும் எதிரான போராட்டமும் பிரிக்கப்பட முடியாதவை என்பதை விளக்கியும், காவியுடைக் கயவாளி நித்யானந்தனைக் கைது செய்து அவனது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கான போராட்டத்துக்கு அணிதிரள அறைகூவியும் பு.ஜ.தொ.மு. மாநிலப் பொருளாளர் தோழர் விஜயகுமார் சிறப்புரையாற்றினார்.

விருத்தாசலத்தில், அனைத்துலக மகளிர் தினத்தில் இப்பகுதிவாழ் உழைக்கும் பெண்களைத் திரட்டி பெண்கள் விடுதலை முன்னணி அரங்கக் கூட்டத்தை நடத்தியது. தோழர் துரை.சண்முகம் சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில், பீங்கான் தொழிலில் ஈடுபடும் பெண்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவிகள் - என உழைக்கும் பெண்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தருமபுரியில், மார்ச் 8-ஆம் நாளன்று பெரியார் மன்றத்தில் பெண்கள் விடுதலை முன்னணியினர் அரங்கக் கூட்டத்தை


திருச்சியில்...

நடத்தினர். தோழர் பட்டு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சேலத்தைச் சேர்ந்த தோழர் திலகவதி, பெங்களூரைச் சேர்ந்த தோழர் கலைச் செல்வி ஆகியோர் பெண்கள் மீதான கொடுமைகள் அதிகரித்து வருவதையும் அதற்கெதிராகப் பெண்கள் போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் சிறப்புரையாற்றினர்.

மதுரையில், அனைத்துலக உழைக்கும் மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் 14-ஆம் தேதியன்று ம.க.இ.க; பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் அரங்கக் கூட்டம் நடைபெற்றது. இன்றைய வாழ்க்கைச் சூழலும் சமூக சூழலும் உழைக்கும் வர்க்கப் பெண்களை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் நோயாளிகளாக மாற்றி வருவதையும், பெண்களின் உரிமைகள் பற்றிய சட்டங்கள் வெறும் காகிதக் குப்பைகளாக இருப்பதையும், ஊடகங்கள் பெண்களை இழிவாகச் சித்தரித்துவரும் கயமைத்தனத்தையும் விளக்கி, இவற்றுக்கெதிராக உழைக்கும் பெண்கள் அமைப்பு ரீதியாக அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தியும் மருத்துவர் அம்பிகா, வழக்குரைஞர் வாஞ்சிநாதன், ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன் ஆகியோர் உரையாற்றினர். புரட்சிகரப் பாடல்களும் மீனவர்கள்-பழங்குடியினர் வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்க்கும் நாடகமும் திரளாகப் பங்கேற்ற பார்வையாளர்களிடம் போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பின.

— பு.ஜ.செய்தியாளர்கள்

## தகவல் அறியும் உரிமைச் சட்டம்:

# சோளக் காட்டுப் பொம்மை

**அதிகார வர்க்கமும், நீதிமன்றமும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதில் வெற்றி கண்டுள்ளன.**

தகவல் அறியும் உரிமைச் சட்டம், இந்திய ஜனநாயகத்தில் ஒரு மைல் கல்லாக முதலாளிய செய்தி ஊடகத்தால் சித்தரிக்கப்பட்டது. அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகள் வெளிப்படையாக இருப்பது ஜனநாயகத்தை மேலும் வலுவுள்ளதாக்கும். அந்த வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மிக முக்கியமானது என்று காட்டப்பட்டது. ''உலகின் மிகப் பெரிய ஜனநாயகக் குடியரசாக அமைந்த பிறகு பல ஆண்டுகளாக இப்படி ஒரு உரிமை இல்லாதிருந்தது ஒரு பெரிய குறைதான். அந்தக் குறை இப்போது நீங்கி விட்டது'' என்று சில ஆண்டுகளுக்கு முன்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது பீற்றிக் கொண்டார்கள்.

சட்டம் அமலுக்கு வந்த சில மாதங்களிலேயே எத்தனை ஆயிரம் தகவலறியும் விண்ணப்பங்கள் போடப்பட்டன என்பதையும், அதனால் நடுத்தர வர்க்கத்தினர் ஆதாயம் அடைந்த எடுத்துக்காட்டுக்களையும், தகவல் தர மறுத்த அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளையும் சுட்டிக் காட்டி முதலாளியச் செய்தி ஊடகம் பெருமைப்பட்டுக் கொண்டது. அரசு உயர் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் போடும் கோப்புக் குறிப்புகளைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோருவதைத் தடுப்பதுதான் ஒரே குறை; மற்றபடி உளவுத்துறை, இராணுவம் போன்ற துறைகள் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற முடியாதவாறு விதிவிலக்களிப்பது ''தேசிய'' நலன்களுக்கு அவசியம்தான் என்று ஜனநாயக வேடதாரிகள் பசப்பினார்கள்.

ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பது இந்த நாட்டின் மற்ற பிற ஜனநாயக உரிமைகளைப் போல போலியானதுதான் என்பது இச்சட்டம் அமலுக்கு வந்த சில மாதங்களிலேயே அம்பலமாகி விட்டது. அது மட்டுமல்ல, இந்திய ஜனநாயகத்தின் போலித்தனத்தை மக்கள் புரிந்து கொள்வதற்கு எதிர்மறையில் இச்சட்டம் மிக முக்கியப் பங்காற்றியிருக்கிறது. அரசு நிர்வாகத்தின் எந்தப் பச்சை நரம்பைத் தொட்டால் அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் பதறிப் போகிறார்கள், ஆத்திரத்துடன் பொங்கி எழுகிறார்கள் என்பதும் இந்தச் சட்டம் தரும் உரிமையைப் பயன்படுத்த எத்தணிக்கும்போது அப்பட்டமாகத் தெரிந்து விடுகிறது.


தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் அறிவிப்பதற்கு வேண்டி விண்ணப்பம் பெற்றவுடன் அதிகாரிகள் காட்டும் முதல் எதிர்வினை வெறுப்புதான். ஏதோ அவர்களின் தனிப்பட்ட சொத்தை பகிர்ந்து கொள்ள வந்துவிட்டதாக ஆத்திரப்படுகிறார்கள். வேலை செய்யாமல் நாற்காலியைத் தேய்த்துக் கொண்டு ஊதியம் பெற்று வரும் அதிகாரிகள் முதல் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளில் மூழ்கித் திளைப்பவர்கள் வரை அத்தனை பேருக்கும், அரசு செயல்பாடுகளை இரகசியம் என்ற பெயரில், தகவல்களை சொல்ல மறுப்பதுதான் வசதியானதாக இருக்கிறது. அரசு அதிகாரிகளிடம் முன்வைக்கப்படும் எந்த கோரிக்கையும் நிராகரிக்கப்படும்போது, பாதிக்கப்பட்டவர்கள் என்ன விளக்கம் கேட்டாலும் ''அதெல்லாம் சொல்ல முடியாது'' என்று தடாலடியாக மறுப்பது முதல் ''என்னையே கேள்வி கேட்கிறாயா?'' என்று மிரட்டி அதிகாரம் செய்வது வரை நடக்கிறது. மொத்தத்தில் அரசு நிர்வாக செயல்பாடுகளை, ''சிதம்பர இரகசிய''மாக வைத்திருப்பதே ஒரு சட்டவிரோத, சர்வாதிகாரமாக இருக்கிறது.

போலீ அதிகாரிகள் - ரியல் எஸ்டேட் மாஃபியாக்களின் கூட்டினைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைக் கொண்டு அம்பலப்படுத்தி வந்ததால் கொல்லப்பட்ட சத்தீஷ் ரெட்டி.



இப்போது தகவலறியும் உரிமைச் சட்டம் வந்த பிறகு, அந்த உரிமை தனது துறைக்குப் பொருந்தாது, அச்சட்டம் தனது துறைக்கு விதிவிலக்களிக்கிறது என்று மறுப்பதே அரசு அதிகாரிகளின் வாடிக்கையாகிவிட்டது. நீதிமன்றங்கள் இதற்கு உறுதுணையாக நிற்கின்றன. அதையும் மீறிப் போனால், தகவல்களைத் திரட்டித் தருவதற்குப் போதிய பணியாளர்கள் இல்லை என்று கையை

விரித்து விடுகிறார்கள். இத்தகைய மழுப்பல்களுக்கு உச்சநீதி மன்றமே உடந்தையாக இருக்கிறது. ''தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் போடப்படும் எல்லா வழக்குகளையும் விசாரணைக்கு ஏற்க முடியாது'' என்று பகிரங்கமாகவே உச்சநீதி மன்றம் பொறுப்பின்றிக் கூறிவிட்டது.




உரிமை தனது துறைக்குப் பொருந்தாது, அச்சட்டம் தனது துறைக்கு விதிவிலக்களிக்கிறது என்று மறுப்பதே அரசு அதிகாரிகளின் வாடிக்கையாகிவிட்டது.

தகவல் அறியும் உரிமையை அரசு நிர்வாகம் ஏன் இவ்வளவு தூரம் வெறுப்பாகவும் ஆத்திரமாகவும் பார்க்கிறது என்பதற்கு சில விவகாரங்களை மேலோட்டமாகப் பார்த்தாலே புரிந்துவிடும். ''2003-04 முதல் 2007-08 வரையிலான ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு இலஞ்ச ஒழிப்புத்துறை எத்தனை போலீசு அதிகாரிகளுக்கு எதிராக சோதனைகள் நடத்தியிருக்கிறது? அவர்களுடைய பெயர் பட்டியல், துறைவாரியாக அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவர்களுக்கு எதிராகப் போடப்பட்ட வழக்குகள், புலன் விசாரணைகள் முடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்களைக் கேட்டு இரண்டு பேர் தகவலறியும் சட்டத்தின் கீழ் மனுப் போட்டார்கள். ஆனால், இந்த விவரங்களைத் தரமுடியாது என்று இலஞ்ச ஒழிப்புத் துறை மறுத்துவிட்டது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத் தனிநீதிபதி தீர்ப்பு சொன்னார். அதற்கும் எதிராக அமர்வு நீதிபதிகளிடம் மேல் முறையீடு செய்துள்ள இலஞ்ச ஒழிப்புத்துறை, தமிழக அரசு உத்தரவுப்படி, தகவல் அறியும் உரிமைச் சட்டம் தனது துறைக்குப் பொருந்தாது என்று வாதிடுகிறது.

ஏன் இத்தகைய தகவல்கள் மறைக்கப்படுகின்றன, இரகசியமாக வைக்கப்படுகின்றன? இலஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டுச் சிக்கி, தண்டனை பெற்ற போலீசு அதிகாரிகள் பற்றிய விவரங்கள் அம்பலப்படுத்தப்பட்டால் தானே, இம்மாதிரியான குற்றங்களில் ஈடுபடுவதற்கு போலீசு அதிகாரிகள் அஞ்சுவார்கள், நீதியும் ஒழுங்கும் பராமரிக்கப்படும் என்று அரசு ஏன் கருதவில்லை? குறிப்பாக, சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய போலீசு அதிகாரிகளே சட்டவிரோத கிரிமினல் குற்றங்கள் புரிவது அதிகரித்து வரும் இந்தச் சமயத்தில், அவர்களின் யோக்கியதை பற்றி மக்களுக்குத் தெரியவருவது அவசியமில்லையா? அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக அரசு தயவு தாட்சண்யமின்றி கடும் நடவடிக்கை எடுப்பதாக அல்லவா காட்டிக் கொள்ளவேண்டும்?

இல்லை, குற்றம் புரியும் போலீசு அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் அரசு அவர்களிடம் ''மென்மையாக'' நடந்து கொள்கிறது; தக்க நடவடிக்கை எடுப்பதற்கோ, நாடகமாடுவதற்கோ, வேண்டிய, வேண்டாத அதிகாரிகள் என்று ஒருதலையாக நடப்பதற்கோ, அல்லது அவர்களை வெறுமனே உருட்டி மிரட்டி வைத்துத் தனக்குச் சாதகமான காரியங்களைச் சாதித்துக் கொள்ளவோதான் இலஞ்ச ஒழிப்புத்துறையைப் பயன்படுத்திக் கொள்கிறது. எனவேதான், தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்து அத்துறைக்கு விலக்கு அளித்து, அத்துறையின் நடவடிக்கைகளை இரகசியமாக வைத்து கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் மீது போலீசு நடத்திய கொலைவெறியாட்டத்திற்கு எதிராக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. சில கீழ் நிலை அதிகாரிகள் மீது பழிபோட்டு அரசும் உயர் அதிகாரிகளும் நழுவிக் கொள்ள எத்தணிக்கிறார்கள். இந்த வழக்கில் வகையாக மாட்டிக் கொண்ட ஒரு கீழ் நிலை போலீசு அதிகாரி அத்தாக்குதலுக்கு மாநகர போலீசு ஆணையாளர் தான் பொறுப்பு என்றும், தான் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்பதாகவும் நீதிமன்றத்தில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் போட்டார்; அதேநாளில் வருமானத்துக்கு மீறிய சொத்துச் சேர்த்து விட்டதாக அந்த அதிகாரி மீது இலஞ்ச ஒழிப்புத்துறை ஒரு வழக்கு பதிவு செய்தது. மந்தையிலிருந்து பிரிந்து போகும் இத்தகைய கருப்பு ஆடுகளைத்தான் இலஞ்ச ஒழிப்புத்துறை குறி வைக்கிறது; இதற்காகத்தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்து அத்துறைக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று ஏன் கருதக் கூடாது.

வழக்கறிஞர்கள் மீதான தமது தாக்குதலை நியாயப்படுத்தி வாதிட்டு வந்த போலீசு, ஆறுமாதங்களில் வழக்கறிஞர்கள் ஈடுபட்ட ''குற்ற'' செயல்களைப் பட்டியல் போட்டது. வழக்கறிஞர்கள் மீதான போலீசு நிலையப் பதிவேடுகளில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி அவர்கள் மீதான தமது தாக்குதலை போலீசு அதிகாரிகள் நியாயப்படுத்திக் கொள்ளும் அதேசமயம், போலீசு அதிகாரிகளின் குற்றச் செயல்கள் பற்றி இலஞ்ச ஒழிப்புத் துறையிடம் உள்ள தகவல்களை மக்கள் அறியக் கூடாதா?

தகவல் அறியும் உரிமைச் சட்டம் இவ்வாறு காயடிக்கப்படுவதற்கு எங்கு சென்று பரிகாரம் காணமுடியும்? உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம் எங்குமே நீதி கிடைக்காது! பெரிய யோக்கியர்களைப் போல காட்டிக் கொள்வதற்காக இந்த மன்றங்களின் நீதிபதிகள் தங்கள் சொத்து

விவரங்களை அறிவிக்கப் போவதாகப் பீற்றிக் கொண்டார்கள். உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியிடம் தமது சொத்து விவரங்களைச் சமர்ப்பித்தார்கள். அந்த விவரங்களைத் தமக்குத் தெரிவிக்கும்படி ஒரு வழக்கறிஞர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுப்போட்டார். அதை ஏற்றுக் கொண்டு டெல்லி உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்ததும் ஆடிப் போய்விட்டது, உச்சநீதி மன்றம். இதன் விளைவாக, உச்சநீதி மன்ற நீதிபதிகளின் சொத்து விவரங்கள் பற்றிய தகவல்களை அறியும் உரிமைக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் அமர்வுப் பிரிவே விசாரிக்கும்படி உச்சநீதி மன்றமே ஒரு உத்தரவு போடும் வினோதம் வேடிக்கை அரங்கேறியுள்ளது.

2005 ஆண்டுதான் இந்த நாட்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வந்தது. அரசு நிர்வாகத்தில் ஐந்தாண்டுகளிலேயே, புரையோடிப் போகும் அளவு முள்ளாக அது தைத்துவிட்டது. இப்போது ஏராளமான விதிவிலக்குகள் போட்டு அந்த உரிமையை முழுக்க முழுக்கக் காட்சிப் பொருளாக்கும் வகையில் அச்சட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வரும் முயற்சியில் மைய அரசு ஈடுபட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி, மராட்டிய மாநிலம் பூனேயில் சத்தீஷ் ரெட்டி என்ற ஆர்வலர் போலீசு அதிகாரிகள், வீடு-வீட்டுமனைத் தொழில் முதலைகளின் குற்றச் செயல்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தார். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடென்று பீற்றிக் கொள்ளும் இந்த நாட்டில் அவருக்குக் கிடைத்த வெகுமதி என்ன தெரியுமா? கூலிப் படையால் கோரமான முறையில் கொல்லப்பட்டார். காந்திய, தன்னார்வத்தொண்டு சேவகர்கள் கண்டனமும் அஞ்சலியும் செலுத்தினார்கள். இப்படிப்பட்ட நெருடல்களைத் தவிர்த்து, தடங்கலின்றி இந்த நாட்டின் ஜனநாயகம் பீடு நடைபோட தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கும் அஞ்சலி செலுத்தும் நாள் வெகு தொலைவில் இல்லை!

● ஆர்.கே.

# மோடி கும்பலைக் காக்கும் சிறப்பு புலனாய்வுக் குழு

**குஜராத் இனப் படுகொலை தொடர்பான சிறப்பு புலனாய்வுக் குழுவின் நடவடிக்கைகள் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.**

குஜராத் மாநிலத்தின் இந்து வெறி பயங்கரவாத முதல்வர் மோடியின் தலைமையில் முஸ்லிம்களுக்கு எதிரான குஜராத் படுகொலைகள் நடத்தப்பட்டு 8 ஆண்டுகள் கழிந்து விட்டன. இந்திய வரலாற்றில் மிகக் கொடூரமாக நிகழ்த்தப்பட்ட இந்த இனப்படுகொலைகள் குறித்த விசாரணை மிகவும் கீழ்த்தரமாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதை, அவற்றை விசாரிக்கும் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் மீதான குற்றச்சாட்டுகளே நிரூபித்துக் காட்டுகின்றன.

இப்படுகொலைகளை விசாரிக்க அமைக்கப்பட்ட ''சிறப்புப் புலனாய்வுக் குழு'' குற்றவாளிகளைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்குப் பதில், இவற்றில் தொடர்புடைய மூத்த அரசியல் தலைவர்கள் மற்றும் உயர் போலீ அதிகாரிகளுக்கு எதிரான முக்கிய ஆதாரங்களைத் திட்டமிட்டு மறைத்து வருகிறது. தேவேந்திரபாய் பதக், தீஸ்தா செதல்வாத் போன்ற சமூக ஆர்வலர்களும் அரசு சாரா நிறுவனங்களும் அரசுத்துறையினர் கலவரக்காரர்களுக்குச் சாதகமாகச் செயல்பட்டது குறித்துத் தெளிவாக விளக்கி உச்ச நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்த பின்னர், சிறப்பு புலனாய்வுக் குழுவிடம் விளக்கம் கேட்டு இப்போது நீதிமன்றம் நோட்டீ அனுப்பியுள்ளது.

போலீசுக்கும், இனப்படுகொலை நடத்திய கும்பலுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்கள், படுகொலைகளின் போது போலீசார் இருந்த இடங்கள், பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் - என சிறப்புப் புலனாய்வுக் குழு சேகரிக்கத் தவறியவற்றை சமூக ஆர்வலர்கள் தமது மனுவில் தொகுத்துத் தந்துள்ளனர். படுகொலைகளில் நேரடியாகத் தொடர்புடையதாக இந்த ஆவணம் சுட்டிக் காட்டும் போலீஸ் அதிகாரிகள், தற்போது குஜராத் அரசில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றனர்.

இந்த இனப்படுகொலையைத் தலைமையேற்று வழிநடத்திய மோடி மீது வழக்குத் தொடரப்பட வேண்டும் என்ற கோரிக்கை உச்சநீதி மன்றத்தால் கூடக் கண்டுகொள்ளப்படவில்லை. சிறப்புப் புலனாய்வுக் குழு, அதிகாரமிக்க குற்றவாளிகளுக்குச் சாதகமாகச் செயல்படுகிறது என்பது அம்பலமாகியிருப்பதால், இப்போது அக்குழு தனது நேர்மையை நிரூபிக்க, விசாரணைக்கு வருமாறு மோடிக்கு நோட்டீ அனுப்பியிருக்

விசாரணை நாடகமாடும் சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவர் ராகவன்.



கிறது. ஆனால் மோடியோ, அக்குழுவின் விசாரணைக்கு செல்லாமல் தவிர்த்து விட்டு, இதர சட்டபூர்வ வழிகளை ஆய்ந்து கொண்டிருக்கிறார்.

*3000 பக்கங்களுக்கு மேற்பட்ட அந்த மனுவிலிருந்து சில முக்கியமான குற்றச் சாட்டுகள்:*

● கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த கலவரம் போல குஜராத் படுகொலைகள் சித்தரிக்கப்படுகின்றன. ஆனால், இது போன்றதொரு படுகொலையை நிகழ்த்த பல ஆண்டுகளாகச் செய்யப்பட்ட தயாரிப்புகள் குறித்து தெகல்கா ஏடு ''ஆபரேசன் கலாங்'' மூலம் வெளிக்கொணர்ந்த செய்திகளையும், படுகொலைகள் நடைபெற்றபோது பணியிலிருந்த போலீ அதிகாரிகளான ஆர்.பி. சிறீகுமார், ராகுல் சர்மா ஆகியோரது வாக்குமூலங்களையும் விசாரணைக் குழுவினர் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டனர்.




இந்து பயங்கரவாதப் படுகொலைகளின் சாட்சியமாக நிற்கும் குல்பர்க் சொசைட்டி கட்டிடம்.

● படுகொலைகளை நேரில் கண்ட சாட்சிகளுக்குப் போதுமான பாதுகாப்புகள் வழங்கப்படவில்லை. சாட்சிகளை மிரட்டக்கூடிய, செல்வாக்கு மிகுந்த குற்றவாளிகள் சுதந்திரமாகச் சுற்றி வருகின்றனர். அவர்களது பிணையை ரத்து செய்யக் கூட புலனாய்வுக் குழுவினர் கோரவில்லை.

● நரோடா பாட்டியா மற்றும் நரோடா காம் ஆகிய இடங்களில் 110-க்கும் அதிகமானோர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். பெண்களும், சிறுமிகளும் வன்புணர்ச்சிக்காளானார்கள். இந்த வழக்குகளில் 129 சாட்சியங்களின் வாக்குமூலங்களை சிறப்பு புலனாய்வுக் குழு பதிவு செய்யவே இல்லை.

● படுகொலைகளின்போது, தாக்குதலுக்குப் பயந்து ஓடிவந்த முஸ்லீம்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட போலீ ஆய்வாளரான கே.கே.மைசூர்வாலா (இப்போது இவர் போலீ கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்) விசாரணைக்கு அழைக்கப்படவில்லை. அவர் மீது குற்றச்சாட்டு பதியப்படவில்லை. இதே விசாரணைக் குழுவால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மாயாபென் கோத்னானிக்கும், மைசூர்வாலாவுக்குமிடையே நடைபெற்ற தொலைபேசி உரையாடலை அடுத்துத்தான் துப்பாக்கிச் சூடுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை நிரூபிக்கப் பல சாட்சிகள் இருந்தும், புலனாய்வுக் குழு அவற்றைக் கண்டு கொள்ளவே இல்லை.

● மைசூர்வாலா, தன்னிடம் பாதுகாப்புக் கோரிவந்த முஸ்லீம்களிடம், ''உங்களைப் பாதுகாக்கக் கூடாது என்பது மேலிடத்து உத்தரவு. முஸ்லீம்களைப் பாதுகாக்கும்படி உத்தரவு இல்லை... இன்றிரவு நீங்கள் எல்லோரும் சாகத்தான் வேண்டும்'' எனப் பச்சையாகக் கூறியிருந்ததை உறுதி செய்யும் நேரடி சாட்சியங்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவில்லை. நரோடா பாட்டியா மற்றும் நரோடா காம் ஆகிய இடங்களில் நடைபெற்றக் கோரக் கொலைகளின் முக்கிய குற்றவாளியான, விஷ்வ இந்து பரிசத் தலைவன் ஜெயதீப் பட்டேலும் மைசூர்வாலாவும், அந்த சமயத்தில் தொலைபேசியில் பலமுறை பேசியிருக்கின்றனர்.

● இதேபோல, சிறப்பு ரிசர்வ் போலீ ப் படையைச் சேர்ந்த அதிகாரியான கே.பி.பரேக், தன்னிடம் அடைக்கலம் கோரி வந்த முஸ்லிம்களிடம், அன்று அவர்களை யாரும் காப்பாற்றப்போவதில்லை என்றும், அவர்களைக் கொல்லச் சொல்லி உயர் அதிகாரிகளிடமிருந்து உத்தரவு வந்துள்ளது என்றும் கூறியதற்கு பல நேரடி சாட்சியங்கள் உள்ள நிலையில், பரேக் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.

● பாபுபாய் பஜ்ரங்கி எனும் இந்துவெறி பயங்கரவாதக் கொலைகாரனின் தலைமையில் ஒரு கும்பல் 95 பேரை வெட்டிக் கொன்றதுடன், கவுசர்பானு என்ற கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து சிசுவையும் கொன்றது. இது குறித்து 15 சாட்சிகள் உள்ள நிலையில், அவன் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருகின்றான். சிறப்புப் புலனாய்வுக் குழு அவனது பிணையை ரத்து செய்யுமாறு கூடக் கோரவில்லை. அவன் வெளிநாடுகளுக்குச் சர்வசாதாரணமாகப் போய்வந்து கொண்டுள்ளான். இதே போல, சுரேஷ் லாங்கடா ரிச்சர்ட் சாரா என்ற இந்துவெறி பயங்கரவாதியின் தலைமையிலான ஒரு கும்பல் முஸ்லீம்களை வன்புணர்ச்சி செய்து, எரித்துக் கொன்றதாக 53 சாட்சியங்கள் கூறியுள்ளன.

சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டிருக்கும் இவனைப் புலனாய்வுக் குழுவினர் இதுவரை விசாரிக்கக் கூட இல்லை.

● இவையெல்லாவற்றையும் விடக் கொடூரம், குல்பர்க் சொசைட்டியில் 70 முஸ்லீம்கள் 11 மணி நேரம் சிறுகச் சிறுக சித்திரவதை செய்யப்பட்டு எரித்தும் வெட்டியும் கொல்லப்பட்ட வழக்குதான். குல்பர்க் சொசைட்டியில் கொல்லப்பட்டவர்களில், காங்கிரஸ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஷான் ஜாப்ரியும் ஒருவராவார். அந்தப் பதினோரு மணி நேரத்தில், அங்கிருந்து போலீசாருக்கு -ற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. ஜாப்ரி மட்டும் 200 முறைக்கும் அதிகமாக போலீசாரைத் தொலைபேசியில் அழைத்துள்ளார். ஆனால், அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. அவருடன் சேர்த்து 70 பேர் அவர் வீட்டிலேயே இந்துவெறியர்களால் கொல்லப்பட்டனர். போலீ கட்டுப்பாட்டு அறையிலும் மூத்த போலீ அதிகாரிகளின் தொலைபேசிகளிலும், அரசு உயரதிகாரிகளின் தொலைபேசிகளிலும் எதிரொலித்த கூக்குரலுக்கு ஏன் யாரும் செவிசாய்க்கவில்லை என்று புலனாய்வுக் குழு விசாரிக்கவேயில்லை.

● அகமதாபாத் நகர போலீ இணை ஆணையர் சிவானந்த் ஜா, கலவரம் நடைபெற்றபோது காவல் துறைக் கட்டுப்பாட்டு அறையின் பொறுப்பாளராக இருந்தார். படுகொலை நடந்தபோது கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தது ஏன் என இவரைத்தான் முதலில் விசாரிக்க வேண்டும். ஆனால், இவர்தான் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் முக்கிய அதிகாரி!

● கோத்ரா வழக்கிலும் சிறப்பு புலனாய்வுக் குழு மேற்கொண்டு எந்த விசாரணையையும் செய்யவில்லை. குஜராத் போலீசார் ஒருதலைபட்சமாக விசாரித்துக் கூறியதை, சிறப்பு புலனாய்வுக் குழு அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டது.

**குஜராத் போலீசார், காவிக் கண் கொண்டு கோத்ரா வழக்கை விசாரித்துக் கூறிய முடிவுகளை, சிறப்பு புலனாய்வுக் குழு அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டது.**

● அகமதாபாத் நகர போலீ ஆணையர் பாண்டே, புலனாய்வுக் குழுவால் எல்லாக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார். கலவரம் நடைபெற்ற போது, தான் கோத்ரா சம்பவத்தில் இறந்தவர் பிணங்களுக்குப் பாதுகாப்பளித்து வந்ததாக இவர் கூறுகிறார். மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த போது, இவர் பிணங்களுக்குப் பாதுகாப்பு கொடுத்ததை புலனாய்வுக் குழுவினரைத் தவிர வேறு யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். புலனாய்வுக் குழு இவரை விடுவித்ததற்குக் காரணம், அந்தக் குழுவின் முக்கிய அதிகாரிகளான கீதா ஜோரி, சிவானந்த் ஜா மற்றும் ஆசிஷ் பாட்டியா ஆகிய குஜராத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அண்மைக்காலம் வரை பாண்டேவுக்கு கீழ் வேலை செய்து வந்தவர்கள் என்பதுதான். மேலும், இவர்கள் குஜராத் அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்தவர்கள் தான்! சோராபுதீன் மோதல் கொலை வழக்கில் உச்சநீதி மன்றத்தால் கண்டிக்கப் பட்டவர்தான் ஜோரி. இத்தகையோரைக் கொண்ட சிறப்புப் புலனாய்வுக் குழுதான் விசாரணை நடத்துகிறது எனும்போது, அது எப்படி குற்றவாளிகளை இனங்காட்டும்?

— இவை அனைத்தும் மீண்டும் நிரூபித்துக் காட்டுவது இதைத்தான்: உச்ச நீதி மன்றத்தின் உத்தரவுப்படி சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை நடத்துவதாகக் காட்டிக் கொண்டாலும், உண்மையில் அங்கு ஒரு நாடகம்தான் நடந்து கொண்டிருக்கிறது. மதச் சார்பின்மை பேம் காங்கிர கூட்டணி ஆட்சியோ, இந்துவெறி பாசிச பயங்கரவாதக் கொடூரங்களுக்கு சாமரம் வீசிக் கொண்டிருக்கிறது.

● தனபால்

கைது செய்யப்பட்ட இந்துவெறி பயங்கரவாத முன்னாள் அமைச்சர் மாயாபென் கோத்னானி.



# கொட்டமடிக்கும் ஆதிக்க சாதி வெறியன்! உடந்தையாக நிற்கும் அதிகார வர்க்கம்!

**தூ**த்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஒன்றியத்தின் பெருந்தலைவர் பதவி, பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்ற அரசியல் பிரதிநிதித்துவ அடிப்படையில் தலித் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டது. ப வந்தனை அருகிலுள்ள செவல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த எ.பெருமாள் என்ற தலித் பெண் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், பெருந்தலைவருக்கு ஒதுக்கப்பட்ட அர வாகனத்தைப் பயன்படுத்துவது, தீர்மானங்கள் -ஒப்பந்தங்களை தன்னிச்சையாக முடிவு செய்து நிறைவேற்றுவது என துணைப் பெருந்தலைவராக இருக்கும் ஆதிக்க சாதி வெறியரான மாணிக்கராஜா என்பவர்தான் உண்மையில் பெருந்தலைவராகச் செயல்படுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, கயத்தாறு ஒன்றியத்தில் நடைபெறும் அர விழா அழைப்பிதழ்கள், அர கல்வெட்டுகள், தனியார் விழா அழைப்பிதழ்கள் என அனைத்திலும் மாணிக்கராஜா பெயரே பெருந்தலைவராகப் போடப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர் உட்பட அனைத்து அதிகாரிகளும் இச்சட்ட விரோதத் தீண்டாமைக்கு உடந்தையாக நிற்கின்றனர்.

ஏற்கெனவே இருமுறை கயத்தாறு ஒன்றியப் பெருந்தலைவராக இருந்துள்ள மாணிக்கராஜா, இம்முறை தலித் பெண்ணுக்கு இப்பதவி ஒதுக்கீடு செய்யப்பட்டதால், தனக்கு வி வாசமாக உள்ள எ.பெருமாளைப் பெருந்தலைவராக்கியுள்ளார். சாதி ஆதிக்க வெறியோடு, அர பதவியையும் அர சன்மானங்களையும் விழுங்கி ஏப்பம் விட்டுவரும் மாணிக்கராஜா, கடந்த மூன்றாண்டுகளாக இச்சட்டவிரோதத் தீண்டாமையை நிலைநாட்டி கொட்டமடித்து வருகிறார். கடம்பூர் இளைய ஜமீன் எனக் கூறிக் கொள்ளும் இவரும் இவரது குடும்பத்தினரும் தாழ்த்தப்பட்டோர் மீது மட்டுமின்றி அனைத்து தரப்பு மக்கள் மீதும் ஆதிக்கம் செய்து வருவதோடு, நிலமோசடி, கட்டப்பஞ்சாயத்து, ஊழல், மணல் கொள்ளை எனப் பல்வேறு சட்ட விரோத - சமூக விரோத நடவடிக்கைகளிலும் இறங்கி கோடிக் கணக்கில் ருட்டியுள்ளனர்.

இதே ஒன்றியத்தைச் சேர்ந்த இராமர் என்பவரின் முன்முயற்சியால், மாணிக்கராஜாவின் ஆதிக்கமும் சட்டவிரோத நடவடிக்கைகளும் அம்பலப்படுத்தப்பட்டு, அவரை ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட பல்வேறு அமைப்புகள் - கட்சிகளின் சாதி ஆதிக்க எதிர்ப்பு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. மாணிக்கராஜாவின் சாதி ஆதிக்கத் திமிருக்கும் தீண்டாமைக்கும் எதிராகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட இக்கூட்டமைப்பு, கடந்த 12.12.09 அன்று -ற்றுக் கணக்கான மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

மாணிக்கராஜாவின்
அதிகார அத்துமீறலைப் பறைசாற்றும்
அர கல்வெட்டு.




அதன் பிறகு, ஒரு சில நாட்கள் எ.பெருமாளை அர வாகனத்தில் அழைத்துச் செல்லும் நாடகம் நடத்தப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளாக ' தந்திர' தினம் மற்றும் 'குடியர ' தினத்தில் கயத்தாறு ஒன்றிய அலுவகத்தில் மாணிக்கராசாதான் 'தேசிய'க் கொடியேற்றி வருகிறார். இவ்வாண்டு 'குடியர ' தினத்தில் கொடியேற்றப் போவது யார் என்று கேள்வி கேட்டு இக்கூட்டமைப்பின் சார்பில் வரொட்டிப் பிரச்சாரமும் 'குடியர ' நாளில் கண்காணிப்பும் நடந்ததால், தலித் பெண் தலைவரால் கொடியேற்றப்பட்டது.

தனக்கு மாணிக்கராஜா எவ்விதப் பிரச்சினையும் தரவில்லை என்று எ.பெருமாள் கூறுவதால் முடிந்து போகும் பிரச்சினை



ஆதிக்க சாதித் திமிருக்கும் தீண்டாமைக்கும் எதிராக
சாதி ஆதிக்க எதிர்ப்பு கூட்டமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டம்.

அல்ல, இது. மாணிக்கராஜாவின் அதிகார மீறல் என்பது, ஒரு தலித் பெண்ணுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள அரசியல் பிரதிநிதித்துவத்தை மறுத்து, ஒடுக்கப்பட்ட மக்களை அவமதிக்கும் பிரச்சினை. இதற்கு மேலும் மாணிக்கராஜாவை துணைப் பெருந்தலைவர் பதவியில் நீடிக்க அனுமதித்தால், அவரது ஆதிக்கச் சாதிக் கொட்டமும் ரண்டலும் கேள்விமுறையின்றி தொடரும் என்பதால், ''அவரது பதவியைப் பறித்து, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் கைதுசெய்து தண்டிக்கப்பட வேண்டும்; அவருக்குத் துணை நின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் பிரகாஷ் உள்ளிட்ட அதிகாரிகளும் பதவி பறிக்கப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்!'' என்ற கோரிக்கையுடன் துண்டுப் பிர ரம் வெளியிட்டு தொடர் பிரச்சாரத்தை மேற்கொண்ட இக்கூட்டமைப்பினர், கடந்த 12.3.10 அன்று தூத்துக்குடி ராஜாஜி பூங்கா அருகே உழைக்கும் மக்களின் பேராதரவுடன் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம்,
தூத்துக்குடி மாவட்டம்.

# "ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள் பகத்சிங்-ராஜகுரு-சுகதேவ் நினைவை நெஞ்சிலேந்துவோம்!"

## -புரட்சிகர அமைப்புகளின் உறுதியேற்பு!

தோழர்கள் பகத்சிங், ராஜகுரு, கதேவ் ஆகியோரின் 79-வது நினைவு நாளில், அவர்களின் சோசலிசப் புரட்சிக் கனவையும் உழைக்கும் மக்களின் விடுதலை எனும் இலட்சியத்தையும் சாதிக்க உறுதியேற்று, இம்மாவீரர்கள் வெள்ளை ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிடப்பட்ட நாளான மார்ச் 23-ஆம் தேதியன்று, தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் அத்தியாகத் தோழர்களின் நினைவை நெஞ்சிலேந்தி வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தின.


தஞ்சையில்...

தஞ்சையில், பகத்சிங் நினைவாக ''அந்த வீரன் இன்னும் சாகவில்லை'' என்ற எழுச்சிமிகு பாடலோடு, பனகல் கட்டிடம் அருகே ஏகாதிபத்திய-மறுகாலனியாதிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வி.வி.மு; ம.க.இ.க; பு.மா.இ.மு; ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், ''இந்தப் போர் எங்களோடு தொடங்கவும் இல்லை, எங்களோடு முடியப்போவதும் இல்லை'' என்ற பகத்சிங்கின் வரிகளை நினைவுகூர்ந்து, அவர் வழியில் அர்ப்பணிப்புடன் போராட அறைகூவியது.


சென்னையில்...

திருச்சி ம.க.இ.க. கிளை உறுப்பினராகச் செயல்பட்டு கடந்த பிப்ரவரியில் மறைந்த தோழர் கண்ணனின் படத்திறப்பு விழாவுடன், திருச்சி - காந்திபுரத்தில் பகத்சிங் நினைவுநாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கண்ணன் வாழ்ந்த காந்திபுரம் பகுதியில், அவரது போராட்ட வாழ்வை மக்களுக்கு உணர்த்தும் வகையிலும், இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழலில் பகத்சிங் வழியில் போராட அறைகூவியும் முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றிய இக் கூட்டத்தின் இறுதியில், பறைமுழங்க ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சி போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பியது.

சென்னையில், பு.மா.இ.மு. சார்பில் ஓவியக் கண்காட்சியும் ம.க.இ.க. தோழர் துரை.சண்முகம் சிறப்புரையாற்றிய கருத்தரங்கமும் நடைபெற்றன. பு.மா.இ.மு.வைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களான ரகு, கோகிலா ஆகியோர் தீட்டியிருந்த கோட்டுச் சித்திரங்களில், அன்று பாராளுமன்றத்தில் பகத்சிங் எறிந்த கையெறிக் குண்டின் வெடிமருந்து நெடி வீசியது.

வேலூர், ஆம்பூரில் தியாகத் தோழர் பகத்சிங் பற்றிய புரட்சிகரப் பாடல்களுடன் ம.க.இ.க. சார்பில் அறைக்கூட்டங்கள் நடைபெற்றன.

திரளாக இளைஞர்களும் உழைக்கும் மக்களும் பங்கேற்ற இந்நிகழ்ச்சிகள், பகத்சிங் வழியில் மறுகாலனியாக்கத்துக்கு வீழ்த்த நாட்டுப் பற்றுடன் மீண்டும் ஒரு விடுதலைப் போரைத் தொடுக்க அறைகூவுவதாக அமைந்தன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.

# "ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!"

## -வி.வி.மு.வின் இடைத்தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம்

பா.ம.க. நிறுவனரான ராமதா , ''சாராயக் கடைகளை ஏலம் விடுவது போல் இனி தொகுதிகளையும் ஏலம் விட்டுவிடலாம். அந்த அளவுக்கு ஆளும் கட்சி இங்கே வாக்காளர்களை விலை பே கிறது'' என்று புலம்பும் அளவுக்கு ஓட்டுச் சீட்டு ஜனநாயகம் சந்தி சிரித்தது. சீமைச் சாராயம்,வேட்டி, துண்டு, புடவை, வளையல், மூக்குத்தி, புத்தகப் பை, ஒரு ஓட்டுக்கு ஆயிரம் ரூபாய் என்றெல்லாம் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் கோடிகளை வாரியிறைத்து வாக்காளர்களைக் குளிப்பாட்டின. பென்னா




கரம் இடைத் தேர்தல் திருவிழாவை ஓட்டுப் பொறுக்கிகள் கோலாகலமாக நடத்திக் கொண்டிருந்த சூழலில், இப்போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணித்து, புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுமாறு மக்களை அறைகூவி, இப்பகுதியில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணி வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது.

அதன் தொடர்ச்சியாக,மார்ச் 7-ஆம் தேதியன்று பொதுக்கூட்டம்

# தொழிற்சங்கத்தை உடைக்க முதலாளி-போலீசு கூட்டுச் சதி!

## போராடும் தொழிலாளர்கள் மீது பொய்வழக்கு!

# கோவையில் தலைவிரித்தாடும் முதலாளித்துவப் பயங்கரவாதம்!

கோவை - தடாகம் சாலையிலுள்ள சிறீ ரெங்கனாதர் இன்டஸ்ட்ரீஸ் எனும் நிறுவனத்தில் ஏறத்தாழ ஈராண்டுகளாக பு.ஜ.தொ.மு. சங்கம் செயல்பட்டு வருகிறது. சங்கம் தொடங்கப்பட்டதிலிருந்து ஆலை முதலாளியின் பழிவாங்கலும் அடக்குமுறையும் தீவிரமாகத் தொடங்கியது. சாதி உணர்வு என்ற துருப்புச் சீட்டை ஏவியும், 15.2.10 -இல் எவ்வித முன்னறிவிப்புமின்றி சட்டவிரோதக் கதவடைப்பு செய்தும் சங்கத்தை முடக்க முதலாளி வி.நாராயணசாமி மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. அதன் பிறகு, முதன்மை நுழைவாயிலைப் பூட்டிவிட்டு பின்வாயில் வழியாகத்தான் அனைத்து தொழிலாளர்களும் உணவருந்தச் செல்ல வேண்டும் என்று தன்னிச்சையாக அறிவித்து, இதனால் ஏற்படும் தாமதத்தை வைத்து தொழிலாளர்களை நிர்வாகம் பழிவாங்கியது. தொழிலாளர்களை ஆபாசமாக ஏவுவது, கேவலமாக நடத்துவது, அற்ப விவகாரங்களை வைத்து பழிவாங்குவது என்று ஆலை முதலாளி கேள்விமுறையின்றி சட்டவிரோதமாக கொட்டமடித்து வருகிறார். அதற்கு விசுவாசமாகப் போலீ வாலாட்டுகிறது.


சாலை மறியல் செய்ததாக குற்றஞ்சாட்டி கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள்.

கடந்த மார்ச் 17-ஆம் தேதியன்று, குடிபோதையில் வந்த போலீ, தாகர் என்ற சங்க நிர்வாகியைப் பிடித்து அடித்து இழுத்துச் சென்றது. இதற்கு ஆள்காட்டியாக ஆலை முதலாளியின் அடியாள் செயல்பட்டான். சங்க நிர்வாகிகளும் தொழிலாளர்களும் இதற்கெதிராக போலீ நிலையத்தில் திரண்டு வந்து முறையிட்டபோது, அவர்களில் 13 பேர் போலீசாரைத் தாக்கியதாக பொய்வழக்கு சோடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். போலீ க்காரனும் அடியாளும் மாவுக்கட்டு போட்டுக் கொண்டு மருத்துவமனையில் படுத்துக் கொண்டனர். சங்க நிர்வாகிகளுக்கு என்ன நேர்ந்தது என்று அறிய, பின்னிரவில் ஷிப்ட் முடிந்து போலீ நிலையம் முன்பாக, போக்குவரத்து இல்லாத இடத்தில் திரண்ட தொழிலாளர்கள் 300 பேரை, சாலை மறியல் செய்ததாகப் பொய்வழக்குப் போட்டு கைது செய்தது, துடியலூர் போலீ . இத்தொழிலாளர்களைச் சிறையிலடைத்தது நீதிமன்றம்.

போர்க்குணமிக்க பு.ஜ.தொ.மு. கூடாது என்பதற்காகவே சங்கத்தை முடக்கவும், தொழிலாளர்களைப் பழிவாங்கவும் திட்டமிட்டு போலீ ம் முதலாளியும் நீதித்துறையும் கூட்டுச் சேர்ந்து இந்தச் சதியை நடத்தியுள்ளன. போலீ கொடுத்த பொய்ச் செய்தியை முதலாளித்துவ நாளேடுகள் வாந்தியெடுத்தன. சங்கத்தை விட்டு வெளியேறிவிடு, இல்லையேல் வேலை பறிக்கப்படும், இது தீவிரவாத சங்கம் என்று மிரட்டி முதலாளியின் அடியாட்கள் தொழிலாளர் குடும்பத்தாரிடம் பயபீதியூட்டி வருகின்றனர். நாடெங்கும் தொடரும் முதலாளித்துவ பயங்கரவாதத்தின் வகைமாதிரிக்கு ஒரு உதாரணம் தான், இந்த எஸ்.ஆர்.ஐ. நிறுவனம்.

ஆலைமுதலாளி-போலீசின் கூட்டுச் சதிகளுக்கு எதிராகவும் தொடரும் முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராகவும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டுள்ள தொழிலாளர்கள், இதர ஆலைத் தொழிலாளர்களுடன் இணைந்து பு.ஜ.தொ.மு. தலைமையில் உறுதியுடன் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

- பு.ஜ.செய்தியாளர்கள்.

---

நடத்த, கடந்த பிப்ரவரி இறுதியில் அனுமதி கோரி விண்ணப்பித்த போதிலும், அதிகார வர்க்கமும் போலீ ம் அனுமதி தர மறுத்து 'ஜனநாயகக் கடமை'யாற்றின. வாக்குச்சாவடியில் யாருக்கும் ஓட்டுப் போடவில்லை என்று பதிவு செய்வதற்கு சட்டபூர்வ உரிமை அளிக்கப்பட்டுள்ள நிலையில், யாருக்கும் ஓட்டுப் போடவேண்டாம் என்று பிரச்சாரம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில், வி.வி.மு.வின் பென்னாகரம் வட்டக்குழு உறுப்பினரான தோழர் கோபிநாத் மனு தாக்கல் செய்ததன் அடிப்படையில், மார்ச் 23-ஆம் தேதியன்று பொதுக்கூட்டம்- கலைநிகழ்ச்சி நடத்த அனுமதியளித்து உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது.



அழுகிநாறும் இப்பணநாயகத் தேர்தலை அம்பலப்படுத்தியும், இன்றைய மறுகாலனியத் தாக்குதலை அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ஆதரித்து நிற்பதை திரைகிழித்துக் காட்டியும், வாக்குச் சீட்டைப் புறக்கணித்து புரட்சிப் போராட்டங்களுக்கு அணிதிரளுமாறு அறைகூவியும், ஏகாபத்திய எதிர்ப்புப் போராளிகளின் நினைவு நாளான மார்ச் 23-ஆம் தேதியன்று பென்னாகரத்தில் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது. பென்னாகரம் வி.வி.மு. வட்டக்குழு உறுப்பினர் தோழர் கோபிநாத் தலைமையில் நடந்த இப்பொதுக்கூட்டத்தில், தோழர் பழனியம்மாள், ம.க.இ.க. தோழர் காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்ற முழக்கமே பாடலாக ஒலிக்க, போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பிய ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, தேர்தல் பாதையைப் புறக்கணித்து நக்சல்பாரி பாதையில் அணிவகுக்க அறைகூவியது. ஓட்டுப் பொறுக்கி பிழைப்புவாதிகளின் ஆரவாரத்துக்கு நடுவே நடந்த இப்பிரச்சாரம், உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

-பு.ஜ.செய்தியாளர்.

# காவி இருளில் சிக்கித் தவிக்கும் கடலோரக் கர்நாடகா!

## முசுலீம்களை ஒதுக்கி வைத்துத் தனிமைப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ்.இன் சதிகளுக்கு அரசும் உடந்தை.

கர்நாடக மாநிலக் கடலோர மாவட்டப் பகுதியைச் சேர்ந்த வனிதா என்ற இளம் பெண்ணுக்கு ஒரு நல்ல வேலை கிடைப்பதற்கு அவரது மு லீம் தோழியின் குடும்பம் உதவி செய்தது. இந்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதற்காகத் தனது தோழியின் வீட்டுக்குச் சென்ற வனிதாவை, பஜ்ரங் தள் என்ற சங்கப் பரிவார் அமைப்பைச் சேர்ந்த இந்து மதவெறிக் குண்டர்கள் வழிமறித்துத் தாக்கினர். இந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத வனிதா தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார். இச்சம்பவம் நடந்து முடிந்து மூன்றாண்டுகள் ஓடிவிட்ட போதிலும், வனிதாவைத் தாக்கிய, அவரைத் தற்கொலைக்குத் தூண்டிவிட்ட ஆர்.எஸ்.எஸ். குண்டர்களுள் ஒருவர் மீதுகூட இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பஜ்ரங் தள் விதித்துள்ள சமூகக் கட்டுப்பாட்டின்படி, ‘இந்து’வான வனிதா மு லீம் குடும்பத்தோடு பழகியதும், அவர்கள் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கப் போனதும் மன்னிக்க முடியாத குற்றம். அண்டை அயலாரோடு பழகுவதும், அவர்கள் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதும் மனிதப் பண்பாடு என நாகரீகச் சமூகம் கருதலாம். ஆனால், இப்படிபட்ட பண்பாடுமிக்க செயல்கள் பலவற்றைக் குற்றமாக வரையறுத்துள்ளன, சங்கப் பரிவார அமைப்புகள்.

கர்நாடகாவின் கடலோர மாவட்டங்களான தக்ஷின் கன்னடா மற்றும் உடுப்பிப் பகுதிகளில் இந்து மதவெறி அமைப்புகளின் செயல்பாடுகள் எந்தளவிற்குப் பயங்கரமாக வளர்ந்துள்ளன என்பதற்கு வனிதாவின் தற்கொலை ஒரு சிறு எடுத்துக்காட்டு. அக்கடலோர மாவட்டங்களில் ஊருக்கு ஊர் பல்வேறு பெயர்களில் செயல்பட்டு வரும் இந்து மதவெறி அமைப்புகள் இந்து கலாச்சாரத்தைப் பாதுகாப்பது என்ற போர்வையில், மு லீம் மக்கள் மீது நடத்திவரும் தாக்குதல்களும்; இந்து-மு லீம்களுக்களுக்கிடையே உறவு எப்படி இருக்க வேண்டும் எனக் கட்டளையிடுவதும், அக்கட்டளையை மீறுபவர்களைத் தாக்குவதும், அவமானப்படுத்துவதும்; தமது இப்பெரியண்ணன்தனத்திற்கு அரசு இயந்திரத்தை, குறிப்பாக போலீசைப் பயன்படுத்திக் கொள்வதும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றன.

இந்து மதவெறிக் கும்பல் திணித்துவரும் சமூகக் கட்டுப்பாடுகளால், எழில் நிறைந்த அப்பகுதி மக்களின் அன்றாட வாழ்வில் பயம் தாண்டவமாடுவதாகக் குறிப்பிடுகிறார், முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் சமூக ஆர்வலருமான ஹர்ஷ் மந்தர். கர்நாடகாவின் கடலோர மாவட்டங்களில் வாழும் மு லீம் மக்கள் மீது சட்ட விரோதமான முறையில் சமூகப் புறக்கணிப்பை இந்து மதவெறி அமைப்புகள் திணித்து வருவதாகக் குடியுரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம் குற்றஞ் சாட்டியுள்ளது. மு லீம் மக்கள் மீதும், அவர்கள் வழிபாட்டுத் தலங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்துவது ஒருபுறமிருக்க, இந்து - மு லீம் மக்களிடையே  சமூகமான சமூக உறவுகள் நிலவுவதைத் தடை செய்வதன் மூலமும், அவர்கள் கல்வி



இந்து மதவெறிக் கும்பல் மங்களூரில் உள்ள மிலகிரேஸ் தேவாலயத்தின் மீது நடத்திய தாக்குதலில் அடித்து நொறுக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சிலை.

- வேலைவாய்ப்பு உரிமைகளைப் பெற முடியாமல் தடுப்பதன் மூலமும் இச்சமூகப் புறக்கணிப்பு திணிக்கப்படுகிறது.

மு லீம் மக்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காகவே, உணவு விடுதிகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் 'இந்து' உளவாளிகள் உருவாக்கப்பட்டுள்ளனர். பேருந்தில் நடத்துனர்கள், திரையரங்குகளில் டிக்கெட் கிழிப்பவர்கள், உணவு விடுதிகளில் சப்ளையர்கள் என இந்த உளவாளிகள் எங்கும் நிறைந்துள்ளனர். இந்த உளவாளிகளின் வேலையே, இந்து-மு லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள் கூடிப் பழகுவதைக் கண்காணித்து ஆர்.எஸ்.எஸ். குண்டர்களுக்குப் போட்டுக் கொடுப்பதுதான். அம்மதங்களைச் சேர்ந்த எதிர் பாலினர் பழகுவதை மட்டுமல்ல; அம்மதங்களைச் சேர்ந்த ஆண்களோ, பெண்களோ சேர்ந்து திரைப்படத்திற்குச் சென்றாலோ, உணவு விடுதிக்கு வந்தாலோ, பேருந்தில் பயணம் செய்தாலோ உளவாளிகளின் கைபேசிக்கு வேலை வந்துவிடும்.

● மங்களூரில் உள்ள சிறீமாதா கல்விக் குழுமத்தைச் சேர்ந்த கல்லூரி, தமது மாணவர்களின் கல்விச் ற்றுலாவிற்கு ஏற்பாடு செய்தது. இச் ற்றுலாவில் மு லீம் மாணவர்களோடு, இந்து மாணவிகளும் ஒன்றாகப் பயணம் செய்வதை உளவாளிகளின் மூலம் அறிந்து கொண்ட பஜ்ரங் தள் குண்டர்கள் இச் ற்றுலாவை அனுமதிக்க முடியாது என மிரட்டியதால், கல்லூரி நிர்வாகம் அக்கல்விச் ற்றுலாவை ரத்து செய்வதாக அறிவித்தது.

● யு.பி.எம்.எஸ். மேனிலைப்பள்ளி நிர்வாகம், தமது பள்ளியின் ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக, இயே கிறிஸ்து பற்றிய நாடகமொன்றைத் தயாரித்து நடத்தவிருந்தது. இந்நாடகத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த மாணவர்கள் நடிக்க இருந்ததால், அதற்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பியதையடுத்து, ஆண்டு விழா நடத்துவதையே ரத்து செய்தது, பள்ளி நிர்வாகம்.

● உடுப்பியைச் சேர்ந்த இந்து மாணவன் ஒருவன் பொழுதுபோக்கிற்காகத் தனது மு லீம் மற்றும் கிறிஸ்தவ நண்பர்களோடு பனம்பூர் கடற்கரைக்குச் சென்றான். இதனை மோப்பம் பிடித்துவிட்ட பஜ்ரங் தள் குண்டர்கள், போலீசாரோடு கடற்கரைக்குப் போய் அம்மாணவர்களை மிரட்டித் துரத்தியடித்தனர்.

கடந்த ஓராண்டில் மட்டும் இவை போன்று 45 தாக்குதல் சம்பவங்கள் நடந்திருப்பதாக கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த பி.யு.சி.எல். அமைப்பு அம்பலப்படுத்தியிருக்கிறது. இக்கண்காணிப்பின் காரணமாக இந்து - மு லீம் மதத்தைச் சேர்ந்தோர் சேர்ந்து தேநீர் அருந்தப் போவது தொடங்கி, இந்துக்கள் குடும்பத்தோடு ரம்ஜான் விருந்துக்குச் செல்வது வரையிலான சமூகப் பிணைப்புகள் அனைத்தும் சிறுகச் சிறுகக் குறைந்து வருகின்றன; அல்லது, யாராவது பார்த்துப் போட்டுக் கொடுத்துவிடுவார்களோ என்ற அச்சத்தோடுதான் நடந்து வருகின்றன. இரு மதத்தினரும் சேர்ந்து தேநீர் குடிப்பதே குற்றமெனும்பொழுது, அம்மதங்களைச் சேர்ந்த எதிர் பாலினர் காதலிப்பதும், திருமணம் செய்து கொள்ள முயலுவதும் மு லீம் பயங்கரவாதிகளின் சதியாகச் சித்தரிக்கப்பட்டுத் தடுக்கப்படுகின்றன. ''இந்துப் பண்பாட்டுக்கு ஒவ்வாத இது போன்ற 200-க்கும் மேற்பட்ட காதல் ஜோடிகளைக் கையும் களவுமாகப் பிடித்துப் பிரித்து வைத்துவிட்டதாக'' மார்தட்டிக் கொள்கிறான், பஜ்ரங் தள்ளின் மாவட்டத் தலைவன் தர்சன் மூதாபித்ரி.

இந்து மதவெறிக் கும்பல் திணித்து வரும் இத்''தாலிபான்மயமாக்கத்திற்கு'' உள்ளூர் பத்திரிகைகளும், போலீ ம் கைத்தடிகளாகச் செயல்படுகின்றன. இந்து மதவெறிக் குண்டர்கள் சட்டவிரோதமான முறையில் நடத்திவரும் இத்தாக்குதல்களை, ''அவர்கள் இவ்விவகாரங்களில் தலையிடுவதற்கு உரிமை இருக்கிறது'' என்றும், '' அவர்கள் சட்டபூர்வமாகவே நடந்து கொள்வதாகவும்'', ''அவர்கள் சட்டத்தை மதித்து நடக்கும் குடிமகன்கள்'' என்றெல்லாம் கூறி கர்நாடகா போலீ உயர் அதிகாரிகளே நியாயப்படுத்தி வருகின்றனர்.

அர இயந்திரத்தின் உதவியோடு திணிக்கப்படும் இச்சமூகப் புறக்கணிப்பின் காரணமாக, தக்ஷின் கன்னடா மற்றும் உடுப்பி மாவட்டங்களில் உள்ள கல்வி நிலையங்களில் இந்து மாணவர்கள் தனியாகவும், மு லீம் மாணவர்கள் தனியாகவும் அமரும் புதிய தீண்டாமை உருவாகி வருகிறது. குறிப்பாக, அர கல்லூரிகளில் சேரும் மு லீம் மாணவர்களைத் தீவிரவாதிகள் எனக் கிண்டல் செய்து அவமானப்படுத்துவதன் மூலமும், மு லீம் மாணவிகள் பர்கா அணிவதைத் தடை செய்வதன் மூலமும் மு லீம்கள் அர கல்லூரிகளில் சேருவதை மறைமுகமாகத் தடுக்க முயற்சி செய்கிறது, ஏ.பி.வி.பி. என்ற ஆர்.எஸ்.எஸ். சார்பு மாணவர் அமைப்பு. அம்மாவட்டங்களில் மீன்பிடித் தொழிலிலும் ப மாட்டுத் தோல் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ள மு லீம் வியாபாரிகள் இந்து மதவெறிக் குண்டர்களுக்கும் போலீ க்கும் கையூட்டுக் கொடுத்தால்தான் தொழில் செய்யமுடியும் என்ற நிலை உருவாகி வருகிறது.

**இந்து–மு லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள்
கூடிப் பழகுவதைக் கண்காணித்து,
ஆர்.எஸ்.எஸ். குண்டர்களுக்குப்
போட்டுக் கொடுப்பதுதான்
பொது இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள
'இந்து' உளவாளிகளின் வேலை.**



மு லீம் இளைஞர்கள், 'இந்து'ப் பெண்களைக் கடத்திப் போய் திருமணம் செய்வதாக அவதூறு பரப்பி, அத்தகைய திருமணங்களைத் தடுக்கக் கோரி மங்களூரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் இந்துமதவெறிக் கும்பல்.

இதுவொருபுறமிருக்க, இந்து வழக்குரைஞர்கள் மு லீம்களுக்காக வாதாடினால், பத்திரிகையாளர்கள் இந்து மதவெறிக் குண்டர்களின் தாக்குதல்களை அம்பலப் படுத்தி எழுதினால், அவர்கள் மிரட்டப்படுவதும், தாக் கப்படுவதும் வாடிக்கையாகிவிட்டது. மேலும், கிறிஸ் தவ மத பீடங்கள், தங்கள் மதத்தைச் சேர்ந்த இளைஞர் கள் பிற மதத்து இளைஞர்களோடு, குறிப்பாக மு லீம் களோடு பழகுவதைக் கண்காணிக்க சமூக செயல் மன்றம் என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறது. இவற் றின் எதிர்விளைவாக மு லீம்களும் தங்கள் மதத்தைச் சேர்ந்த இளைஞர்களைக் கண்காணிக்க கே.எஃப்.டி. என்ற அமைப்பை உருவாக் கியுள்ளனர். பல்லாண்டுகளாக மத நல்லி ணக்கம் நிலவி வந்ததாகக் கூறப்படும் கர்நாடகாவின் கடலோர மாவட்டங் களில், இன்று மதவெறியும், மத அடிப் படைவாதமும் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக் கொண்டு மக்களைப் பிளவுபடுத்தி மோதவிடுகின்றன.

குஜராத்தில் மு லீம்களைத் தனிமைப்படுத்துவதற்கும், அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை முடக்கு வதற்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு ஒரு மிகப்பெரும் இனப் படுகொலையை நடத்த வேண்டியிருந்தது. ஆனால் கர்நாட காவை, அத்தகைய கலவரங்கள் ஏதுமின் றியே, தங்களின் பரிசோதனைச் சாலை யாக மாற்றி வருகின்றன சங்கப் பரிவார அமைப்புகள். கர்நாடகாவில் இந்த இந்துத்துவப் பரிசோதனைகளுக்கு எதிரான எதிர்ப்புகள் வெகுஜன இயக்கமாக, போராட் டமாக இல்லாமல், குட்டி முதலாளித்துவ ஜனநாயக சக்திகள் நடத்தும் அறைக்கூட்டங்களாகவே இருப்ப தால், இந்து மதவெறிக் குண்டர்கள் வைத்ததுதான் சட் டம் என்ற நிலை கடந்த பத்தாண்டுகளுக்குள் அம்மாநி லத்தின் கடலோர மாவட்டங்களில் உருவாகிவிட்டது.

● செல்வம்

# "கொலைகார முதல்வர்-போலீசாரைக் கைது செய்து தண்டனை கொடு!"

## -பு.மா.இ.மு.வின் ஆர்ப்பாட்டம்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கிய அடையாள மாகத் திகழ்ந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இன்று மரணத்தை விளைவிக்கும் முறைகேடுகள் நிறைந்த பல்கொலைக்கழகமாகச் சீரழிந்து நிற்கிறது.

ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த இரண்டாமாண்டு பொறியியல் மாணவர் கௌதம் குமார், கடந்த பிப்ரவரி 28-ஆம் தேதியன்று விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலை யில், பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டார். அங்கு தாமதமா கச் சிகிச்சை அளித்ததைக் கண்டு குமுறிய மாணவர்கள், பின் னர் அவரை சென்னை அப்பல்லோ மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முயற்சித்தனர். ஆனால், வழியிலேயே அம் மாணவர் மரணமடைந்துவிட்டார்.

இது பற்றி முறையிட நள்ளிரவில் திரண்டு வந்த மாண வர்களைச் சந்திக்க மறுத்த பல்கலைக்கழக முதல்வர், போலீசை வரவழைத்து விரட்ட முயற்சித்தார். இதைக் கண்டு ஆத்திரமடைந்த மாணவர்கள் கல்லூரிப் பேருந்தையும் மருத் துவமனையின் முகப்பையும் தாக்கினர். அதைத் தொடர்ந்து நள்ளிரவில் போலீசார் பெரும்படையாகத் திரண்டு வந்து மாணவர்கள் மீது கண்மூடித்தனமாகத் தடியடித் தாக்குதல் நடத்தியதால், தடியடிக்குப் பயந்து தப்பிக்க முயன்ற மித் குமார், முகம்மது சரிஃப்ரஸ் ராஸ் மற்றும் ஆஷிஷ் ரஞ்ஜன் குமார் ஆகிய மூன்று மாணவர்கள், அருகிலுள்ள குளத்தில் இருளில் தவறி விழுந்து மூழ்கி இறந்தனர். இது, தமிழகத் தையும் மாணவர்களையும் கல்வியாளர்களையும் பெரிதும் அதிர வைத்துள்ளது. நிர்வாகத்தின் திமிரும் போலீசின் வெறி யாட்டமும்தான் இக்கொலைகளுக்குக் காரணம்.

இப்படுகொலைகளுக்கு எதிராகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட பு.மா.இ.மு; அதன் தொடர்ச்சியாக, கடந்த மார்ச் 8-ஆம் தேதியன்று சிதம்பரம் காந்தி சிலையருகே ''சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடரும் படுகொ லைகளுக்கு முடிவு கட்டுவோம்!'' என்ற முழக்கத்துடன் கண் டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. விதிமுறைகளை மீறி மாணவர் சேர்க்கை, பல இலட்சக்கணக்கில் கட்டாய நன் கொடை, உணவு விடுதிகள் தனியார்மயம், தரமற்ற கல்வி, ஆசிரியர்-பணியாளர் நியமனங்களில் ஊழல், மருத்துவமனை யின் தரம் தாழ்ந்த நிலை, பல்கலைக்கழகத்தில் நிகழும் தொடர் மரணங்கள்,போலீசின் அடக்குமுறை ஆகியவற்றை இந்த ஆர்ப்பாட்டம் அம்பலப்படுத்திக் காட்டியது. கொலைக் குற்ற வழக்கில் பல்கலைக்கழகத் துணை வேந்தர் மற்றும் முதல்வரைக் கைது செய்து தண்டிக்க வேண்டும்; இப்பல்க லைக்கழகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும்; அதற்காக மாணவர்களும் உழைக்கும் மக்களும் அணிதிரண்டு போராட வேண்டும் என்று முன்னணியாளர்கள் கண்டன உரையாற் றினர். பெற்றோரும் கல்வியாளர்களும் மாணவர்-இளைஞர் களும் தோழமை அமைப்பினரும் பங்கேற்று நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், கொலைகாரத் தனியார் கல்விக் கொள்ளைக் கூடாரத்தின் கோரமுகத்தைத் திரைகிழித்துக் காட்டி, போராட அறைகூவுவதாக அமைந்தது.

— பு.ஜ.செய்தியாளர்கள்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியரையும் துணை முதல்வர் மு.க.ஸ்டாலினையும் முற்றுகையிட்டு தொழிலாளர் குடும்பத்தின் பெண்கள் நடத்திய போராட்டம்.

பேருக்கும் வேலை தர இய லாதென்றும், ஒரு சிலருக்கு மட்டும் வேலை தருவதாகவும் கூறினர். இதை ஏற்க மறுத்து தொழிலாளர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

ஆலை நிர்வாகமோ அடுத்தகட்ட பேச்சுவார்த்தை என நாடகமாடிக் கொண்டே, இரவோடிரவாக ஆலையிலிருந்து எந்திரங்களைக் கடத்திச் செல்ல முயற்சித்தது. நீதிமன்றத்தில் பொய்க்காரணங்களைக் கூறி தொழிலாளர்களைக் கைது செய்து வெளியேற்றும் ஆணையும் பெற்றது. ஆனால், தொழிலாளர்களின் போராட்ட உறுதியால் இச்சதிகள் அனைத்தும் தவிடுபொடியாயின.

இந்நிலையில், அனைத்து தொழிலாளர்களுக்கும் கமாஸ் ஆலையில் வேலை தர வேண்டும், சட்டவிரோதமாகச் செயல்பட்டு தொழிலாளர்களை ஏமாற்றிய ஆலை நிர்வாகிகள் எத்திராஜுலு, பாபு ஆகியோரைக் கைது செய்து தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் தொழிலாளர் குடும்பத்தாரையும் பல்வேறு ஆலைகளைச் சேர்ந்த இப்பகுதிவாழ் தொழிலாளர்களையும் பெருந்திரளாக அணிதிரட்டி 18.3.10 அன்று வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக பு.ஜ.தொ.மு. ஆர்ப்பாட்டம் நடத்தியது.

பு.ஜ.தொ.மு.வின் வழிகாட்டுதலில் 19.3.10 அன்று காலை 8 மணியளவில் துடப்பம், முறம், செருப்புடன் ஆவேசமாகப் புறப்பட்ட கமாஸ் வெக்ட்ரா ஆலைத் தொழிலாளர் குடும்பத்தின் பெண்கள், மூக்கொண்டாப்பள்ளியிலிருந்து முழக்க அட்டைகளை ஏந்திபடி விண்ணதிரும் முழக்கங்களோடு துண்டுப் பிரசுரங்களை வழியெங்கும் விநியோகித்தபடியே ஆலை நிர்வாகி பாபுவின் வீட்டருகே திரண்டு, இம்மோசடிப் பேர்வழியைக் கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்த இந்தக் கயவாளியை, அவனது வீட்டருகிலேயே அம்பலப்படுத்தி நடந்த இந்த திடீர் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு, இப்பகுதியிலுள்ள குடியிருப்புகளிலிருந்து மக்கள் திரண்டு வந்து, ஆவேசமான இந்தப் போராட்டத்தை ஆதரித்ததோடு, இப்படித்தான் போராட வேண்டும் என்று வாழ்த்தினர். தகவலறிந்து ஓடோடி வந்த போலீசு, அவர்களைக் கலைந்து செல்லுமாறு மிரட்டிப் பார்த்து பின்வாங்கியது. ஆலை நிர்வாகி பாபு, கமாஸ் ஆலைத் தொழிலாளர்களிடமிருந்து மட்டுமின்றி, இந்த வட்டாரமெங்கும் நாறிப் போனான். இதனால், 20-ஆம் தேதியன்று மீண்டும் தொழிலாளர் அலுவலர் முன்னிலையில் பேச்சுவார்த்தைக்கு வந்த நிர்வாகிகள், போராட்டத்தைக் கைவிட்டு ஆலையிலுள்ள பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்காவிடில் விளைவுகள் விபரீதமாகும் என்று அடாவடித்தனம் செய்தனர். இதை ஏற்க, மறுத்து தொழிலாளர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இதன் தொடர்ச்சியாக, மார்ச் 22-ஆம் தேதியன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்த துணை முதல்வர் மு.க.ஸ்டாலினையும் மாவட்ட ஆட்சியரையும் முற்றுகையிடும் ஆர்ப்பாட்டத்தில் தொழிலாளர் குடும்பத்தினர் இறங்கினர். விண்ணதிரும் முழக்கங்களுடன் தொழிலாளர் குடும்பப் பெண்கள் அணிதிரண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்திய இந்தத் திடீர் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அரண்டு போன தி.மு.க.குலக்கொழுந்து, வெளியே வந்து தொழிலாளர்களைச் சந்திக்காமல், உள்ளேயே ஒளிந்து கொண்டார். போலீசை ஏவி கைது செய்த போதிலும், பெருந்திரளான தொழிலாளர் குடும்பத்தினரின் போராட்ட உறுதி குலையவில்லை. ''நியாயத்தைக் கேட்டால் எங்களையே கைது செய்வதா? தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம்!'' என்று அவர்கள் ஊடகங்களுக்கு ஆவேசமாகப் பேட்டியளித்தனர்.

கொத்தடிமைத்தனம், நிரந்தரமற்ற வேலை, தொழிலாளர் உரிமைகளும் தொழிற்சங்க உரிமைகளும் பறிப்பு, திடீர் வேலை நீக்கம், பழிவாங்குதல்கள், குண்டர்களை ஏவி தாக்குதல், சட்டவிரோதமாக மோசடி ஆலை நடத்தி ஏய்ப்பது, சேமநலநிதி - மருத்துவ ஈட்டுறுதி முதலானவற்றை மறுத்து ஏய்ப்பது என்பதாக முதலாளித்துவ பயங்கரவாதத்தையும் மறுகாலனியாதிக்கம் என்றால் என்ன என்பதையும் ஓசூர் கமாஸ் வெக்ட்ரா முதலாளிகள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளனர். முதலாளிகளின் கொட்டத்தை எத்தகைய போராட்டங்களின் மூலம் முறியடிக்க வேண்டும், கொட்டமடிக்கும் மோசடி முதலாளிகளுக்குத் துணை நிற்கும் அரசாங்கத்தை எவ்வாறு நிர்ப்பந்திக்க வேண்டும் என்பதை பு.ஜ.தொ.மு. தலைமையிலான தொழிலாளர்களின் போராட்டம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

ஓசூரில் பிழைப்புவாத தொழிற்சங்களின் கையாலாகாத போராட்டங்களால் சோர்ந்து கிடந்த தொழிலாளர் வர்க்கத்தை, பு.ஜ.தொ.மு. தலைமையில் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தாரும் நடத்திவரும் போராட்டங்கள் உலுக்கியுள்ளது. ஓசூர் தொழிலாளர் இயக்க வரலாற்றில் முன்முயற்சியுடனும் முன்னுதாரணமாகவும் நடந்து வரும் இந்தப் போராட்டம், தொழிலாளர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

தகவல்: பு.ஜ.தொ.மு; ஓசூர்.

**PUTHIYA JANANAYAGAM** (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: **42648/85**
Regd. No: **TN/CC(S)Dn/190/09-11** Licenced to Post without pre-payment WPP No: **TN/PMG/CCR/WPP-562/09-11**

# சட்டப்பேரவையின் எழிலும் தொழிலாளர்களின் அவலமும்

தமிழக அரசின் புதிய தலைமைச்செயலகம் மற்றும் சட்டப்பேரவைக் கட்டிடத்தின் திறப்பு விழா முடிந்த இரண்டாவது நாளே, அப்பிரம்மாண்டமான கட்டிடத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கு அவர்களின் உழைப்பைப் 'பாராட்டி' பிரியாணி விருந்து கொடுத்தார், தமிழக முதல்வர் மு.கருணாநிதி. அப்பாவிகளை ''லாக்-அப்''பில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்த பின், போலீசு கிரிமினல்கள் அவர்களுக்குப் பிரியாணி வாங்கிக் கொடுப்பதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு கிடையாது.

தமிழகத்தின் ஜனநாயக மரபை உணர்த்தும் வண்ணம் சட்டப்பேரவைக் கட்டிடம் கட்டப்பட்டிருப்பதாகத் தம்பட்டம் அடித்து வருகிறார், மு.க. ஆனால், அங்கேயே தங்கி வேலை செய்துவரும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கிடைக்காமல் தினந்தோறும் திண்டாடுவது யாருக்குத் தெரியும்? கக்கூஸுக்குப் போவதற்கும், சமைப்பதற்கும், குடிப்பதற்கும் ஒரே தொட்டியில் இருந்துதான் தண்ணீர் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதால், பெரும்பாலான தொழிலாளர்கள் காசு கொடுத்துத் தண்ணீர் வாங்க வேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

''வாங்கும் கூலியில் ஒரு பகுதியைத் தண்ணீருக்கே செலவழிக்க வேண்டும் என்றால், என்னால் எனது குடும்பத்தாருக்கு எப்படி பணம் அனுப்ப முடியும்?'' எனத் தனது சிக்கலை விவரிக்கிறார், ராஜஸ்தானைச் சேர்ந்த நாராயணன் என்ற கூலித் தொழிலாளி. தண்ணீருக்கே இந்தப் பாடு என்றால், அங்கு தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் மற்ற 'வசதிகளை'ப் பற்றி விவரிக்கவும் வேண்டுமோ?



தண்ணீருக்குத் திண்டாட்டம் (இடது); காசு கொடுத்துத் தண்ணீர் வாங்க வேண்டிய இக்கட்டில் தொழிலாளர்கள்.



புதிய சட்டசபை வளாகத்தில், சாரம் சரிந்து விழுந்ததால் காயமடைந்த தொழிலாளி.

இரண்டு மாதங்களுக்கு முன்பு அங்கு 'விபத்து' நடந்து பல தொழிலாளர்கள் படுகாயமடைந்தது குறித்த உண்மைகளைக் கண்டறிய முயன்ற பத்திரிகையாளர்களை, கட்டிடத்திற்குள் வரவிடாமல் தடுத்துத் துரத்தினார், மு.க. மார்ச் 13-க்குள் கட்டிடத்தின் திறப்பு விழாவை நடத்திவிட வேண்டும் என மு.க. துடித்ததால், தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 18 மணி நேரம் கசக்கிப் பிழியப்பட்டனர். குறைவான கூலியில் வேலையை முடிக்க வேண்டும் என்பதற்காகவே, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வட மாநிலங்களில் இருந்து ''ஓட்டி'' வரப்பட்டனர்.

அடிக்கடி சென்று பார்த்து கட்டிடத்தில் பல மாற்றங்களைச் சொல்லி வந்த மு.க., தொழிலாளர்களின் இந்த அவல நிலையை மாற்றச் சொல்லி ஒருமுறைகூட வாயைத் திறந்ததில்லை. சட்டப்பேரவை உறுப்பினர்களாக இருக்கும் போலி கம்யூனிஸ்டுகளும் இந்தக் கொத்தடிமைச் சுரண்டல் குறித்து கண்டு கொள்ளவில்லை.

இக்கட்டிடத்தின் அழகு குறித்தும், பிரம்மாண்டம் குறித்தும் சுயதம்பட்டம் அடித்துக் கொள்ளும் மு.க., முதல்வராக இல்லாமல் மன்னராக இருந்திருந்தால், இக்கட்டிடத்தைக் கட்டி முடித்த தொழிலாளர்களின் கட்டைவிரலைக்கூட வெட்ட உத்தரவிட்டிருப்பார். ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கொத்தடிமை போல நடத்தி எழுப்பப்பட்டுள்ள இக்கட்டிடத்தில் உட்கார்ந்துகொண்டு, தமிழக உழைக்கும் மக்களுக்கு எதிரான திட்டங்களையும், சட்டங்களையும்தான் 'மக்கள் பிரதிநிதிகள்' இயற்றப் போகிறார்கள். எனவே, தமிழக மக்கள் இப்புதிய சட்டப் பேரவையின் அழகு, பிரம்மாண்டம் குறித்துப் பெருமை கொள்ள ஏதுமில்லை!